
372/57

காலிபரிபாலன சிகிச்சாதீபம்

என்கிற

# மாட்டுவாகடம்



உ
பு 2014

அ. குழந்தைவேல் முதலியார்


தெய்வமகன் விலாசம் பிரஸ்
...ண்டவராயப்பிள்ளைவீதி, சென்னை
இதன் விலை ரூபா 2

KZ2
N51
101468

காலி பரிபாலன சிகிச்சாதீபம்

என்கிற

# மாட்டுவாகடம்



பதிப்பாளர்:

அமரம்பேடு. குழந்தைவேல் முதலியார்

தெய்வமகள் விலாசம் பிரஸ்

சென்னை

நெ. 24. தாண்டவராயப்பிள்ளை வீதி.

K2ω:4:6
N51

உ

சிவமயம்

காலி பரிபாலன சிகிச்சாதீபம்

என்கிற

# மாட்டுவாகடம்

இஃது

திருநெல்வேலி

நெல்லையப்பப்பிள்ளை அவர்கள்

இயற்றியதை,

மதுரை த. குப்புசாமி நாயுடு அவர்களால்

பல ஏட்டுப் பிரதிகளைக்கொண்டு

யாவரும் எளிதில் அறிந்துகொள்ளும் பொருட்டு

பிழையறச் சீர்திருத்தப்பட்டது.

பதிப்பாளர்:

ஆரம்பேடு. குழந்தைவேல் முதலியார்

தெய்வமகள் விலாச அச்சுக்கூடம்

சென்னை

பதிப்புரிமை] 1951 [பெற்றது.


101468

# காபிரைட் அறிவிப்பு

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில்:—"மாட்டுவாகடம்" என்னும் இந்நூலை ம-ா-ா-ஸ்ரீ, கோளப்பஞ்சேரி. செல்லப்ப முதலியார் அவர்கள் பேரிலிருந்த ரிஜிஸ்டர் காபிரைட் சுதந்தரத்தை அடியிற் கையொப்பமிட்ட அ. குழந்தைவேல் முதலியாராகிய நான் கிரையத்திற்குப் பெற்றுக்கொண்டு என்னால் அச்சிட்டு வெளிப்படுத்தியிருப்பதால் என்னுடைய உத்திரவின்றி இப்புத்தகத்தை யாதாமொருவர் அச்சிடுவரேல் இந்தியன் காபிரைட் சட்டப்படி தண்டனைக்குட்படுவார்களென்பதை தெரியப்படுத்தி யிருக்கிறேன்.

இப்படிக்கு,

அ. குழந்தைவேல் முதலியார்,
தெய்வமகள் விலாசம் பிரஸ்
24, தாண்டவராயப்பிள்ளை வீதி
சௌகார்பேட்டை போஸ்டு, சென்னை



# முகவுரை

சர்வ ஜகந்நியந்தாவாகிய ஈசனால் சிருஷ்டிக்கப்பட்ட இவ்வுலகத்தில் நாற்கால் உயிர் வருக்கங்களுள் மனிதர்களின் முக்கிய பிரயோசனத்துக்காக உரித்தாவதால் மாட்டுவருக்கம அதி உத்கிருஷ்டம் என்பது சர்வத்திர சம்மதம். அவற்றில் ஆண்வருக்கமாகிய எருதுகள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடங்களுக்குச் செல்பவர்களும், பளுவான சாமான் முதலியவைகளைக் கொண்டுபோய்ச் சேர்ப்பவர்களுமாகிய இவர்கட்கு வண்டி இழுத்தல் முதலிய வேலைகளையும், வேளாண்மைத் தொழிற்கு உழுதல், பரம்படித்தல், போரடித்தல் முதலிய தொழில்களையும் மற்றும் பிரவிர்த்திக்காரருக்குப் பொதிசுமத்தல், இயந்திரஞ் சுற்றுவித்தல் முதலிய பல அலுவல்களையும், எளிதாகவும், சகாயமாகவும், சீக்கிரமாகவும் முடித்துக்கொள்வதற்கு உபயோகப்படுகின்றன. அன்றியும்,

"தொழுதூண் சுவையின் உழுதூணினிது"

"உழுதுண்டுவாழ்வாரே வாழ்வார்மற்றெல்லாந்
தொழுதுண்டு பின்செல்பவர்"

என்று மஹான்கள் வாக்கியத்தில் சொல்லிய வண்ணம் இந்த உலகத்திலுள்ள சமஸ்த தொழிற்கும் காரணமாகவும் சிறந்ததாகவும் இருப்பது உழவுத் தொழில்; அவற்றிற்கு முக்கிய காரணமாகியவை.

வானமழைபொழிந்தாலும்வளம்படுவதெவராலே
ஞானமறையவர்வேள்விநலம்பெறுவதெவராலே
சேனைகொடுபொருமன்னர்செருகளத்திற்செருக்குமதே
யானைவலியெவராலேயிவரொருதின்வலியாலே.



ஊட்டுவார்பிறருளரோவுலகுதனிலுழுபகடு
பூட்டுவார்புகழன்றிப்பிறர்புகழும்புகழாமோ
நாட்டுவார்சயத்துவசநயப்பாரையிவர்க்குநிகர்
காட்டுவார்யார்கொலிந்தக்கடல்சூழ்ந்தவையகத்தே.

பார்பூட்டுந்திசையனைத்தும்பகடுகளும்பரம்பூணு
போர்பூட்டுங்காமனுந்தன் பொருசிலைமேற்சரம்பூட்டான்
கார்பூட்டுங்கொடைத்தடைக்கைக்காவேரிவளநாடர்
ஏர்பூட்டினல்லதுமற்றிரவியுந்தேர்பூட்டானே.

பெண்வருக்கமாகிய பசுக்கள், மெய்க்குறுதி பாலாவது நெய்யாவது என்றபடி, திவ்யாமிர்தமாகிய க்ஷீரத்தைக்கொடுத்து அதனால் சரீரபலம் ஜிக்வாருசி முதலியவைகளைக் கொடுப்பதுமன்றி அக்ஷீர சமோகமான அநேக வஸ்துக்களையுங் கொடுக்கின்றன. அன்றியும் இவ்வெருதுகளும் பசுக்களும் இந்து மதாசாரக் கிரியைகளுக்கு இன்றியமையாத அநேக முக்கிய பொருள்களையுங் கொடுக்கின்றன.

இவ்வாறு முக்கிய பிரயோசன வஸ்துவாயிருக்கிற மாடுகளின் குணகுணம், அவற்றைப் பாதுகாக்கத்தக்க முறை, அவற்றிற்கு வியாதி முதலியவை நேரிட்டால் நிவர்த்திக்கவேண்டிய சிகிச்சை என்னும் இவைகள் மனிதர்கட்குப் பெரும்பாலும் திட்டமாகத் தெரியவேண்டியவையா யிருக்கத் தெரியாதிருக்கிறது தக்கதன்று என்பதை யார்தான் ஒத்துக்கொள்ளாதார்.

ஆனால் இவற்றைப்பற்றிய சாஸ்திரம் இந்துக்களுக்கிருந்தும் யாது காரணத்தினாலோ மற்ற சாஸ்திரங்கள்போல பண்டிதர்களால் அப்பியசிக்கப்படுகிறதில்லை. பாமரர்கள் பெரும்பாலுந் தங்கள் விவேகத்துக்கு எட்டின மட்டும் அப்பியசித்திருக்கிறதுண்டு. அவ்வைத்தியர்களுங் கூடச் சமயத்தில் உதவுவார்களென்பது துர்லபம். அது

## முகவுரை

போலி வைத்தியமாய் இருந்தும் செய்வித்துக்கொள்ள வாய்க்காமையால் ஜனங்களுக்கு விளைகிற வருத்தமும், நஷ்டமும் மிகுதி. இப்படியிருக்க, இக்குறையை நிவர்த்திக்கும் பொருட்டுப் பல விடங்களிலுமிருந்து அவ்வைத்திய சாஸ்திரப் பிரதிகளை வருவித்து ஆராய்ந்தும், நெடுநாளைய அநுபோக முள்ளவரிடம் விசாரித்தும், எனக்கே தெரிந்த முப்பது வருடத்து அநுபவத்தைக்கொண்டும் இந்நூலைக் கோர்த்து "மாட்டுவாகடம்" என்று பெயர் கொடுத்துச் சித்தப்படுத்தினன். இந்நூற்கு 1845-ம் வருடத்தில் அசிஸ்டேன்ட் சர்ஜன் டப்பிளியு. கில்கிரிஸ்டு துரை யவர்கள் ஆங்கிலேய பாஷையில் பிரசித்தஞ் செய்திருக்கிற புத்தகம் கொஞ்சம் சாதகமா யிருந்தது. இது சர்வ ஜனங்களும் எளிதில் வாசித்து உணர்ந்து கருதிய பயனை அடையவேண்டும் என்ற ஒரே நோக்கங்கொண்டு எளிய நடையில் எழுதப்பட்டது. ஆகையால் இதில் எழுத்து, சொல், நடை முதலிய குற்றங்கள் இருப்பினும் அதனைப் பேரறிவாளர்கள் குற்றமாகப் பாவிக்காமல் சமஸ்தமும் குணமாகவே அங்கீகாரம் செய்யும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஆசிரியர்:

தா. நெல்லையப்ப பிள்ளை,

திருநெல்வேலி.

**பதிப்பாளர் விண்ணப்பம்:**

இவ்வரிய வாகடம் வெகு நாட்களுக்கு முன்பே அச்சிடப்பட்டு இருந்தும், இடைக்காலத்தே என் குடும்பத்தே நேர்ந்த 'என் மகன் மகன்' நீக்கத்தால் ஊக்கமுந் தூக்கமுமின்றி வருந்துவதற் கிடனுகிற்று இனி, இக்குடும்பத்தின் ஆக்கத்திற்கும் என் அருமை ஸாஹிபாப வென்னும் அரங்கஸாமி நினைவுக்குமாகவே மீண்டும் அவனருள் வேண்டி இதனைப் பதிப்பித்தேன். A. K. M.

## சிறப்புப் பாயிரம்

### ஜெயந்திமாநகரம் குஞ்சிஜயபாரதிகள் இயற்றிய

நிலைமண்டில ஆசிரியப்பா

சீர்பெறுநெல்லைத்திருநகரத்தி
லேற்பெறமேவுமிணையிலாயோகன்
பாரினைக்காக்கும்பண்புடையாளன்
காரினைக்காக்குங்கனமரபுதித்தான்
நாயகமாகநவின்றகாலிங்க
ராயகோத்திரத்தினண்ணியமணியாம்
ஐந்தருவும்விரலாகியகரத்தாற்
சந்ததஞ்சொர்னந்தருங்கொடைக்கன்னன்
துங்கனுழுத்துக்குமாரசுவாமித்துரை
சங்கமாய்நோற்றதவத்தினிலுதித்த
மைந்தரின்முன்வருமங்களசீலன்
செந்திருநாளுந்திகழ்புயலோலன்
நம்பன்மாமதத்தினூட்டியகமிட்டி
மெம்பர்களுள்ளும்விறல்கெழுவேந்தன்
தந்திரத்தொழில்கள்சாற்றுதற்கரிய
மந்திரமுணர்ந்தவல்லமையாளன
மன்னவரேத்தவருந்தியுள்ளான்
தன்னிகர்தானுந்தருமநன்னெறியான்
சிந்துநீர்முகந்துசெல்பொழிவனபோற்
செந்தமிழ்க்கவிதைதினந்தினஞ்சொரிவான்
இங்கிலாந்தரசரெவருமகிழ
வெங்கணுஞ்செங்கோலியற்றிடுநிருபன்
அரவணைத்துயில்வோனுமெனவந்த
சரவணமுத்துதயாநிதிதனையும்
விப்பிராதியர்புகழ்மேன்மைதங்கியதோர்
சுப்பிரமணியசுகுணபூபனையுங்
காதலினுரியகனிட்டராய்க்கொண்டு
மேதினிதன்னில்விளங்கியமேரு
வல்லுமாமுலையார்மதனெனுமழகன்
நெல்லையப்பேந்திரநிபுணனும்வள்ளல்

பாலியமுதலாய்ப்பழகியவனுபவஞ்
சாலவுந்தெரிந்ததன்மையினாலும்
பற்பலபாஷைப்பண்டிதர்பகர்ந்த
கற்புவாகடங்கள்கற்றதினாலுங்
கையினெல்லியங்கனியெனவிந்த
வையமின் றுணரவாசகநடையாய்
மாட்டிலக்கணமும்வழுவுறுகுற்றமும்
நாட்டியதொழுவாநன்னிலத்தலமும்
நடைகதிமந்தம்நாடிக் குறிப்பிட்
டடைவுடன்பார்க்குமளவினதமைவும்
நித்தியங்கொடுக்கநிகழ்த்துறுதீனியும்
சுத்தநீர்காட்டச்சொல்லியவியல்பும்
நிறைவுடனிதஞ்செயவேண்டியநியமமும்
பரவுநீரிற்குளிப்பாட்டிடுமுறையும்
சிறந்திடுவிசேஷதீவனநிதானமும்
திறந்தருமசாலாச்செய்துதவொழுங்கு
அந்தமில்பிணியும்அப்பிணிதீர்ந்தே
உய்ந்திடவகையாயுரைத்திடுமருந்துங்
குசைநுனியதனிற்கூர்த்தபேரறிவாற்
றிசையெலாம்விளங்கத்திரட்டியேமாட்டு
வாகடமென்றுவழங்கினனிந்நூல்
வாகுடனுலகின்வளம்பெறவாழி.

**திருநெல்வேலி அ. சங்கரநாராயண பிள்ளை குமாரரும்**
இந்நூலதிகாரிக்கு ஜேஷ்டமாதா புத்திரருமான
**ச. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் இயற்றிய**

கட்டளைக்கலித்துறை

பயன்குறியாதுலகோர்க்குபகாரம்பரிந்துசெய
அயன்படைத்தேயருணெல்லையப்பேந்திரனுக்கியவிவ்
வியன்பெறுவாகடநூறனையார்க்கும்விளங்கவைத்தான்
நயன்பொழிவாய்மைநஞ்சுப்பிரமண்யநாதிபனே.

---

# மாட்டுவாகடத்தின் அட்டவணை


| பெயர் | பக்கம் |
|---|---|
| | 13 |
| தெய்வவணக்கம் | 13 |
| மாடுகளின் இலக்ஷணம் | 16 |
| மாடுகளுக்குரிய குற்றங்களும் அடையாளமும் | 24 |
| எருதுப்புரை | 25 |
| மாட்டுக்குதினஞ் செய்யவேண்டியநியமம் | 26 |
| தண்ணீர்குடிக்கச் செய்யத்தன்மை | 27 |
| தீனி | 28 |
| விசேஷதீவனம் | 30 |
| எருதுகளுக்கு போடவேண்டிய தீனியின் அளவு | 31 |
| குளிப்பாட்டல் | 32 |
| வெள்ளைப்பூண்டு மசாலா | 33 |
| இஞ்சி மசாலா. ஆட்டுத்தலை மசாலா | 35 |
| பெரும்பூசினிக்காய் மசாலா | 36 |
| உடும்பு மசாலா, வெள்ளுச்சி மசாலா | 37 |
| ஜீரண மசாலா | 38 |
| உஷ்ணசாந்தி மசாலா | 39 |
| நல்லபாம்பு மசாலா, குமட்டிக்காயுருகாய் | 40 |
| எருதுகளுக்குக்கொடுக்கும் லேகியம் | 42 |
| அலரிவேர்லேகியம், சவாரிலேகியம் நிஜாம்முறை | 43 |
| அதிகலாகிரியானல் முறிப்புவகை | 44 |
| லேப்பு | |
| அப்படிகுளிப்பாட்டின மறுநாள் அல்லது இரண்டாநாள் கொடுக்கும் மசால | 44 |
| | 45 |
| கண்டங்கத்தரிக்காய் லேப்பு | 46 |
| வாய்கழுவுதல் | 48 |
| புல்லுந்தண்ணீரும் ஓதிகொடுக்க சக்கரம் | 48 |
| தண்ணீர் ஓதிக்கொடுக்க மந்திரம் | 49 |
| அடைப்பன்நோய் | 52 |
| முட்டடைப்பன்நோய் | 55 |
| முன்னடைப்பன்நோய் | 58 |
| முனனடைப்பன் பின்னடைப்பன் | 59 |
| பின்னடைப்பன்நோய் | 62 |
| [illegible]தடைப்பன்நோய் | |

# அட்டவணை


| பெயர் | பக்கம் |
|---|---|
| கொட்டடைப்பன்குணம் நெஞ்சடைப்பன்நோய் | 67 |
| உள்ளடைப்பன்நோய் | 70 |
| நொளியடைப்பன்நோய். சங்கடைப்பன்நோய் | 71 |
| சதைமடைப்பன்நோய் | 72 |
| சந்தடைப்பன்நோய் | 78 |
| செருக்கடைப்பன்நோய் | 74 |
| மூக்கடைப்பன்நோய். வரட்டடைப்பன்நோய் | 75 |
| விரட்டடைப்பன்நோய் | 76 |
| சரட்டடைப்பன்நோய். திரட்டடைப்பன்நோய் | 77 |
| காத்தடைப்பன்நோய் | 78 |
| குரட்டடைப்பன்நோய் | 78 |
| தாக்கடைப்பன்நோய் | 79 |
| நாக்கடைப்பன்நோய் | 80 |
| கதவடைப்பன்நோய் | 81 |
| மந்தடைப்பன்நோய் | 83 |
| நீரடைப்பன்நோய் | 88 |
| கல்லடைப்பன்நோய் | 84 |
| ஈளைமூக்கடைப்பன்குணம் | 85 |
| மூக்கடைப்பன்நோய் | 86 |
| தவளைமூக்கடைப்பன்குணம் | 90 |
| மூக்குதண்டடைப்பன் | 90 |
| சகலஅடைப்பனுக்குமருந்து | 91 |
| ஈரல்முட்டியின்நோய் | 92 |
| தடிஈரல்முட்டிநோய் | 96 |
| கிராமுட்டியின்குணம் | 96 |
| திரட்டியீரல்முட்டிநோய் | 97 |
| சுழத்திநோய் | 98 |
| தவளைநோய் | 103 |
| தேளேறுமுடத்தின்நோய் | 106 |
| கறளைநோய் | 107 |
| அங்கிரிநோய் | 109 |
| உலர்த்திநோய் | 110 |
| ஈரலுலர்த்திநோய் | 110 |
| எருஉலர்த்திநோய் | 111 |
| வறட்சிநோய் | 111 |
| பெருநோய் | 112 |




# அட்டவணை


| பெயர் | பக்கம் |
|---|---|
| பெருவெக்கைநோய் | 115 |
| குன்னிநோய் | 116 |
| குரல்முட்டிநோய் | 118 |
| குதல்வளைதாக்கன்நோய் | 119 |
| குடல்நோய் | 119 |
| குடல்வாதநோய் | 120 |
| குடற்பளுவன்நோய் | 121 |
| குடல்முருக்குநோய் | 121 |
| குலைநோய் | 122 |
| குலைப்பன்நோய் | 123 |
| குடைநோயின்குணம் | 123 |
| குட்டநோய் | 124 |
| குழவிகடிநோய் | 125 |
| கொடுநோய் | 125 |
| கொலநோய். புலிநோய் | 126 |
| புலியன்நோய்குணம் | 127 |
| சிறுபுள்ளுநோய் | 129 |
| நம்புரிநோய் | 129 |
| கருங்காலிநோய் | 130 |
| மகாவிருட்டிநோயின்குணம் | 131 |
| விருட்டிநோய் | 131 |
| விருட்டிபெருநோயின்குணம் | 146 |
| பன்றிநோய் | 133 |
| பன்றித்தாக்கன்நோய் | 136 |
| பன்றிகுருக்கைநோய். பன்றிமுட்டிநோய் | 137 |
| கன்குலைநோய் | 1.8 |
| காய்ச்சல்நோய் | 138 |
| அஸ்திசுரத்தின்நோய் | 139 |
| ஈரலைப்பற்றிய காய்ச்சல்நோய் | 141 |
| மந்தத்தைச்சார்ந்த காய்ச்சல்நோய் | 142 |
| சன்னிநோயல்லது காய்ச்சல்நோய் | 143 |
| சன்னிநோய் | 144 |
| மூளையைப்பற்றிய சன்னிநோய் | 147 |
| முகவாத சனனிநோய் | 148 |
| வலிப்பின்நோய் | 149 |
| நாய்புரிநோயின்குணம் | 150 |

| பெயர் | பக்கம் |
|---|---|
| நாய்வலிப்புநோயின்குணம் | 150 |
| நரம்புவலிப்புநோய் | 151 |
| கண்டவலிப்பின்நோய். கொடுவலிப்பின்நோய் | 152 |
| குலைகூனிவலிப்பின்நோய் | 158 |
| திருக்குவலிப்பின்நோய் | 158 |
| குதிரைவலிப்பின்நோய் | 154 |
| ஆனைவலிப்பின்நோய் | 166 |
| சன்னிவலிப்பின்குணம். முசல்வலிப்பின்நோய் | 157 |
| வெதுப்புநோய் | 158 |
| தீராதஎருக்கல் | 161 |
| சீதளவெதுப்புநோய் | 162 |
| சில்வெதுப்புநோய். பெருவெதுப்புநோய் | 162 |
| குடல்வெதுப்புநோய் | 164 |
| ஒழுக்குவெதுப்புநோய் | 164 |
| மூலவெதுப்புநோய் | 164 |
| அழல்வெதுப்புநோய் | 166 |
| இரத்தவெதுப்புநோய் | 168 |
| சுடுவெதுப்புநோய் | 169 |
| சீதவெடுப்புநோய் | 169 |
| பாளிவெதுப்புநோய் | 170 |
| சீதக்கழிச்சல்நோய் | 171 |
| இரத்தக்கழிச்சல்நோய் | 172 |
| கழிச்சல்நோய் | 174 |
| இராணிகழிச்சல்நோய் | 175 |
| தூர்ப்பலவியாதிநோய் | 176 |
| புள்ளிருந்தமாட்டின்குணம் | 178 |


மாட்டுவாகடத்தின் அட்டவணை

முற்றிற்று.

---

உ

கடவுள் துணை

# மாட்டு வாகடம்

## தெய்வ வணக்கம்

சுரிகுழலுங் கருவிழியு மதிமுகமு மொழிற்பிறைபைத்
தோடார் காது
மிருதனமு மபயவர தத்துடனே பளிக்குவட
மேடார் கையு
மரியதுகின் மருங்கசைய வடியேற்குப் பலகலையு
மளித்தென் னாவிற்
பரிபுரமு முரலநட மாடுகின்ற பாரதிதாள்
பணிதல் செய்வாம்.

## * மாடுகளின் இலக்ஷணம்

சவாரி வண்டிகளுக்கு உபயோகமாய் வருகிற காளைமாடுகள் இதன் கீழ்கண்ட லக்ஷணங்களைப் பொருந்தியிருந்தால் உத்தமம்.

நிறம் - மயிலை கருமயிலை சங்குவெள்ளை கருவெள்ளை சந்தனப்புல்லை இருண்டசெவலை இந்த ஆறு நிறங்களும் உத்தமம்.

சரீரம் - நீண்டதாகவும் குதிரைச் சரீரம்போலத் திரட்சியாயு மிருக்கவேண்டும். முன் பின் உயரம் சமமாயிருக்கவேண்டும்.

எலும்புகள் - பருமனாகயிருக்கவேண்டும்.

ரோமங்கள் - அழுத்தமாயிருக்கவேண்டும்.

தலை - சிறியதாயிருக்கவேண்டும்.

முசம் - நீண்டதாகவுஞ் சதைஇல்லாமலும் இருக்கவேண்டும்.

கொம்புகள்-பொடியாகவும் கறுப்புநிறமாகவுமிருக்கவேண்டும்.

கண்கள் - பெரியதாயிருக்கவேண்டும்.

காதுகள் - சிறியதாயிருக்கவேண்டும்.

நாடி - இரட்டைநாடி அல்லது ஒதுக்கு நாடியாயிருக்கவேண்டும்.

கழுத்து - இரட்டைக்கழுத்தாயிருக்கவேண்டும்.

நாரை - தொங்காமல் ஒட்டியிருக்கவேண்டும்.

கடைவயிறு - கைச்கு ஒரு ஒட்டைநீளத்துக் கதிகப்படாமலிருக்கவேண்டும்.

குறுக்கு - இரட்டைக்குறுக்காயிருக்கவேண்டும்.

தொப்பூழ் - ஒட்டியிருக்கவேண்டும்.

பிட்டி - விரிவாயிருக்கவேண்டும்.

வால் - பொடியாகவுஞ சாணிபோடும்போது தூக்கி மடக்கிக் கொள்ளுந தன்மையுள்ளதாகவுமிருக்கவேண்டும்.

பின் பக்கம் - விரிவாகயிருக்கவேண்டும்.



பவளவாய் - சிறுசாகயிருக்கவேண்டும்.

தாரை - கறுப்புநிறமாயிருக்கவேண்டும்.

கால்கள் - கனமாகவுங் குறியதாகவுமிருக்கவேண்டும்.

சந்துகள் - அடைப்பாகயிருக்கவேண்டும்.

குளம்புகள் - குத்துக்குளம்பாயும் கற்குளம்பாயுமிருக்கவேண்டும்.

சுழிகள் - சிமிழின்மேல் ஒற்றைச்சுழியிருப்பது உத்தமம். அதற்கு ரிஷபச்சுழியென்று பெயர். முதுகிற் பட்டரைச்சுழி யிருக்கவேண்டும்.

இந்தச்சுழி சிமிழிலிருந்து பின்னே ஒருச்சாணுக்குள் ஒற்றையாகயிருக்கும்.

அல்லது நடுமுதுகுக்குப் பின்னேயும் ஒற்றைச் சுழியிருக்கலாம். இதற்குப்பின் பட்டரைச் சுழி யென்று பெயர்.

நெற்றியில் இரண்டுசுழி ஒன்றின் கீழொன்று நேரே கீழ்நோக்கியிருப்பது உத்தமம். இதற்குக் குடைமேற் குடையென்று பெயர்.

குறிப்பு - மாடு விலைக்கு வாங்கப் பார்க்கும்போது அந்தமாடு தன் ஒற்றைவிலாவை அல்லது வயிற்றை நக்கினாலும் தன் தலையைக் கீழுமேலுமசைத்தாலும் நல்ல சகுனமென்று இந்துக்களா லெண்ணப்படுகிறது.

## * மாடுகளுக்குரிய குற்றங்களும்

அடையாளமும் - சுழியும் - பலனும் - அறியும்வகை

சவாரி வண்டிகளுக்கு உபயோகமாய் வருகிற காளைமாடுகள் இதின் கீழேகண்ட குற்றங்களைப் பொருந்தியிருக்கலாகாது.

அவையவம் - கெருடமுகம். அல்லது முகவெண்டலை. அடையாளம்-முகத்தில்மட்டும் வெள்ளை நிறமாயிருக்கும்.

அவையவம் - ஊற்றுக்கண். அடையாளம்-கண்ணிலிருந்து தண்ணீர் வடிந்துக்கொண்டிருக்கும். பலன் - நாட்சென்றாற் பார்வைகுன்றும்.

அவையவம் - சதைக்கண். அடையாளம்-கண்ணின் கடையிற் சிவந்தநிறமாகச் சதைபடர்ந்திருக்கும். பலன் - ஷை வகைப்படி.

அவையவம் - புள்ளிக்கண். அடையாளம் - கடைக்கண்ணில் வெள்ளைநிறமாகப் புள்ளியிருக்கும்.

அவையவம் - தொங்குகாது. அடையாளம் - காதுகள் நேரே விறைப்பாயில்லாமற் கீழ்நோக்கித் தொங்கிக்கொண்டிருக்கும். பலன் - வேகமிராது.

அவையவம் - கொள்ளிக் கொம்பு. அடையாளம் - கொம்பின்முனை தட்டையாகவுங் கறடுபாய்ந்தும் உச்சியிற் கொஞ்சம் பள்ளமாகவுங் கூர்ந்து பார்க்கிலந்தவிடந் தீநிறமாகவுமிருக்கும்.



அவையவம்-தோற்கொம்பு. அடையாளம்-கொம்பு அலைந்துகொண்டிருக்கும்.

அவையவம் - இடங்கட்டுக் கொம்பு. அடையாளம்-வலது கொம்பு முன்னாகவும் இடது கொம்பு பின்னாகவுங் கூடி ஒன்றோடொன்று ஒட்டியிருக்கும்.

அவையவம் - தடிக்கொம்பு. அடையாளம்-கொம்பு கொம்புநிரம்பவும் பருமனாயிருக்கும்.

அவையவம் - சாடுபார்த்தகொம்பு. அடையாளம் - வலதுகொம்பு வலதுபுறத்தைப் பார்க்கச் சாய்ந்தும் இடதுகொம்பு இடதுபுறத்தைப் பார்க்கச் சாய்ந்துமிருக்கும்.

அவையவம் - பருந்தலை. அடையாளம் - தலை உடலளவுக்கு மிகுதியாகயிருக்கும். பலன் - மந்த நடையாகயிருக்கும்.

அவையவம்-ஒற்றைநாடி. அடையாளம்-முன்காலடி மத்தியில் ஒரு நரம்பு ஓடியிருக்கும். பலன் சரீரம் மெலிவாகயிருக்கும்.

அவையவம் - தொங்கு நாரை. அடையாளம்-கழுத்தடியில் அதிகமாகத் தசைதொங்கும். பலன்- மந்த நடையாகயிருக்கும்.

அவையவம் - ஒற்றைக்கழுத்து. அடையாளம்-மாட்டின் தலையைக் குனியச்செய்து பார்த்தால் கழுத்தின் மேற்பக்கம் படலமாயில்லாமல்

ஒடுங்கினதாயிருக்கும். பலன் - கழுத்துப் பலமிருக்கமாட்டாது.

அவையவம்-ஒட்டுக்கழுத்து. அடையாளம்-கழுத்து உடலினளவுக்குத்தக்க நீளமும் பருமனுமில்லா திருக்கும். பலன் - கழுத்துப்பல மிருக்கமாட்டாது.

அவையவம்-சாய்வுதிமிழ் அடையாளம்-திமிழதிகமாய்ப் பருத்து நடக்கும்போது சாயும்.

அவையவம்-முதுகுநெளிவு அடையாளம்-முதுகு மத்தியில் நெளிந்திருக்கும். பலன் - குறுக்குப் பலமிருக்க மாட்டாது.

அவையவம் - முன்தணிவு. அடையாளம் - சரீரத்தின் மேற்புறத்திற் திமிழோரமாயிருக்கிற முன் பக்கம் பின்பக்கத்தைப் பார்க்கிலுந் தணிந்திருக்கும். பலன் - வண்டியில் தலைகுனிந்தே வரும்.

அவையவம் - தொங்குதொப்பூழ். அடையாளம் ஒட்டியிராமல் தொங்கிக்கொண்டிருக்கும். பலன்-சற்றுத்தூரம் ஓடினால் அயர்ந்துபோம்.

அவையவம்-இறங்குசட்டம். அடையாளம் - வாலடியில் இரண்டுபக்கமும் பின்குறுக்கின் பிரதான எலும்பிலிருந்து அதிகமாகக் கீழ்நோக்கிச் சாய்ந்திருக்கும். பலன் - பின்பல மிருக்கமாட்டாது.



அவையவம் - பூவால் அல்லதுவெடிவால். அடையாளம் - வால் நுனியில்மட்டும் வெள்ளைநிறமிருக்கும்.

அவையவம்-தடிவால். அடையாளம்-மிகவும் பருத்திருக்கும். பலன் - மந்தமாயிருக்கும்.

அவையவம் - தொடையடிகூழை. அடையாளம் - வால்முட்டுக்குக் கீழ்வராமல் தொடைக்குச் சமமாகக் கூழையாக இருக்கும். அதில் ரோமமில்லாமலும் அல்லது சொற்பமாயுமிருக்கும்.

அவையவம் - கொள்ளிக்கால். அடையாளம் - ஒற்றைக்காலில்மட்டும் வெள்ளைநிறமிருக்கும்.

அவையவம் - சாத்துக்கால். முன்காலின்முட்டுகள் சமீபமாய் உட்பக்கம் நெருங்கி யிருக்கும். பலன் - ஓடமாட்டாது.

அவையவம் - இணையடிகால். அடையாளம் - நடக்கும்போது முன்கால்களொன்றோடொன்று உரையும், பலன் - ஓடமாட்டாது.

அவையவம்-பின்னுகால், அடையாளம் - நடக்கும்போது பின்னத்தின் காலிரண்டும் நேரேவையாமல் மாறி மாறி வைக்கும்.

அவையவம்-வெட்டுக்கால். அடையாளம்-நடக்கும்போது பின்காற்குளம்பின் முனையைப் பூமியில் தேய்த்துக்கொண்டு நடக்கும். பலன் - குளம்பு சீக்கிரத்திலற்றுப்போகும்.

அவையவம் - மந்திக்கால். அடையாளம் - பின்கால் முட்டுநிரம்பவும் வளைந்திருக்கும். பலன்-சவாரியிற் சீக்கிரத்தில் கால் ஓய்ந்து போகும்.

அவையவம்-அரைகுளம்பு. அடையாளம்-நடக்கும்போது முன்காற்குளம்பைத்திருக்கிப் பூமியில் தேய்த்துக்கொண்டு நடக்கும் பலன் - தேய்படுகிற குளம்பு சீக்கிரம் அற்றுப்போகும்.

அவையவம் - விரிகுளம்பு. அடையாளம் - குளம்பினிருபாகமும் நெருங்கியிராமல் விரிவாயிருக்கும். பலன் - மண் கல் முதலானது குளம்பினிடையிலேறிக் துன்பமுண்டாகும்.

அவையவம்-பணைப்புள்ளி. அடையாளம்-சரீரமெங்குங் கலிப்பணம்போல வெள்ளையாகப் புள்ளிகளிருக்கும். பலன்-இந்தப்புள்ளி நூற்றுக்கதிகமாக யிருந்தால் குற்றமில்லையென்று சேர்த்துக்கொள்ளுவாருமுண்டு. இக்குற்றம் வெள்ளைமயிலை யிந்தநிறமுள்ள மாடுகளுக்கிராது.

அவையவம் - தொழுபரை அல்லது பால்மரை. அடையாளம்-சரீரமெங்குஞ் சுமார் ஒருதுட்டு அகலம் வட்டம் வட்டமாயிருக்கும். பலன் - இதுகுற்றமல்லவென்று சொல்வாருமுளர்.

அவையவம் - தடிமரை. அடையாளம் - மேற்கண்டவிதப்படி தடிப்பாகயிருக்கும். கையினால்தடவினாலுந் தடிப்புத்தோன்றும். பலன் - சற்றுதூரம் வெளியிற்போனா லிளைத்துப்போகும்.



அவையவம் - சுண்டுவாதம். அடையாளம்-கட்டுத்தலத்திலிருந்து அவிழ்த்தவுடனே நடக்கும்போது கொஞ்சந்தூரம் பின்கால்களிரண்டு அல்லது ஒன்று சுண்டி நடக்கும்.

அவையவம்-கால்வாரி. அடையாளம்-கட்டுத் தலத்தில் நிற்கும்போது முன்காலைக்கொண்டு பூமியைப் புறண்டிக்கொண்டு நிற்கும்.

அவையவம் - உடலாட்டம். அடையாளம் - கட்டுத்தலத்தில் நிற்கும்போது சரீரத்தை யெப்போதும் அலைத்துக்கொண்டே நிற்கும்.

அவையவம் - சுடுகாடுநக்கி. அடையாளம் - முன்வாயிற் சுழியிருக்கும் அல்லது முன்வாயில் தன் நிறத்துக்குப் பேதமான நிறத்தில் நெருக்கமாய்ப் புள்ளிகளிருக்கும் அல்லது கொடிப்போல படர்ந்திருக்கும்.

அவையவம் - இடிமேலிடி. அடையாளம்-நெற்றியிலிரண்டு அல்லது மூன்று சுழிகளொன்றைப் பார்க்க ஒன்று யெதிர்த்திருக்கும் அல்லது மேல்நோக்கி யிருக்கும்.

அவையவம் - வாய்ப்பூட்டு. அடையாளம்-கீழ்வாய் முகக்கட்டையில் இரண்டு சுழியிருக்கும்.

அவையவம் - செவிப் பாம்பு. அடையாளம் - கன்னக்கட்டை ஓரமாகக் காதின் அடியின்கீழ் தன்னிறத்துக்குப் பின்னமாக நிறத்தில் ஒரு நீண்ட சுழியிருக்கும்.

சுழிகள் - முற்பாடை, பிற்பாடை அடையாளம் - முதுகில் முன் பின்னாக இரண்டுசுழிக ளிருக்கும்.

சுழிகள் - விலங்கடி. அடையாளம் - முதுகிற் குறுக்காக இரண்டு சுழிகளிருக்கும்.

சுழிகள் - மேற்படி. அடையாளம் - பின்சட்டம் இரண்டிலும் இரண்டு சுழிகளிருக்கும்.

சுழிகள் - மேற்படி. அடையாளம் - முன்காலிரண்டிலும் உட்புறத்தில் ஒன்றைப்பார்க்க ஒன்று சுழியிருக்கும்.

சுழிகள் - மேற்படி, அடையாளம் - முதுகிற் குறுக்காக இரண்டு சுழிகள் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டிருக்கும். பலன் - இச்சுழியை டம்மாணச் சுழியென்று சொல்லுவதுமுண்டு.

நீர்ச்சுழி - அடையாளம் - முதுகிற் கோசத்துக்கு நேரே ஒரு சுழிமட்டு மிருக்கும். பலன் - இந்தச் சுழியிற் கைவிரலைவைத்துத் தேய்த்தால் உடனே மாடு நீர்விடும்.

சுழிகள் - உழவனைப்பார்த்த பூதம். அடையாளம் - முதுகில் நீளமாக ஒற்றைச் சுழிவாலைப் பார்க்க இருக்கும். பலன்-இந்தச்சுழி தலையைப்பார்க்க இருந்தால் தோஷமில்லை.

சுழிகள் - ஏறுநாகம் அடையாளம் - பவனவாய்க்குக் கீழே தாரையில் சர்ப்பப்படம்போலே மேல்நோக்கிச் சுழியிருக்கும்.



சுழிகள் - இறங்குநாகம். அடையாளம்-மேற்கண்ட சுழி கீழ்நோக்கி யிருக்கும்.

சுழிகள் - கவ்வம். அடையாளம் - முன்னுரத்தில் இரண்டுபுறமுஞ் சுழிகளிருக்கும்.

சுழிகள்-ஒற்றைக்கவ்வம். அடையாளம்-மேற்கண்ட சுழி ஒருபுறமிருக்கும்.

சுழிகள் - பெண்டிழந்தான். அடையாளம்-வாலினடிக்குப் பக்கத்திற் குண்டி ஒன்று அல்லது இரண்டினிற் மேல்நோக்கி அல்லது கீழ்நோக்கிச் சுழியிருக்கும்.

சுழிகள் - கறட்டுஒந்தான் அடையாளம் - வாலின்மேற் கட்டாரிபோலவும் மயிர் வகிர்ந்துவிட்டது போலவுமிருக்கும்.

குறிப்பு - 1. மேற்சொல்லிய குற்றங்களில் தொங்குகாது தடிக்கொம்பு பருந்தலை ஒற்றைநாடி தொங்குநாரை ஒற்றைக்கழுத்து ஒட்டுக்கழுத்து முதுகு நெளிவு முன்றணிவு தொங்குதொப்புழ் இறங்குசட்டம் தடிவால் மந்திக்கால் இப்பதின்மூன்றும் பாரவண்டிகளுக்கும் உழவுக்கும் உபயோகிக்கிற மாடுகளுக்கு விசேஷ தோஷமாகமாட்டாது.

2-மாடு விலைக்குவாங்கப் பார்க்கும்போது தன் பின்காலைக்கொண்டு தலையைச் சொரிந்தாலும் முன்காலாற் பூமியைப்புறண்டினாலும் தலையை

வலம் இடமாக அசைத்தாலுஞ் சகுணவிரோத மென்று எண்ணப்படுகிறது.

## * எருத்துப்புரை

மாடுகளுக்குப் பிணி அணுகாமற் கூடியவரை காப்பாற்றுவதற்கு அவைகளை யெப்போதுங் கட்டி யிருக்கிற புரையைச் சரியானவிதத்திலுந் துப்புர வாயும் வைத்திருக்கவேண்டுவது அவசியம்.

எருத்துப்புரை கூடியவரை உயர்வான மேடுள்ள தாயும் காற்று சாதாரணமாயுள்ளே பிரவேசிக் கவும் உள்ளேயிருக்கிற துர்க்கந்தக்காற்று வெளியே போகும்படிக்கான விதமாய்க் கட்டப்பட்டிருக்க வேண்டும். நிறம்பத் தணிவாகவும் இருட்டாகவும் காற்றோட்டத்துக் கிடமன்னியிலு மிருக்கலாகாது. வருஷாகாலங்களில் வெளிப்பக்கத்தில்விழுகிற ஜலத் தினால் புரையின்தளம் நீருற்றுக்கொள்ள இடமன் னியில் உயர்வாயிருக்கவேண்டும் மேலும்தளம்மேடு பள்ளமன்னியிற் சமமாகவும் அடிப்பக்கத்தைப் பார்க்கிலும் மாட்டின் காற்பக்க மாடு நீர்விட்டாற் சாதாரணமாய் வெளியே போய்விடும்படிக்கான விதத்திற் கொஞ்சந் தாழ்வாக மிருக்கவேண்டும் தளஞ் சுத்தமண்ணா யிருக்கிற விஷயத்தில் மாடு நீர்விடுகிறதினால் சத்தியுண்டாகவும் அடிக்கடி ஜீரண மாய்ப் போகவும் நேரிடுமானதால் சரலைக்கனமாய்ப் பரத்திக் கெட்டிசெய்யவேண்டும். சுவர்களைச் சுண் ணாம்பு குருகுமண் அல்லது செம்மண்ணால் மூன்று மாதத்துக் கொருதடவையாவது பூசிச் சுத்தப்



படுத்தவேண்டும் தினந்தோறும் விழுகிற நீர் சாணம் குப்பை முதலானதை இரண்டு தடவைக்குக் குறை யாமலெடுத்து வெளிப்படுத்திக் கூடியவரை துப் புரவு செய்யவேண்டும். அசுத்தங்களால் மாடு களுக்கு நோயணுகாமற் செய்வதற்குப் பன்றிநெய் யும் சோற்றுக் கற்றாழையும் உசிதமான பதார்த் தங்கள் ஆனதால் எருதுப்புரையின் திக்குகளிற் கற்றாழை மூட்டைக் கொண்டுவந்து எப்போதுந் தூக்கி வைக்கவேண்டியதுந் தவிரப் பன்றிநெய் யைக் கலசங்களில் வைத்துத் துணியில் முடிக்கட் டிப் புரைக்குள் தூக்கி யிருக்கவேண்டும். வாரத்துக் கொருதரம் அந்தப் பன்றிநெய்யிற் கொஞ்ச மெடுத்து மாட்டின்கண் மூக்குச் செவி யிதுகளிற் றேய்த்து உள்ளுக்குங் கொஞ்சங் கொடுக்கவும். சில நாளைக் கொருதடவை புரைக்குள் சாம்பிராணிப் புகை காட்டுவது உத்தமமாய் இருக்கும்.

## மாட்டுக்கு தினஞ் செய்யவேண்டிய நியமம்

சவாரி மாட்டைத் தினந்தோறும் காலமே (- மணிக்குச் சாயந்திரம் நாலுமணிக்குங் கட்டுத்தறி யைவிட்டு அவிழ்த்த உடனே தலையுயர்ந்திருக்கும் படி தூக்கிக்கட்டிச் சவாரியினாற்செய்த குதப்பன் அல்லது வைக்கோலால் கொசுக்கடி அழுக்கு முத லானது போகும்படி சரீரமுழுக்கத் தேய்த்துப் பின்பு சரீரத்திலிருக்கிற கழிவு ரோமங்கள் உதிரும் படி கைகளினாற் சரீரமுழுக்க மாலீஸ்செய்து

துடைத்து முகம் கண் காது மூக்கு சரடு கால்கள் இவைகளைக் குளிர்ந்த தண்ணீரினாற் கழுவி அந்த யீரம் உலருகிறவரை அப்படியே நிறுத்தியிருந்து பின்பு மாட்டை யவிழ்த்து முன் கட்டியிருந்த இடமல்லாத வேறொரு யிடத்திற் கட்டித் தீனிபோடவேண்டும்.

சவாரிபோனால் அப்படிப் போய்வந்தவுடனே யாட்டின் வாயிலிருக்கிற வெண்ணுரையைக் கையினால் துப்புரவாக வழித்து மேற்கண்டபடி மாலிஸ் முதலானதுசெய்து தண்ணீர் குடிக்கச்செய்து கட்டுத்தடியிற் கட்டவேண்டும். சவாரி போய்வந்தவுடனே வாயிலிருக்கும் வெண்ணுரையை வழிக்கா விட்டால் அந்தநுரை மாட்டின் வயிற்றுக்குள் போகவும் அதினால் மாட்டுக்கு வியாதியுண்டாகவும் நேரிடும்.

மாலிஸ் செய்கிறதினால் மாட்டுக்குத் தினந்தோறுந் தேகத்திலுண்டாகிற வலி தீரவும் சோம்பல் நீங்கி சுருசுருப்புண்டாகவுங் கழிவுரோமங்கள் உதிரவும் இடமாயிருக்கும். இப்படிச் செய்யாவிடில் மாட்டின் தோலில் உட்புறத்திற் கிருமிகளுற்பத்தியாகி அதினால் தினவு முதலான பலவிதமான சருமவியாதிகள் சம்பவிக்குமென்று டாக்டர் கில்கிறிஸ்ட்டு துரையவர்கள் சொல்லி யிருக்கிறார்கள்.

## * தண்ணீர் குடிக்கச்செய்யுந் தன்மை

காலமே மேற்குறித்தபடி மாலிஸ் செய்த பின்பு சுமார் 8-அல்லது 6-மணிக்குச் சாயங்காலம்



அப்படி மாலிஸ் செய்யுமுன் 4-மணிக்குந் தண்ணீர் குடிக்கச் செய்யவேண்டும். ஆனால் சவாரி மாடுகளுக்கு காலமேயாவது சாயங்காலமாவது சமீபதூரஞ் சவாரி போகவேண்டியிருந்தால் அப்படிப் போய்வந்த பின்பும் கிரம்பத்தூரஞ் சவாரிபோகவேண்டியிருந்தால் அப்படிப்போவதற்கு சுமார் ஒருமணி நேரத்துக்கு முன்புந் தண்ணீர் குடிக்கச் செய்யவேண்டும். சவாரி மாடுகளுக்கு சுத்தஜலங் கொடுப்பதே உசிதம் கழுநீர் முதலான ஊறல் ஜலங் குடித்தால் வயிறு பெருகவுஞ் சவாரியில் எருகவுமான கெடுதலுக்கிட முண்டாகும், பாரவண்டிமாடுகளுக்கு ஊறல் ஜலங்கொடுப்பது மெத்தப் பிரயோசனந்தான். பருத்திவிதையை முதனாளரைத்து காடி கழுநீர் அல்லது சுத்தஜலத்திற் கலக்கி வைத்திருந்து மறுநாள் அதைத் தொட்டியில்விட்டு மேலே கொஞ்சம் முழுப்பருத்தி விதையைத் தூற்றிக் குடிக்கச் செய்யவேண்டும்.

## * தீனி

மாடுகளுக்குப் போடுகிற * தீனிகளில் சோழநாற்று எல்லாவற்றிலும் உபயோகமுள்ள தன்மையுள்ளது. அது கிடையாத இடங்களிற் கார்ச்சம்பா நெல் வைக்கோல் வுசிதமானது. மற்ற வைக்கோல் முதலான § தீவனங்கள் அவ்வளவு பிரயோசனமுள்ளதல்ல. பச்சைப்புல் பொதுவாய் நன்மையுள்ளதாக விருந்தாலுஞ் சவாரிமாடுகள் அதைத்தின்றால் சவாரியில் எருக்கலுண்டாகு மானதால் அவ்வகை

* தீனி என்பதும், § தீவனம் என்பதும் உணவு.

மாடுகளுக்குப் புல் தீவனம்போடுவது உசிதமல்ல. எவ்விதத் தீவனமும் மாட்டுமுன்பாக ஒரேமட்டாய் அதிகமாக வைத்துவிடாமல் தின்னத்தின்ன கொஞ்சங் கொஞ்சமாக வைத்து வரவேண்டும். தீவனங்களை ஒரேமட்டாய் நிரம்பப்போடுகிற பக்ஷத்தில் மாடுகள் அவாவுடனே தின்னமாட்டா. அதுவுந் தவிரத் தீவனமும் வீணாய்ச் சேதமாகவும் போகும்.

## * விசேஷ தீவனம்

மாடுகளுக்குச் சாதாரணமாய் வைத்துவருகிற மேற்குறித்த தீவனத்தைத் தவிர விசேஷ தீவனங் கொடுத்து வரவேண்டுவதும் அவசியம்.

பச்சைக்கடலை கொள்ளு (பச்சைக்காணம்) பருத்திவிதை இவைகளில் அவரவர்களுடைய சௌகரியத்துக்குத் தக்கதை கீழேகண்ட விதிப்படி மாடுகளுக்குக் கொடுத்துவரவேண்டும்.

மேற்சொன்ன தினுசுகளிலொன்றை தனிமையாகவாவது இரண்டு அல்லது மூன்றையுஞ் சேர்த்தாவது கொடுக்கலாம். இந்தத் தீவனம் மாடுகளுக்குச் சதையையும் இரத்த விருத்தியையும் பலத்தையும் உண்டாக்கத்தக்கது. சொற்பமாவது தினந்தோறுங் கொடுத்துவருவதே உசிதம். சில நாட்களுக்கு ஒரு தடவை அமோகமாகக் கொடுக்கிறதினால் யாதொரு பிரயோசனமுமில்லை. மேலும் அப்படி கொடுக்கிற தீவனஞ் சாதாரணமாய் சீரணத்துக்குவர இடமன்னியில் வியாதியை யுண்டாக்கத் தக்கதாயும் இருக்கிறது.



மேற்குறித்த தினுசுகளில் பச்சைக்கடலை முதல்தரத் தீவனம். இதை கீழே சொல்லியிருக்கிற அளவுப்படி காலமே தண்ணீரில் நனையப்போட்டு சாயங்காலந் தண்ணீரை வடியவைத்து மாட்டுக்கு வைக்கவேண்டும்.

பச்சைக்காணத்தை வெயிலில் நன்றாய் காயப்போட்டு எடுத்து திரிகையிற்போட்டு ஒருகாணம் ஐந்து ஆறு ஆகும்படி யுடைத்து அதைப் பகல் 12-மணிக்கு சீரான தண்ணீர்கொடுத்து நனைத்து வைத்திருந்து சாயங்காலம் மாட்டுக்கு வைக்கவேண்டும். நனைக்கிறதற்காக விடுகிற தண்ணீர் செவ்வையாய் ஊறுவதற் கிடமன்னியில் குறையவுங் கூடாது மடியவைக்கும்படி அதிகமாக இருக்கவுங் கூடாது காணத்தை வேகவைத்துப் போடுகிறதினால் உஷ்ணம் அதிகப்படுமானதால் மேற்கண்டபடி பச்சையாகப் போடுவது நன்மை.

பருத்திவிதையை முதல்நாள் இராத்திரி தண்ணீரில் ஊறப்போட்டு வைத்திருந்து மறுநாள் காலையில் பத்துமணிக்கு அது ஊறப்போட்டிருக்கிற பாத்திரத்தின்மேலே வைக்கோலை யமுக்கி குப்புற கவிழ்த்து வைத்திருந்து சாயங்காலம் எடுத்து மாட்டுக்கு வைக்கவேண்டும். குப்புறக் கவிழ்த்தின பாத்திரம் மாட்டிற்குப் பருத்திவிதை வைக்கப்போகிற பரியந்தம் அந்த நிலைமையிலேயே யிருக்கவேண்டும். அல்லது முன்னாடி நிமிர்த்தினால் அந்தப் பாத்திரத்துள் காற்றுப் பிரவேசித்து ஊறினவிதை

யுலர்ந்து போகாதிருக்கும்படி ஒரு பாத்திரத்தால் மூடி வைக்க வேண்டும். வைக்கோலை யமுக்குவதின் பிரயோசனம் விதையில் மண் ஒட்டாமலிருக்க வேண்டியதற்காகத்தான் கடலை காணம் பருத்தி விதை இவைகளில் எதையும் மேற்கண்டபடி பக்குவஞ் செய்வதற்கு முன்னாடி கல் மண் ரோமம் முதலானவைகளை நீக்கிப்போட வேண்டியதில் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும் இந்தத் தினுசுகளுடன் தவிட்டைச்சேர்த்து போடுவது சவாரி மாடுகளுக்கு நன்மையானதல்ல. சாணி ஜாஸ்தியாகவும் நெகிழ்த்தியாகவும் போடுகிறதற்குந் தண்ணீர் அதிகமாகக் குடித்து அதினால் வயிறு பெருகுகிறதற்குங் காரணமாகும். ஆனால் பாரவண்டி மாட்டுக்குத் தவிடு சேர்த்துப் போடுகிறது நலந்தான்.

## * உயரமான எருதுகளுக்கு தினந்தோறும் போடவேண்டிய தீனியின் அளவு

| | | |
|---|---|---|
| தனிப்பச்சைக்கடலை | படி | 2 |
| தனிப்பச்சைக்காணம் | ,, | 3 |
| தனிப்பருத்திவிதை | ,, | 4 |

பச்சைக்கடலையும்
பச்சைக்காணமும்

| | | |
|---|---|---|
| பச்சைக்கடலை | ,, | 1 |
| பச்சைக்காணம் | ,, | $1\frac{1}{4}$ |

பச்சைக்கடலையும்
பருத்திவிதையும்



| | | |
|---|---|---|
| பச்சைக்கடலை | ,, | 1 |
| பருத்திவிதை | ,, | 2 |

பச்சைக்கடலையும்
பச்சைக்காணமும்
பருத்திவிதையும்

| | | |
|---|---|---|
| பச்சைக்கடலை | ,, | $\frac{1}{4}$ |
| பச்சைக்காணம் | ,, | 1 |
| பருத்திவிதை | ,, | 2 |

பச்சைக்காணமும்
பருத்திவிதையும்

| | | |
|---|---|---|
| பச்சைக்காணம் | ,, | $1\frac{1}{4}$ |
| பருத்திவிதை | ,, | $2\frac{1}{4}$ |

மேற்குறித்த உயரத்துக்குக் கம்மி சாஸ்தியுள்ள மாடுகளுக்கு அந்தந்தத்தரத்துக்குந் தக்கபடி இந்தப் பிரமாணத்தை வைத்து நிதானித்துக் கொள்ளவேண்டும். விசேஷ தீவனந் தினந்தோறும் போட்டுவர சௌகரியமில்லாதவர்கள் ஒன்றுவிட்டு மறுநாளாவது தப்பாமற் போட்டுவரவேண்டும். அப்படிக்கானால் மேற்குறித்த அளவுக்குக் கொஞ்சஞ் சாஸ்தி செய்து கொள்ளவேண்டும்.

## * குளிப்பாட்டல்

மாட்டை வாரத்திலொருதடவைக்குக் குறையாமலும் இரண்டு தடவைக் கதிகப்படாமலுங் குளிப்பாட்டவேண்டும் ஆழமாயுங் கூடியவரை

சுத்தமாயுமுள்ள தண்ணீரிற் கொண்டுபோய் பவன வாய் தெரியும்படி நிறுத்திவைத்துத் தேகமெல் லாஞ் செவ்வையாய்த் தேய்த்துக் குளிப்பாட்டித் தண்ணீரிற் கொஞ்சம் நீந்தும்படி செய்துகொண்டு வந்து * காசாவிற் கட்டியிருந்து ஈரம் உலர்ந்தபின் கட்டுத்தறியிற் கட்டவேண்டும். குளிப்பாட்டியான வுடனே சவாரி போகாமலிருக்கும்படி பார்த்துக் கொள்ளவேண்டும். ஒரு வேளை நதிமுதலான யிடங் களுக்கு சவாரிபோயிருந்து அவ்விடத்திற் குளிப் பாட்டும்படி நேரிடுகிற பக்ஷத்தில் குளிப்பாட்டி யானதின்பேரில் வண்டியில் மாட்டை ஓட்டாமல் தன்னடையாகக் கொண்டுவரவேண்டும் பாரவண்டி மாட்டை நடந்துவந்த வுடனே குளிப்பாட்டுவது நல்லது. ஆனால் பின்பு அன்றைத் தினம் நடையில் லாம லிருக்கும்படி செய்யவேண்டும்.

## * வெள்ளைப்பூண்டு மசாலா

| | | |
|---|---|---|
| வெள்ளைப்பூண்டு | பலம் | 5 |
| மஞ்சள் | ,, | 2 |
| மிளகு | ,, | 2 |
| சுக்கு | ,, | 2 |
| ஓமம் | ,, | $1\frac{1}{4}$ |
| கருஞ்சீரகம் | ,, | 2 |
| காட்டுச்சீரகம் | ,, | 2 |
| கடுகுரோகணி | ,, | $\frac{1}{4}$ |
| வால்மிளகு | ,, | 2 |
| வாய்விளங்கம் | ,, | 2 |
| வசம்பு | ,, | $\frac{1}{4}$ |
| மாசிக்காய் | ,, | 2 |
| மருட்டிமொக்கு | ,, | 1 |
| அபினி | ,, | $\frac{1}{4}$ |
| சருள்ளி | ,, | 20 |
| வெல்லம் | ,, | 10 |

* காசாவிற் கட்டுதலென்பது - மாட்டுத்தலையை யேற தூக்கிக் கட்டுதலாம்.



இவைகளை நன்றாயிடித்துப் பத்துபலம் நெய் விட்டுப் பிசைந்து எலுமிச்சங்காய்ப் பிரமாண முருட்டி வைத்துக்கொண்டு சவாரிபோய் வந்தவு டனே கொடுத்துவரவேண்டும். மாடு தாசாவாகும்.

## * இஞ்சி மசாலா

| | | |
|---|---|---|
| இஞ்சி | பலம் | 1 |
| மிளகு | ,, | $\frac{1}{4}$ |
| வெல்லம் | ,, | 5 |

இவைகளை யிடித்துக் காலமே கொடுக்கவேண் டியதுந்தவிர மாலையில் வெல்லம் பலம்-5, நெய் பலம்-5, இவ்விரண்டுங் கொடுக்கவேண்டியது. இந் தப்படி ஒருமாசங் குறையாமல் தினந்தோறுங் கொடுக்கவேண்டும் மாடு தாசாவாகும்.

## ஆட்டுத்தலை மசாலா

செம்மறி ஆட்டின்தலை இரண்டு, கால் எட்டு இவைகளைத் தீயில்வாட்டி ரோமங்களைப் போக்கித்

தரித்து ஒரு பானையிற்போட்டு அது மூழ்கும்படி தண்ணீர்விட்டு எலும்புகள் வெள்ளைநிறம் வருகிறவரை வேகவைத்து வெந்தபின்பு எலும்புகள் முழுக்கப்பிறக்கி உதறியெடுத்து வேறொரு பாத்திரத்திற்போட்டு வேறு தண்ணீர்விட்டு நன்றாய்க்கழுவி அந்த எலும்பைத் தூரப்போட்டுவிட்டுக் கழுவின ஜலத்தை முந்தின தண்ணீருடனேவிட்டு அதிலிருக்கிற வெந்த மாம்சங்களை யெடுத்து வேறு பாத்திரத்தில் வைத்துக்கொண்டு மேற்படி தண்ணீரில் இரண்டுபடி பச்சை அரிசியைத்தட்டி வேகவைக்கவேண்டியது. வெந்தபின்பு மேற்படி மாம்சங்களையுங் கூடப்போட்டு இரண்டுபடி திரித்த உழுந்து மாவையுந் தட்டிக் கிண்டிக் கொஞ்ச நேரஞ்சென்று இறக்கி,

| | | |
|---|---|---|
| மஞ்சள் | * பலம் | 1 |
| மிளகு | ,, | 2 |
| சீரகம் | ,, | 1 |
| கொத்தமல்லி | ,, | 3 |
| இஞ்சி | ,, | 3 |
| சுக்கு | ,, | 3 |
| ஓமம் | ,, | 3 |
| வசம்பு | ,, | ¼ |
| கடுகு | ,, | 1¼ |
| ஈருள்ளி | ,, | 10 |
| வெள்ளைப்பூண்டு | ,, | 5 |
| நறுக்குமூலம் | ,, | 1¼ |
| திப்பிலி | ,, | 1¼ |
| காருகோலரிசி | ,, | 1¼ |
| மிளகாய்வத்தல் | ,, | 1 |
| சன்ன இலவங்கப்பட்டை | ,, | 2 |
| சிறுநாகப்பூ | ,, | 1 |
| காயம் | ,, | ¼ |
| நல்லெண்ணை அல்லது நெய் | ,, | 1 |

* ஒருபலமென்பது - ரூபாயிடை 5¼.



இந்த மருந்துகளில் ஓமத்தை யிளவறுப்பாக வறுத்தும் மற்றதைப் பச்சையாகவு மிடித்துத் தூள் பண்ணி ஷை தூளையு மதில்தட்டி எண்ணையையும் விட்டுப் பிசைந்து இரண்டு மாடுகளுக்குங் கவளமாகக்கொடுக்கவும். சாயங்காலங் குடிக்க வெந்நீர் விடவும். மூன்றுநாள் குளிர்ந்த தண்ணீரிற்கொண்டுபோய் நிறுத்திக் குளிப்பாட்டவும். நாலாநாள் முதல் விசேஷதீனி வைக்கவேண்டும். ஐந்தாநாள் முதல் வண்டியிற் கட்டலாம். இந்த மசாலா வருஷத்துக் கிரண்டுதரம் கொடுத்துவந்தால் மாடு புஷ்டியாக இருக்கும்.

## * பெருப்பூசினிக்காய் மசாலா

ஒரு * பெரும்பூசினிக்காயை கைபோதும்படியான அகலத்தில் வட்டமாக ஒரு பக்கத்திலறுத்து அந்த வழியாக மேற்படி காய்க்குள் தட்டப்பயறு பச்சைப்பயறு வயல்பயறு கல்பயறு அல்லது, வீரி

* பெரும்பூசினிக்காய் யென்பது—சாம்பல் பூசினிக்காயென்றும் தடியங்காயென்றும் வழங்கப்படும்.

தட்டான்பயறு கடலை துவரை உளுந்து மொச்சை காணம் வகைக்குக் கால்படி வீதஞ்செலுத்தி மேலே சொல்லியபடி அறுத்ததுண்டினால் மூடி ஒரு மண் பாத்திரத்தில்வைத்து மேல்சட்டிபோட்டு மூடி சீலை மண்செய்து பூமிக்குள் ஒருவாரம் புதைத்து வைத்திருந்து எட்டாநாளெடுத்துப் புளித்த பசுவின் மோர் படியிரண்டுவிட்டு நன்றாயாட்டிக் கொடுக்க வேண்டியது மாடு புஷ்டியாகும்.

## * உடும்பு மசாலா

பெண்ணுடும்பு இரண்டு கொண்டுவந்து நகமுந் தலையுந்தள்ளி மற்றதை மைப்போலபிடித்து,

| | | |
|---|---|---|
| மஞ்சள் | பலம் | 1 |
| மிளகு | ,, | 2 |
| சுக்கு | ,, | 2 |
| வெள்ளைப்பூண்டு | ,, | [illegible] |
| ஈருள்ளி | ,, | [illegible] |

இவைகளையுங் கூடச் சேர்த்திடித்து அரைப்படி உளுந்துமாவுஞ் சேர்த்துப் போதுமான நெய்யும் நல்லெண்ணையும் விட்டுப்பிசைந்து மாங்காய்ப் பிரமாண முருட்டி வைத்துக்கொண்டு தினந்தோறுந் துயர்த்து ஒவ்வொரு உண்டைவீதங் காலையிற் கொடுத்துவரவேண்டும்.

## * வெள்ளுச்சி மசாலா

| | | |
|---|---|---|
| மஞ்சள் | பலம் | 2 |
| கஸ்தூரிமஞ்சள் | ,, | 1 |



| | | |
|---|---|---|
| மிளகு | பலம் | 1 |
| கிராம்பு | ,, | 1 |
| சாதிக்காய் | காய் | 4 |
| சாதிபத்திரி | பலம் | 4 |
| ஏலம் | ,, | 2 |

இவைகளை யிடித்துத் தூள்செய்து வைத்துக் கொண்டு எட்டுப்படி வெள்ளுச்சியை நன்றாயிடித்து அதையும் $1\frac{1}{2}$-படி உளுந்துமாவையுங் கூடப்போட்டு 30-கோழிமுட்டையையும் உடைத்துவிட்டு நல்லெண்ணையை அதில்விட்டு நன்றாய்ப் பிசைந்து இரண்டு மாடுகளுக்குங் கவளமாகக் கொடுத்து சாயங்காலங் குடிக்கவெந்நீர்விடவும். மூன்றாம்நாள் குளிர்ந்த ஜலத்திற் கொண்டுபோய்க் குளிப்பாட்டி வந்தவுடனே இரண்டுபடி பச்சையரிசில் சாதம் பொங்கி தயிர்விட்டுப் பிசைந்து கவளமாகச்செய்து கொடுக்கவும். இந்தப்படி நாலாநாளுங் குளிப்பாட்டி வந்தவுடனே கொடுக்கவேண்டும். ஆறாம்நாள் முதல் விசேஷதீனி வைக்கலாம். இந்த ஆறுநாளும் வண்டி ஏர்முதலானதும் கட்டக்கூடாது.

## * ஜீரண மசாலா

| | | |
|---|---|---|
| மஞ்சள் | பலம் | $\frac{1}{2}$ |
| மிளகு | ,, | 5 |
| வெள்ளைப்பூண்டு | ,, | 5 |
| இஞ்சி | ,, | 10 |

இந்த மருந்துகளை யிடித்து அது கொள்ளுமான கடைநெய்விட்டுப் பிசைந்து கவளமாகக் கொடுக்க

மா 4

சாயங்காலங் குடிக்க வெந்நீர்விடவும் மூன்றும்நாள் குளிர்ந்தஜலத்திற் கொண்டுபோய் நிறுத்திக் குளிப்பாட்டி சாயங்காலமுதல் விசேஷ தீனிவைக்கலாம். நாலாம்நாள்முதல் வண்டி முதலானதும் கட்டலாம்.

### * உஷ்ண சாந்தி மசாலா

வேனிற்காலத்துக்கு மாட்டுக்குக் காங்கை யேறும லிருக்கும்பொருட்டு ஒருதரம் அல்லது இரண்டுதரம் இதனடியிற்கண்ட மசாலாக்களைக் கொடுத்துவர வேண்டும்.

1. மாடு ஒன்றுக்கு ஒருபடி பச்சைக்காணத்தை ஊறப்போடாமல் நன்றாயாட்டிப் போதுமான தனி பனங்கள்ளிற்கலக்கி ஒரு பாத்திரத்தில் விட்டு குடிக்கச் செய்யவும். இதை ஓட்டவேண்டியானால் நன்றாய் கைதேர்ந்தவர்களால் ஓட்டவேண்டும். கொஞ்சந் தவறினால் சுவாசக்குழலிலேறி மாட்டுக்கு மோசம் வரும்.

2. ஒருபடி பச்சையரிசியைப் பொங்கி அந்தச் சாதத்தில் நல்லதயிர் படி-2, ஈருள்ளி பலம்-20, அரிந்துப்போட்டு மூன்று மொன்றாகப் பிசைந்து இரண்டு மாடுகளுக்குங் கவளமாகக் கொடுக்கவும். மறுநாள் குளிர்ந்த தண்ணீரிற் குளிப்பாட்ட வேண்டும். மூன்றும்நாள் விசேஷ தீனி வைக்க வேண்டும்.

3. வெந்தியம் பலம்-25, நன்றாய் அரைத்து அதிலொருபடி நெய் அல்லது நல்லெண்ணை படி-1 சேர்த்து இரண்டு மாடுகளுக்குங் கொடுக்கவும். சாயங்காலம் குடிக்கக் கொஞ்சம் வெந்நீர்விட



வேண்டும். மூன்றும்நாள் குளிர்ந்தஜலத்திற் குளிப்பாட்டி அன்றுமுதல் விசேஷதீனி வைக்கவும். நாலாம்நாள் முதல் வண்டி ஏர் முதலானதிற் கட்டலாம்.

### * இதுவுமது

| | | |
|---|---|---|
| கடலைமாவு | படி | 2 |
| உளுந்துமாவு | ,, | 2 |
| வெந்தையமாவு | ,, | 2 |

போதுமான நல்லெண்ணைவிட்டுப் பிசைந்து மாங்காய்ப்பிரமான முருட்டி வைத்துக்கொண்டு தினந்தோறும் ஒரு உருண்டை கொடுத்துவரவும்.

### * நல்லபாம்பு மசாலா

ஒரு நல்லபாம்பைத் தலைமுதல் ஒருசாண்நீளம் அறுத்துத் தள்ளிவிட்டு உடலுக்குள் அரைக்கால் படி பச்சைக்கடலையைச்செலுத்தி அரைபல ரசமும் விட்டுப் புதுப்பாண்டத்திலே யடைத்து மூடி மேலே சீலைமண் செய்து பூமியில் மூன்றுவாரம் புதைத்து வைத்திருந்து எடுத்து மேற்படி கடலைகளை மட்டும் எடுத்து வைத்துக்கொண்டு மாடொன்றுக்கு நாலு கடலைவீதம் அன்றாடங் கொடுத்துவர வேண்டும். மாட்டுக்கு வேகமுண்டாகும்.

### * குமட்டிக்கா யூறுகாய்

பேய்க்குமட்டிக் காய்களை 20-கொண்டுவந்து நாலுபிளப்பாக அறுத்து அதில்,

| | | |
|---|---|---|
| மஞ்சள் | பலம் | ½ |
| மிளகு | ,, | 1 |

| | | |
|---|---|---|
| வசம்பு | பலம் | ¼ |
| கருஞ்சீரகம் | ,, | 1 |
| காட்டுச்சீரகம் | ,, | 1 |
| கடுகுரோகிணி | ,, | ½ |
| நறுக்குமூலம் | ,, | 1 |
| மிளகாய்வற்றல் | ,, | 3 |
| வெள்ளைப்பூண்டு | ,, | 2 |
| குரோசானிஓமம் | ,, | 1 |
| வாய்விளங்கம் | ,, | ½ |
| வெட்பாலைஅரிசி | ,, | ½ |
| வெந்தையம் | ,, | 2 |
| இந்துப்பு | ,, | 5 |
| கறியுப்பு | படி | 2 |

இவைகளையிடித்து காயில்சேர்த்து மண்பாத்திரத்தில் வைத்து மூடி சீலைமண்செய்து குதிரைலாயம் அல்லது எருதுகொட்டாயில் முப்பதுநாள் புதைத்து வைத்திருந்து பின்பு அதை எடுத்து வைத்துக்கொண்டு மாடொன்றுக்கு ஒருகாய்வீதம் காலையில் காலையில் கொடுத்துவரவேண்டும். இதனால் சில வியாதிகள் வராமல் தடைப்படுவதுமன்றி அதுகளுக்கு போதுமானவரையில் தீனி தின்று தண்ணீருஞ் சரியானபடி குடிக்கும்.

## * எருதுகளுக்கு கொடுக்கும் லேகியம்

| | | |
|---|---|---|
| மஞ்சள் | பலம் | 1½ |
| மிளகு | ,, | 9 |



| | | |
|---|---|---|
| சுக்கு | பலம் | 5 |
| திப்பிலி | ,, | 2 |
| வங்காளநறுக்குமூலம் | ,, | 7 |
| கருஞ்சீரகம் | ,, | 2¼ |
| காருகோலரிசி | ,, | 2¼ |
| கொத்தமல்லி | ,, | 3 |
| ஈருள்ளி | ,, | 5 |
| வெள்ளைப்பூண்டு | ,, | 3 |
| மிளகாய்வற்றல் | ,, | 3 |
| * சோம்பு | ,, | 5 |
| இந்துப்பு | ,, | 1 |
| கண்டங்கத்திரிவேர் | ,, | 6 |
| வேலிப்பருத்திவேர் | ,, | 7 |
| கொமட்டிவேர் | ,, | 11 |
| கடுகு | ,, | 5 |
| சிறுநெல்லிவேர் | ,, | 3½ |
| கொழுஞ்சிவேர் | ,, | 3 |
| நத்தைச்சூரிவேர் | ,, | 3 |

இந்த வேர்களை நிழலிலுலர்த்தி யிடித்துப் பொடிசெய்து மேற்படி மருந்துகளையும் இடித்துப் பொடிசெய்து ஒன்றாய்க் கலந்து பிரண்டையை இடித்து சார்பிழிந்து அந்தச் சாரைவிட்டு இந்தப் பொடிகளையும் பிசைந்து மாங்காய்ப் பிரமாணமாக உருண்டைசெய்து ஒரு மண்பாண்டத்தில் வைத்து வைக்கவும். மேற்படி பிரண்டை ரசமுழுதும் மருந்துடன் சேர்ந்து காய்ந்தபின்பு அதில் பவ்வத்து

* சோம்பு என்பது நட்சத்திரச்சீரகம்.

உண்டையாக எடுத்து ஒரு மண்பானையில் போட்டு நொறுக்கி அதற்குப் போதுமான சாராயம் விட்டுப் பிசைந்து நார்த்தங்காய்ப் பிரமாணமாக உருண்டை செய்து மண்பானையில் வைத்துக்கொண்டு ஒருநாள் விட்டு மறுநாளிரவு உள்ளுக்குக் கொடுத்துவர வேண்டும் இம்மருந்தினால் தினந்தோறுந் தின்கிற தீனி சாதாரணமாய் ஜீரணமாகி அதனால் மாடு புஷ்டியாகவும் விசேஷமாய் வியாதிகள் உண்டாகாமலிருக்கவும் ஹேதுவாகும்.

## * அலரிவேர் லேகியம்

| | | |
|---|---|---|
| அலரிவேர் | பலம் | 20 |
| பேய்க்குமட்டிவேர் | ,, | 20 |
| ஊமத்தைவேர் | ,, | 20 |
| எட்டிக்கொட்டை | ,, | 1 |
| ஜாதிக்காய் | ,, | 2½ |
| ஜாபத்திரி | ,, | ½ |
| கிராம்பு | ,, | 1 |
| ஏலம் | ,, | 1 |
| அபினி | ,, | ¼ |

இதுகளையெல்லாம் பொடிசெய்து அதற்குப் போதுமான நெய்விட்டு அதிரசபாகம்போல் கிளரி வைத்துக்கொண்டு பாக்குப் பிரமாணங் காலமே காலமே கொடுத்துவர வேகமுண்டாகும். இந்தப் படி எப்பொழுதுங் கொடுத்து வரலாம்.

## * சவாரிலேகியம்-நிஜாம்முறை

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த கெஞ்சா | பலம் | 20 |
| மிளகு | ,, | 10 |



| | | |
|---|---|---|
| சாதிக்காய் | பலம் | 5 |
| கசகசா | ,, | 5 |
| மருட்டிமொக்கு | ,, | 5 |
| வெல்லம் | ,, | 40 |

இதுகளை ஒன்றாய்ச்சேர்த்து யிடித்துப் 10-பலம் நெய்விட்டுப் பிசைந்து புன்னைகொட்டைப் பிரமாணமுருட்டி வைத்துக்கொண்டு சவாரிபோகும்போது கொடுக்கவேண்டும்

### 2. இதுவுமது

| | | |
|---|---|---|
| அபினி | பலம் | 1 |
| சாதிக்காய் | ,, | 2 |
| மருட்டிமொக்கு | ,, | 1 |

இதுகளை இடித்து நெய்விட்டுப் பிசைந்து வைத்துக்கொண்டு சவாரிபோகும்போது ஒரு ரூபாயிடை கொடுத்துவரவேண்டும்.

## * அதிக லாகிரியானுல் முரிப்புவகை

எலுமிச்சம்பழம், ஈருள்ளி இரண்டு தினுசும் நெய்யில் கலந்து கொடுக்கவேண்டியதுந் தவிர புளிச்ச தண்ணீருங் குடிக்கச் செய்யவேண்டும் சாந்தமாகும்.

குறிப்பு:—இவ்விரண்டுவகை லேகியமும் போதையை உண்டாக்கத் தக்கதுகள் ஆனதால் புஷ்டியாயுள்ள மாடுகளுக்கு மட்டுங் கொடுக்கலாம். துர்ப்பலமுள்ள மாடுகளுக்கு கொடுத்தால் லாகிரி தாங்காமற் கீழே விழுந்துவிடும்.

புஷ்டியாயுள்ள மாடுகளுக்கு கொடுக்கிற விஷயத்திலும் வண்டி ஓட்டுகிறவன் ஜாக்கிரதையாக இருக்கவேண்டியது.

## * லேப்பு

மாடு அதிகதூரஞ் சவாரி போனதினால் உண்டான கால்கடுப்பு இரத்தக்கட்டுக்கு அடியிற்கண்ட பரிகாரஞ் செய்ய வேண்டும்.

கோடைதண்ணீரிற் கொஞ்சம் வெள்ளாட்டுச் சாணியை அரைத்துக் கலக்கிக் கொதிக்கவைத் திறக்கி இளஞ்சூட்டுடனே மாட்டின் சரீரமுழுக்க காயக்காய இரண்டு மூன்றுதரம் அடிக்கவேண்டும். மறுநாள் பெரிய பாத்திரங்களில் வெந்நீர் போட்டு வைத்துக்கொண்டு கை பொருக்கும்படியான சூட்டுடனே தகரமல்லது லேசான போகிண்ணத்தினாற் கோறி மாட்டின் நாலுசந்துகள் நெஞ்சுக்கொழுந்து மற்றுஞ் சரீரமுழுக்கவும் நன்றாய் அடிக்கவேண்டும். மூன்றாம்நாட்காலமே குளிர்ந்த தண்ணீற் கொண்டுபோய் ஒருமணிநேரம் நிறுத்திக் குளிப்பாட்ட வேண்டியது

அப்படிக் குளிப்பாட்டின மறுநாள் அல்லது இரண்டாநாள் உள்ளுக்கு இதனடியிற் கண்ட மசாலா கொடுக்கவேண்டும்.

| | | |
|---|---|---|
| மிளகு | பலம் | 4 |
| திப்பிலி | ,, | 1 |
| நறுக்குமூலம் | ,, | 2 |



இந்த மூன்று மருந்துகளையும் ஒன்று இரண்டாக இடித்து ஒரு மண்பாத்திரத்திற் போட்டு வெற்றிலை பலம்-2 கூடப்போட்டு குறுணித்தண்ணீர் விட்டு முதல் நாளிராத்திரியே தீப்போட்டு மறுநாள் காலையில் ஒரு படியாக வற்றவைத்து இறுத்து அந்த கஷாயத்திற் கோழிமுட்டை 25 அல்லது 40 உடைத்துவிட்டு முக்காற்படி நல்லெண்ணெயுங்கூட விட்டு இரண்டு மாடுகளுக்கு கொடுக்கவும். சாயங்காலங் கொஞ்சம வெந்நீர் குடிக்கவிடவேண்டும் மூன்றுநாள் குளிர்ந்த ஜலத்தில் ஒருமணிநேரம் நிறுத்தி குளிப்பாட்டவேண்டும் அன்றுமுதல் விசேஷ தீவனம் வைக்கலாம். நாலாநாள்முதல் வண்டி, ஏர் முதலானதிற் கட்டலாம் கால்கடுப்பு லேசாயிருக்கிற விஷயத்தில் மேல்கண்டபடி லேப்பு அடித்தாற்போதும். இந்த மசாலா மேற்படி லேப்பு அடித்து சிலநாளைக்குப் பின்புங் கொடுக்கவும்.

## * கண்டங்கத்திரிக்காய் லேப்பு

கண்டங்கத்திரிக்காய், முள் முருக்குக்காய், ஆமணக்குமுத்து இம்மூன்றையு மிடித்துப் பெரிய பாத்திரத்திற் போட்டுப் போதுமான தண்ணீர் விட்டு வேகவைக்கவேண்டியது கொதிக்கின்ற சமயத்தில் கேழ்வரகுமாவு, கோதுமை மாவு, கடுகுப்பொடி, † கரியபவளப்பொடி இதுகளையும் போட்டு நன்றாய் கிண்டி வேகவைத்து கீழேயிறக்கி வைத்துக்கொண்டு அதிற்கொஞ்சம் நல்ல தயிரை

† கரியபவளமென்பது-மூசாம்பரம்.

விட்டுக் கிண்டி இளஞ்சூட்டுடனே மாட்டின் சரீர மெல்லா மடிக்கவேண்டியது மறுநாள் மேலே சொல்லியிருக்கின்ற விதப்படி வெந்நீரடிக்க வேண்டும். மூன்றுநாட்காலமே குளிர்ந்த தண்ணீரிற் கொண்டுபோய் ஒருமணிநேரம் நிறுத்தி குளிப்பாட்ட வேண்டியது.

## * வாய் கழுவுதல்

| | | |
|---|---|---|
| கஸ்தூரிமஞ்சள் | பலம் | ½ |
| வால்மிளகு | ,, | ¼ |
| மிளகு | ,, | 1 |
| காட்டுசீரகம் | ,, | 1 |
| கருஞ்சீரகம் | ,, | 1 |
| வசம்பு | ,, | ¼ |
| அக்கராகாரம் | ,, | ½ |
| கறியுப்பு | ,, | 8½ |

இவைகளில் உப்பு தவிற மற்றதை ஒன்று இரண்டாக இடித்து உப்பையுஞ் சேர்த்துப் பதக்குத் தண்ணீரிற்போட்டு கொதிக்கவைத்து அர்தச் சக்கையில் மாட்டிற்கு ஒருபிடி உள்ளுக்குக் கொடுத்து மற்றதை கொஞ்சமாக எடுத்து நாக்கில் நன்றாய் அழுத்தித் தேய்த்து மேற்படி வெந்நீரை விட்டுவிட்டு வாயை நன்றாய் கழுவவேண்டும். இத்தப்படி மாதம் இரண்டுதடவை செய்யவேண்டும் இதினாற் கபம், கோழைகள் வெளியாகவும், பல்லிற் சேரப்பட்ட காரை வெடிபடவும் வாயிலுண்டாகுந் துற்கந்தம் நீங்கவும் நாவறளை முதலான வியாதியில்லாமலிருக்கவும் ஏதுவாகும்.

லேகியவகுப்பு முற்றிற்று.


உ

கடவுள் துணை

# வியாதியும் பரிகாரமும் அறியும் வகை

## காப்பு

முத்திவழி தனையறிந்து வாழுங்கும்ப
முனிராம தேவரிடைக் காடர்பின்னும்
சித்தசெனர் வெவ்வேறாய் மகிழ்ந்துசொல்லிச்
சிறந்திலகு மாட்டின்வா கடத்தையெல்லாம்
நித்தியமும் பாரிலுள்ளோர் மகிழவேண்டி
நேசமுட னுரைசெய்தே யச்சிற்போடச்
சத்திசிவன் புதல்வராய் வந்துதித்த
தந்திமுகன் பன்னிருகை செவ்வேள்காப்பே.




நாவிந்தநமசிவாயா நாயுருவிநமசிவாயா
நாகம்போற்சீறி நமன்போலவாரவனை
நாவுருவத்தைச்ச நாயுருவிசாளிசுவா.

## புல்லுந் தண்ணீரும் ஓதிக்கொடுக்க சக்கரம்

ஓம் மஹா கணபதயே நமஹா.

நயவசிம்.
நயவசிம்.
மயசிநவ.
நயவசிம, நய
வசிம்.

| | | | |
|---|---|---|---|
| 12 | 15 | 19 | 5 |
| 18 | 6 | 11 | 16 |
| 7 | 21 | 13 | 10 |
| 14 | 9 | 8 | 20 |

மநயவசிம
நயவசி
சிநவமய
நயவசிமநயவ
சிமந

சிமநயவசிமநயவ
வமயசிந
நயவசிமநயவசிம்

வசிமநயவசிமநய
யசிநவம
மநயவசிமநயவசி

ஓம் -மாதக்கி - ஓம் பரமேஸ்வரி - பார்வதி - இலட்சுமி-கொம்போடே வந்த கோமாரி - அழல் வெக்கை, சீதவெக்கை, தோன்றும் எப்பேர்ப்பட்ட வியாதிகளெல்லாம் நானோதிய புல்லோடும் தண்ணீரோடும் போகப்போக சுவாகா.

சாதாரணமாய் எல்லா மாடுகட்கும்

## தண்ணீர் ஓதிக்கொடுக்க மந்திரம்

எட்டுதிக்குங் கட்டினேன், ஏழு கிரகத்தையுங் கட்டினேன், பத்துதிசையுங் கட்டினேன், படமெடுத்தாடும பாம்பையுங் கட்டினேன், கொல்ல வந்த கூர்வாள் கூர்பரியை கட்டினேன், வடக்கே போகின்ற வடமண்டலமுங் கட்டினேன், அழைக்க எதிர் வாரீர் சிவாசிவா சுவா சுவாமி ஆணை நில்.



## அடைப்பன் நோய்

செய்குணம் - பட்படென ஆடும். திகைத்து நிற்கும். பலகால் நீர்விடும்.

மருந்து - கொன்றையிலையும் வெற்றிலையும் அரைத்து வெண்ணீரில் கலக்கிப் புகட்டவும்.


இந்தப்படிச்
சுடவும்

மருந்து - குமட்டியிலையும் கொழுஞ்சி யிலையும் கீழ்வாய் நெல்லியிலையும் அரைத்து காடியிற் கலக்கி உள்ளுக்குக் கொடுக்கவேண்டும். வெந்நீர் வைக்கவும்.

நசியம்-சிறுகீரை குப்பைமேனி தைவேளை வெங்காயம் வெள்ளைப்பூண்டு வசம்பு மிளகு சுக்கு இவைகளைச் செரியாகமாய் வைத்துக்கொண்டு சீலையிற் பொட்டளங் கட்டி மூக்கில் நசியம் விடவும்.

* வேறுநசியம்-முகம் நறுக்கும் உடல்வீங்கும் அசந்து நிற்கும்.

பசுமாட்டுக்கு இடதுபாரிசமும்
காளை மாட்டுக்கு
வலதுபாரிசமும் இந்தப்படிக்கு
சூடுபோடவும்



வேறு

நின்று நின்றிளைக்கும் நிலைதடுமாறும் சிறு செருமலாய்ச் செருமும்.

## நிவர்த்தி

| | | |
|---|---|---|
| கோழைக்கிழங்கு | பலம் | 1 |
| வெந்தயம் | ,, | 1 |
| வெள்ளுள்ளி | ,, | 1 |
| வசம்பு | ,, | 1 |

இவைகளை யரைத்துக் கவளமிட்டிதனடியிற் கண்டிருக்கிற பிரகாரம் நசியஞ்செய்யத் தீரும்.

## மேற்படி வியாதிக்கு நசியம்

நெரிஞ்சிக்கொழுந்து
சீந்திக்கொழுந்து
வேலிப்பருத்திவேர்
கொல்லங் கோவைக்கிழங்கு

இவைகளைச் சிறுநீர்விட்டுத் தட்டி செவிமூக்கில் நசியஞ்செய்யத் தீரும்.

## வேறு

கட்டுத்தறியை அடிக்கடி முட்டிக்கொள்ளும்.

## நிவர்த்தி

பூவரசன்விரையை பொடிசெய்து உரிவெண்ணெயிற் போட்டுக் கசக்கி சிரசில் மூளைக்குச் சரியாய்ப் பூச உடனே குணங்கொடுக்கும்.

## வேறு

நாக்குவீங்கி நாக்கில் தண்ணீர் கழன்றுவிழும்.

மாட்டுவாகடம்

## நிவர்த்தி

புன்கம்பழத்தை வெந்நீர்விட்டரைத்து உளுக்கு கொடுக்க உடனே குணங்காட்டும்.

## வேறு

பூவரசன்விரை-என்று இவ்விரண்டையும் வெந்நீர் வார்த்தரைத்துக் கொடுக்கவும்.

## வேறு

வயிறுவீங்கும் மயிர்சிலிர்க்கும் தலையை தாழ்த்திக்கொண்டே நடக்கும் மேயாது.

## நிவர்த்தி

வெதுப்படைக்கி சங்கங்குப்பி மிளகு இவைகளை யரைத்துக் கொடுக்கவும்.


## வேறு

கிடையாக்கிடக்கும் தண்ணீர்போலக்கழியும்

## நிவர்த்தி

மிளகு இலுப்பைப்புண்ணாக்கு அவுரிசாற்றிலரைத்துக் கொடுக்கவும்.

இந்தப்படி தலையிற் சுடவும்




## பூட்டடைப்பான் நோய்

* செய்குணம்-திட்டுத் திட்டென்றுமுக்கும். திரும்பிப் பாராது திகாப்படும். கொஞ்சநேரஞ் சென்றபின் நாக்குங் குளிர்ந்துபோகும்.

மருந்து - கொஞ்சமிளகை வாயிற்போட்டு மென்று மாட்டினது கண்களிலுங் காதுகளிலும் வாயிலும் பவனவாயிலும் உடனே ஊதவும். செருப்படி இலையை யிடித்துப் பிழிந்து சரீரமெங்குந் தவாலைபோடவேண்டும். பிரேதஞ்சுட்ட மூட்டம் பிரிக்குமுன அதற்குள் அஸ்தியுடனிருக்கிற சாம்பலைக் கொண்டுவந்து அதில் ஒரு மாங்காயளவு அரைப்புட்டி சாராயத்திற் கலக்கிக் கொடுக்கவேண்டும். குடிக்க வெந்நீர்விடவும்.

இருவிலாவிலும் நெஞ்சிற் குருக்காகச் சூடுபோடவும்.



அல்லது - மிளகு வெத்திலை உப்பு மூன்றையும் வாயிற்போட்டு மென்று நாசியிலூதவேண்டியது மிளகாய் வத்தல் பலம்-1 இலுப்பைப் பிண்ணாக்கு பலம்-½ கடல்நுரை பலம்-¼ சிறுநீர்விட்டு அரைத்து கால்படி சிறுநீரிற் கலக்கிக் கொடுக்கவும்.

### 2 இதுவுமது

* செய்குணம் - மயிர்சிலிர்க்கும் செவிதாழும் கண் சிவந்திருக்கும் கண்சிறுக்கும் வயிறு ஊதும்



வாய்திறவாது தீவனந்தின்னாது காடியைத் தாழப்போடும் மூச்சுத் திட்டுத திட்டென மண்ணதிரவிடும்.

| | | |
|---|---|---|
| * மருந்து - வெள்ளைப்பூண்டு | பலம் | 1 |
| வசம்பு | ,, | ½ |
| சுக்கு | ,, | 1 |
| இலுப்பைப் பிண்ணாக்கு | ,, | ¼ |
| சிறுதும்பை | பிடி | 1 |
| குப்பைமேனி | பிடி | 1 |
| தைவேளை | பிடி | 1 |
| நொச்சியிலை | பிடி | 1 |


இவ்வளவு மொன்று பிடித்துக் காடி படி 2-ல் கலக்கிக கொடுக்கவேண்டும் குடிக்க வெந்நீர்விடவும் இருவிலாவிலுஞ் சூடுபோடவும்.

### 3. இதுவுமது

* செய்குணம் - நாலுநாலுவ திடுகிடெனப் பதறும் நெஞ்சுவலிக்கும் விழுந்தெழுந்திருக்கும் மண்ணைக்கவ்வும் மாக்குமாக்கென்று கதறும்.

மருந்து-வேலிப்பருத்தியிலையுஞ் சிறுகுருஞ்சா இலையுங் கொத்தான் கொளுஞ்சியிலையும் சிந்தியிலையும் முடக்கத்தானிலையும் இடித்து வகைக்குக் கால்படி சாறு பிழிந்து கொடுக்கவேண்டும். குடிக்க வெந்நீர்விடவும்.

இருவிலாவிலுஞ் நெஞ்சிற்குருக்காகவும் சூடுபோடவும்



வேறு

மூக்கும் குன்னி அலைந்தலைந்துகொண்டுநிற்கும்.

நிவர்த்தி

ஊமச்சியை உயிருடன் கொண்டுவந் திடித்துப்

| | | |
|---|---|---|
| பிழிந்தசாறு | படி | ¼ |
| தேங்காய்ப்பால் | ,, | ¼ |

இவைகளை யொன்றாய்க்கலந்து புகட்டவும் இந்தபபடி மூன்றுநாள் கொடுக்கத் தீரும்.

இந்தப்படிக் கடூ [illegible] வாயிற்சுடவும் 

வேறு

திட்டுத் திட்டென்று மூக்குந் திரும்பிப்பாராது.

நிவர்த்தி

ஐயுங் - கிலியும் - சவ்வும் - சிவாயநமாவென்று இயானித்துக்கொண்டு எருக்கம்பால் ஆறுதடவை ஷை மாட்டின் முதுகிலடித்து மிளகைமென்று அபான வாயிலுங் காதிலும் ஊதத்தீரும்.

வேறு


முன்னங்காலும் பின்னஞ்சந்தும் வீங்கும்.

| | | |
|---|---|---|
| * மருந்து - முப்புரமெரித்தான் | பலம் | 1 |
| குளப்பாலைவேர் | ,, | 1 |

இரண்டையும் அரைத்துப் பகலின்பாலிற் கொடுக்கவும் வியாதி தீரும்.



அமுக்கிருவேர் வசம்பு பூலாத்திவேர் சிற்றகத்தியும் அரைத்து மேல் பூசவும்.

இரண்டு தொடையிலும் சூடுபோடவும். 

வேறு

பிரண்டைக்கொழுந்து பிடி 4


இதை யரைத்துக் காடியிற்கலக்கி மூன்றுநாள் புகட்டத்தீரும்.

## முன்னடைப்பன் நோய்

* செய்குணம் - முன்னங்கா லிரண்டையுந் தெத்தி வைக்கும் வாய் அசையிடாது இரண்டுகாலும் நடுக்கும் ராசிவொக்கும் யிரைதின்னாது.

* மருந்து - இலுப்பைப் புண்ணாக்கு மஞ்சக்காரைத் தொலி வகைக்கு எலுமிச்சங்காயளவு அரைத்து கோடைக்காலத்துநீர் படி ஒன்றில் கலக்கி உள்ளுக்குக் கொடுக்கவேண்டும்.

* நசியம்-கொஞ்சம் மிளகும் வெள்ளைபூண்டு மரைத்து பேய்ப்பீர்க்கஞ்சாறும் சிறுநீருஞ் சேர்த்துக் கலக்கி வடிகட்டி வைத்துக்கொண்டு கண்களிலும் மூக்கிலும் நசியும் பண்ணத்தீரும் குடிக்க வெந்நீர்வைக்கவும்.

இடதுவிலாவிற் சூடவும் 

## 2. இதுவுமது

* செய்குணம் - திகைத்துத் திகைத்து நிற்கும் வயிறாதும் நாலுகாலுந் தள்ளும் பலபலென நீர் விடும் செவிதாழும்.

* மருந்து - சறக்கொன்றையிலை வெற்றிலை மஞக்காரைத்தொலி வகைக்கு மாங்காயளவு அரைத்து ஒருபடி வெந்நீரிற்கலக்கி கொடுக்க வேண்டும்

* அல்லது -

| | | |
|---|---|---|
| சுக்கு | பலம் | 1 |
| மிளகு | ,, | 1 |
| திப்பிலி | ,, | 1/4 |
| காயம் | ,, | 1/4 |
| வெள்ளைப்பூண்டு | ,, | 1 |
| வசம்பு | ,, | 1/2 |

குப்பைமேனி தைவேளை வெள்ளருகு வகைக்குப்படி-1 எல்லா மிடித்துச்சேர்த்து கவளங்கொடுக்கவேண்டும் குடிக்க வெந்நீர்விடவும் இடது விலர்விலும் நெஞ்சுக் கொளிந்திற் சூடுபோட வேண்டும்.

## 3. இதுவுமது

* செய்குணம்-முன்னங்கால் நடுவே வீங்கும் திகரப்படும்.

* மருந்து-ஓமம் பலம்-1 அரைத்து கோளியவரைச் சாறுபடி அரையிற் கலக்கிக் கொடுக்கவேண்டும் குடிக்க வெந்நீர் விடவும்

## 4. இதுவுமது

* செய்குணம் - அறுபது நாழிகையு மிடைவிடா மற்றிகரப்படும்.




* மருந்து-

| | | |
|---|---|---|
| மிளகு | பலம் | 1 |
| நன்னாரிவேர் | ,, | 2 |
| பெருந்தும்பையிலை | பிடி | 1 |
| சங்கங்குப்பியிலை | ,, | 1. |

இவ்வளவு மிடித்து நெய்விட்டுப் பிசைந்து கவளங் கொடுக்கவேண்டும்

புத்துமண்ணும் வெள்ளாட்டுச் சாணியுஞ் சேர்த்துக் கொதிக்கவைத்து மேலே பூசவேண்டும்.

இந்தப்படி இடதுவிலாவிலும் நெஞ்சுக்கொளுந்திலும் சூடுபோடவும்.




## வேறு

வயறாதுந் திகைத்துநிற்கும் செவிதாழும் படபடத்து நடுங்கும் நாலுகாலுந் தடுமாறும் அடிக்கடி நீர்விடும்.

பருத்தியிலையும் குருஞ்சாயிலையும் சமமாயிடித்து அதனுடைய நீரிற்கலக்கி வுள்ளுக்குக் கொடுக்கவும்.

இரண்டுவிலாவிலுஞ் சூடுபோடவும்



## வேறு

வயறாதும் இரைதின்னாது செவிதாழும்.

## நிவர்த்தி

| | | |
|---|---|---|
| மனத்தக்காளிச்சாறு | படி | 1/4 |
| கருநொச்சிச்சாறு | ,, | 1/4 |

| | | |
|---|---|---|
| ஆடாதோடைச்சாறு | பலம் | ¼ |
| சீரகம் | ,, | 1 |
| வெள்ளுள்ளி | ,, | 1 |
| வசம்பு | ,, | 1 |
| ஓமம் | ,, | 1 |
| நெத்திலிக்கருவாடு | ,, | 1 |

ஷெ சாறுகளை யொன்றுய்க் கலந்ததில் மற்ற மருந்துகளை யரைத்துப்போட்டுக் கொடுக்கத் தீரும்.

வேறு

| | | |
|---|---|---|
| நெத்திலிக்கருவாடு | பலம் | 10 |

இதையரைத்துக் காடித்தண்ணீரிற் கலக்கிப் புகட்டத்தீரும்.

வேறு

| | | |
|---|---|---|
| மஞ்சணத்திக்கொழுந்து | பிடி | 4 |
| ஓமம் | பலம் | 2 |
| வெள்ளுள்ளி | ,, | 2 |
| வசம்பு | ,, | 2 |
| சுக்கு | ,, | 2 |

இவைகளை யரைத்து காடியிற் கலக்கி புகட்டத் தீரும்.

---

## முன்னடப்பன் பின்னடைப்புக்குங் கொடுக்கும் மருந்துகள்

| | | |
|---|---|---|
| வெருகங்கிழங்கி | பலம் | 3 |



| | | |
|---|---|---|
| இலுப்பைப்பிண்ணுக்கு | ,, | 3 |
| மிளகு | ,, | 3 |

இதுகளை யரைத்து கோழியவரையிலைச் சாற்றில் கலந்துக்கொடுக்கவும். இந்தப்படி மூன்றுநாள் கொடுக்கத்தீரும்.

வேறு

| | | |
|---|---|---|
| பிரண்டை | பலம் | 5 |
| கோழியவரை | ,, | 5 |
| கரியுப்பு | ,, | 5 |
| கோழிக்காரம் | ,, | 5 |
| சுக்கு | ,, | 5 |

இவைகளை யரைத்து வேப்பெண்ணையில் மத்தித்துக் கொடுக்கவும.


---

## பின்னடைப்பன் நோய்

* செய்குணம் - பின்னங் துடையும் பவனவாயும் அடைக்கவீங்கும் கடைக்கண்ணாலே தண்ணீர் வடியும் கண்குழியும் தீனிதின்னாது மேலே சுடும் காலைத்தூக்கும்.

* மருந்து - முருங்கைப்பட்டை வெள்ளைப்பூண்டு வகைக்கு மாங்காயளவு வசம்பு எலுமிச்சங்காயளவு இரண்டையும் அரைத்து ஒருபடி காடியிற் கலக்கிக் கொடுக்கவேணும்.

இருவிலாவிலும்
சூடுபோடவும்



## 2 இதுவுமது

* செய்குணம்-பின்னங்கால் நடைகூடாது நீர்வலம் இறங்காது வயிற்றில் வலிகாணும் படுத்துப் படுத்து எழுந்திருக்கும்.

| | | |
|---|---|---|
| * மருந்து - மஞ்சள் | பலம் | 1 |
| கஸ்தூரிமஞ்சள் | ,, | 1 |
| அக்கராக்காரம் | ,, | ½ |
| பெருங்காயம் | ,, | ¼ |
| சுக்கு | ,, | 2 |
| குரோசானிஓமம் | ,, | 1 |
| கடுகு | ,, | 1 |
| திப்பிலி | ,, | ¼ |
| மிளகு | ,, | 2 |
| மிளகாய்ப்பழம் | ,, | 1 |
| வெள்ளைப்பூண்டு | ,, | 2 |

எருக்கலாம்பூ ஒருபிடி இவ்வளவு மிடித்து சாராயம விட்டுப்பிசைந்து கவளமாகக் கொடுக்க வேண்டும். இடதுகடை வயிற்றிற் சூடுபோட வேண்டும்.

## 3 இதுவுமது

* செய்குணம் - சாணிபோடாது வயிறாதும் தீனி தின்னாது மேலீ வீங்கும் மிருந்து படுக்கும்.

* மருந்து-துளுசுபாக்கு பலம்-1 கடுக்காய்த்தோல் பலம்-1 இம்மருந்து இரண்டையும் அரைத்து நன்றாய்ச்கழுவின கற்றாழஞ்சோறு ஒருதேங்கா



யளவு சேர்த்து நாலுபடி வெந்நீரிற்கலக்கிக் கொடுக்கவேண்டும். கையில் நல்லெண்ணை யைத் தடவிக்கொண்டு பவனவாய்சுகுள்விட்டு எருவை யெடுக்கவும் குடிக்க வெந்நீர்விடவும்.

இடது விலாவிலும் நெஞ்சைக் கட்டி சூடு போடவேண்டியது | | }

| | | |
|---|---|---|
| அல்லது - வெள்ளைப்பூண்டு | பலம் | 1 |
| வசம்பு | ,, | 1 |
| குப்பைமேனியிலை | பிடி | 2 |
| கோழியவரையிலை | ,, | 2 |
| மனத்தக்கக்காளியிலை | ,, | 2 |

இவைகளை ஒன்றாய்ச்சேர்த்து அரைத்து வெந்நீரிற்கலக்கி உள்ளுக்குப் புகட்டவேண்டும்.


## 4 இதுவுமது

* செய்குணம்-கண்சிவக்கும் கண்ணீர்வடியும் பீளை சாடும் சாணிபோடாது நீர்விடும் பேய்முகமா யிருக்கும்.

| | | |
|---|---|---|
| * மருந்து - சுக்கு | பலம் | 1 |
| கடுகு | ,, | 1 |

காரையிலை, பேய்க்குமட்டியிலை, கொளுஞ்சி யிலை, நொச்சியிலைவகைக்குப் பிடி-3, இவைகளை யரைத்து மோரிற் கலக்கி உள்ளுக்குக் கொடுக்க வேண்டும்.

இந்தப்படிக்கு



இடதுவிலாவில் சுடவும்

## வேறு

எருவிடாது நீர்விடும். கண்சிவந்து நீர்வடியும் பீளைசாடும் பேய்முகமாகும்.

### நிவர்த்தி

| | | |
|---|---|---|
| களிப்பாக்கு | பலம் | 1 |
| கடுக்காய்தோல் | ,, | 1 |

கத்தாளஞ்சோறு ஒருதேங்காயளவு திரட்டி ஆறுபடி தண்ணீரிற் கலக்கிக் கொடுக்கத்தீரும்.

### நிவர்த்தி

| | | |
|---|---|---|
| காரையிலை | பிடி | 3 |
| கொளுஞ்சியிலை | ,, | 3 |
| பேய்க்குமட்டியிலை | ,, | 3 |
| நொச்சியிலை | ,, | 3 |
| சுக்கு | பலம் | 1 |
| கடுகு | ,, | 1 |

இவைகளையிடித்து மோரிற் கலக்கிக்கொடுக்கவும் இந்தப்படி மூன்றுநாள் கொடுக்கத்தீரும்.

இந்தப்படிக்கிடது விலாவிற் சுடவும்



## ஊதடைப்பன் நோய்

* செய்குணம் - வயிறாதும் இரைதின்றது செவி தாழும்.



* மருந்து - நெத்திலிக்கருவாடு பலம்-5, வெற்றிலை பலம்-¼, நன்றாயரைத்து இரண்டுபடி காடியிற் கலக்கி கள்ளூக்குக் கொடுக்கவேண்டும்.

| | | |
|---|---|---|
| * அல்லது - வெள்ளைப்பூண்டு | பலம் | 1 |
| ஓமம் | ,, | 1 |
| வசம்பு | ,, | ¼ |
| சீரகம் | ,, | ½ |
| கருவாடு | ,, | 1 |

இந்த நாலுதினுசுகளையும் ஒன்றாயரைத்து இத்துடன் மணத்தக்காளிச்சாறும் கருநொச்சிச்சாறும் ஆடாதோடைச்சாறு இம்மூன்றும் வகைக்குப்படி கால்வீதம் சேர்த்துக் கொடுக்கவும்.

இடதுவிலாவிற் சுடவும்



### 2 இதுவுமது

* செய்குணம் - வயிறாதும் எருவிடாது சுருக்கு சுருக்கென்று நீர்விடும்.
* மருந்து - கருத்தக்காக்கலங்கொடியை சமூலத்துடனே மாங்காயளவு இடித்து வசம்புபலம்-¼ அரைத்து ஒருபடி வெந்நீரிற்கலக்கிக் கொடுக்க வேண்டும். குடிக்க வெந்நீர் விடவும்.

இருவிலாவிலுஞ் சுடவும்



### 3 இதுவுமது

* செய்குணம் - வயிறுவீங்கு அசைந்து நிற்கும் நீருஞ்சாணியுங் கட்டிவிடும்.

| | | |
|---|---|---|
| * மருந்து - மஞ்சள் | பலம் | ½ |
| கஸ்தூரி மஞ்சள் | ,, | 1 |
| அக்கராக்காரம் | ,, | ½ |
| சுக்கு | ,, | 2 |
| காயம் | ,, | ¼ |
| குரோசாணிஓமம் | ,, | 1 |
| திப்பிலி | ,, | ½ |
| மிளகாய்ப்பழம் | ,, | 1 |
| மிளகு | ,, | 2 |
| வெள்ளைப்பூண்டு | ,, | 2 |
| எருக்கலம்பூ | பிடி | 1 |

இவ்வளவும சேர்த்து ஒன்ருயிடித்து அதற்கு போதுமான அரக்குச் சாராயம்விட்டு பிசைந்து கவளவாகச்செய்து உள்ளுக்குக் கொடுக்கவேண்டும் குடிக்க வெந்நீர்விடவும்.

இந்தப்படி இரண்டு விலாவிலுஞ் சூடுபோடவும் ஸ்ரீ

வேறு


வயிறாதும் வாயில் நீர்வடியும் திட்டுத் திட்டென்று முக்கும் சாணம் போடாது.

நிவர்த்தி

| | | |
|---|---|---|
| நெய்த்தொட்டாண்பழம் | பலம் | 5 |
| கோழிக்காரம் | படி | ¾ |

இவைகளை யரைத்து ஒருபடி காடியிற்கலக்கிப் புகட்டத்தீரும்.

இந்தப்படிக்கு இடது விலாவிற் சுடவும்





வேறு

வயிறூதுஞ் சாணம் போடாது

நிவர்த்தி

கருத்தக்காக்கணன் சமூலங்கொண்டுவந்து

| | | |
|---|---|---|
| இடித்துப்பிழிந்தசாறு | படி | ¼ |
| விளக்கெண்ணெய் | ,, | ¼ |
| பழம்புளி | பலம் | ½ |

ஷை சாற்றையும் எண்ணெயையு மொன்ருய்க் கலந்து அதில் புளியைக்கரைத்துப் புகட்டத்தீரும்.

இந்தப்படிக்கு இடதுவிலாவிற் சுடவும்



வேறு


சாணம்போடாது வயிறு பொருமும் இரை தின்னது உடல் வீங்கும்.

நிவர்த்தி

| | | |
|---|---|---|
| களிப்பாக்கு | பலம் | 3 |
| கடுக்காய் | ,, | 3 |
| கற்ருளைச்சோறு | ,, | 2½ |

இவைகளில் களிப்பாக்கையும் கடுக்காயையும் பொடித்துக் கற்ருளைச் சோற்றிற் போட்டுப் பிசைந்து வெந்நீரிற் கலக்கிப் புகட்டவும்.

இந்தப்படிக்கு இடதுவிலாவிற் சுடவும்



### வேறு

| | | |
|---|---|---|
| குப்பைமேனியிலை | பிடி | 2 |
| கோழியவரையிலை | ,, | 2 |
| மணத்தக்காளியிலை | ,, | 2 |
| வெள்ளைப்பூண்டு | பலம் | 1 |
| வசம்பு | ,, | 1 |

இவைகளை யரைத்துப் புகட்டத் தீரும்.

### வேறு

| | | |
|---|---|---|
| வசம்பு | பலம் | 2 |
| மஞ்சணத்திக்கொழுந்து | ,, | 5 |
| தாதுவளைவேர் | ,, | 5 |
| பழம்புளி | ,, | 3 |

இதுகளை யிடித்துக் காடியிற் கலக்கிப் புகட்டத் தீரும் இதற்கு முந்தின பிரயோகத்திற் சொல்லியபடிக்கு இடதுவிலாவிற் சுடவும்.

### வேறு

வயிறூதும் கண் சிவக்கும் வாயில் நீர் வடியும் இரை தின்னாது.

நிவர்த்தி

| | | |
|---|---|---|
| மதுக்காரைவேர்ப்பட்டை | பலம் | 5 |
| மிளகு | ,, | 2 |
| வெள்ளுள்ளி | ,, | 2 |

இவைகளை யரைத்துக் காடியிற்கலக்கிப் புகட்டத்தீரும் இந்தப்படி மூன்றுநாள் கொடுக்கத்தீரும்.

இந்தப்படிக்
கிடதுவிலாவிற் சுடவும்





## கொட்டடைப்பன் குணம்

கழுத்துக்கோணும் அரை மேய்ச்சலாய் மேயும்

நிவர்த்தி

இந்தப்படி கழுத்திலும் - உ உ உ
முதுகிலுஞ் சுடவும் உ உ உ
உ உ உ

---


## நெஞ்சடைப்பன் நோய்

* செய்குணம் - நெஞ்சு தடிக்கும் வாயிலிருந்து நீர் வடியும் செருமும்.

* மருந்து -

| | | |
|---|---|---|
| மிளகு | பலம் | 2 |
| திப்பிலி | ,, | ½ |
| வசம்பு | ,, | ¼ |
| வெள்ளைப்பூண்டு | ,, | 5 |
| காயம் | ,, | ¾ |
| குப்பைமேனி | பிடி | 1 |
| தைவேளை | ,, | 1 |
| வெள்ளறுகு | ,, | 1 |

இவ்வளவு ஒன்றாயிடித்து உருண்டைசெய்துக் கொடுக்கவேண்டும், குடிக்க வெந்நீர் விடவும்.



இந்தப்படி
இருவிலாவிலுஞ்
சூடு போடவும்.

## 2 இத்வுமது

* செய்குணம் - காதுகள் மடங்கித் தொங்கும் தலையிறக்கமாயிருக்கும் நாடி படபடவென்றடிக்கும் கொம்புகளுங் காதுகளுஞ் சிலவேளை சூடாயும் சிலவேளை குளிர்ந்தும் மாறிமாறியிருக்கும் சாதாரணமாய்ச் செருமல்காணும் மேல்மூச்சு வாங்கும் கண் ரெப்பைகளின் உள்தோல் இரத்தங்கட்டி உப்பியிருக்கும் ஏதோ ஒவ்வொரு வேளையில் படுத்திருந்தாலுஞ் சாதாரணமாய்ப் படுக்காது. கடைசியாய் வியாதிமுற்றிச் சுவாசக்குழியில் கெடுதியுண்டாய் சுவாசம் அதிகமாய் நாறும். எருதுகளை சவாரிகளிலும் மற்றவேலைகளிலும் அதிக ஓட்டம் ஓட்டுவதினாலும் குளிர், காற்று, மழையில் அடிபடுவதினாலும் இந்த வியாதியுண்டாகிறது.

* மருந்து - கர்ப்பூரம், பொட்டிலுப்பு, கரியபவளம், அபினி வகைக்கு அரையே அரைக்கால் ரூபாயிடைமூன்றும் ஒன்றாகச்சேர்த்து பொடி செய்து அதற்குப்போதுமான தேன்விட்டுப் பிசைந்து மூன்று உருண்டையாகச் செய்து நாள் ஒன்றுக்கு மூன்று வேளையுங் கொடுக்க வேண்டியது. அதிகமாய்ப் பேதியானல் மேற்படி கரியபவளத்தைத் தள்ளி மற்றதைப் போடவேண்டும். 2-ரூபாயிடை நேர்வாளக் கொட்டையை யரைத்து மூன்றுமாகாணி படி



தேங்காயெண்ணெயிற் கலக்கி ஒருமணிநேரங் கொதிக்கவைத்து இறக்கி வைத்துக்கொண்டு மார்புக்கு இரண்டு பக்கத்திலுங் கால்மணி நேரம் நன்றாயழுத்தி தேய்க்கவேண்டியது அந்த இடங் கொப்பளித்துவிடும்.

### வேறு

நெஞ்சடைத்துச்செருமும் வாயில் நீர்வடியும்.

### நிவர்த்தி

| | | |
|---|---|---|
| மிளகு | பலம் | 1 |
| சுக்கு | ,, | 1 |
| கோரக்கிழங்கு | ,, | 1 |

இவைகளைச் சிறுநீர்விட்டரைத்து பசுவெப்பிலாவது ஆமாக்கு நல்லெண்ணெயிலாவது குழப்பிக் கொடுக்கவும். இந்தப்படி மூன்றுநாள் கொடுக்கத் தீரும்.

### வேறு

| | | |
|---|---|---|
| மிளகு | பலம் | 1 |
| கோரக்கிழங்கு | ,, | 1 |


இவைகளை முன்போலரைத்துக் கொடுக்கத்தீரும்.

### வேறு

நெஞ்சு தடித்துச்செருமும் நாலுகாலும்பதரும்.

### நிவர்த்தி

மேற்சொல்லியமருந்தை மூன்றுநாள்கொடுத்து



இந்தப்படி நாலு கர்லிலுஞ்சுடவும்

### வேறு


நெஞ்சடைத்து நீர்பாயும் செருமும்

நிவர்த்தி

செருப்படி மிளகு
நாய்கடுகு சுக்கு

ஒருகளஞ்சிப் பிரமாணம் கூட்டி சிறுநீர்வார்த் தரைத்து ஆழாக்கு நெய்யுங்கூட்டி மூன்றுநாட் கொடுக்க சொஸ்தமாகும்.

இந்தப்படிக்கி
இரண்டு விலாவிலும்
சூடுபோடவும்.



---

## உள்ளடைப்பன் நோயின் குணம்

### வேறு

மயிர்சிலிர்க்கும் வாயில் நீர்வடியும் தூங்கிவிழும்.

நிவர்த்தி

| | | |
|---|---|---|
| அகத்தியிலைச்சாறு | படி | ½ |
| ஆவினெய் | ,, | ¾ |
| மிளகு | பலம் | 1 |
| சருள்ளி | பலம் | 5 |

இலை சாற்றையும் நெய்யையும் ஒன்றாய்க்கலந்து அதில் மற்ற மருந்தை யரைத்துப்போட்டு கலக்கிக் கொடுக்கவும் இந்தப்படி மூன்றுநாள் கொடுக்கத் தீரும்.



### வேறு

மிளகாய் பச்சைவெற்றிலை இவ்விரண்டையும் உறலில்போட்டு துவைத்து உள்ளுக்குக் கொடுக்க குணமாகும்.

---

## * நெளியடைப்பன் நோய்

* செய்குணம்-தீவனந்தின்னாது சாணி நெகிழ்த்துப் போடும் சரீரத்தை நெளிக்கும் சுருக்காக நடக்கும் விழும் எழுந்திருக்கும்.

| | | |
|---|---|---|
| * மருந்து - கடுகு | பலம் | ¼ |
| வெள்ளைப்பூண்டு | ,, | 1 |
| வெந்தையம் | ,, | 1 |
| மாதளம்பிஞ்சு | ,, | 4 |
| நவ்வற்கொளுந்து | ,, | 3 |
| சித்திரப்பாலடை | ,, | 7 |

இவைகளெல்லா மொன்றாய்ச்சேர்த்து அரைத்து நாலுபடி தேங்காய்ப்பாலிற் கலக்கி உள்ளுக்கு கொடுக்கவேண்டும்.

---

## * சங்கடைப்பன் நோய்

* செய்குணம் - அளிமேச்சல்மேயும் திகைத்து நிற்கும் கொஞ்சநாட் சென்றபின் கிடந்துசெருமும் இளைக்கும் அரைக்கண்போட்டுத்தூங்கும்.


| | | |
|---|---|---|
| * மருந்து - அரிதாரம் | பலம் | 2 |
| சீனி | ,, | 3 |

அரைப்படி சாராயத்திற்சேர்த்து உள்ளுக்குக் கொடுக்கவேண்டும்.

| | | |
|---|---|---|
| * நசியம் - திப்பிலி | பலம் | ¼ |
| மிளகு | ,, | ¼ |
| வெற்றிலே | ,, | ¼ |
| உப்பு | ,, | ½ |

கண்டங்கத்திரிப்பழம் 10 இவ்வளவு மரைத்துச் சிந்திபிலேச்சாற்றிற் கலக்கி வடிகட்டிக் காது மூக்கு இவைகளில் நசியம்பண்ணவும் குடிக்க வெந்நீர் விடவும்.

இந்தப்படி இருவிலாவிலும் சுடவும்



---

## * சதையடப்பன் நோய்


* செய்குணம் - நல்ல பசுமாட்டிற்றுவும் மூகம் வீங்கும் அழிமேய்ச்சல்மேயும் பலகாலுஞ் சுருக்கு நீர்விடும் நிலத்தைப் பரண்டும் தண்ணீர் அரைவாய்க்கொண்டு குடிக்கும் சாணி வரண்டு போடும்.

* மருந்து-வில்வயிலே பலம் 10 வல்லாரையிலே பலம் 7 அஞ்சு கடுக்காய்த்தோலு இவ்வளவு மொருபானையிற் போட்டு ஆறுபடி தண்ணீர்விட்டு மூடிக் கொதிக்கவைத்து ஒருபடி தண்ணீராக



வற்றினபின் யிறக்கி யிறுத்துக் கொடுக்க வேண்டும். குடிக்க வெந்நீர்விடவும். இருவிலாவிலுஞ் சூடுபோடவேண்டும்.

இந்தப்படிக்கு இரண்டு விலாவிலும் சூடுபோடவும்



---

## * சந்தடைப்பன் நோய்

* செய்குணம் - முன்னங்காலும் பின்னஞ் சந்தும் வீங்கும்.

* மருந்து - முப்புரமெரித்தான்வேர் பலம்-1 குளப்பாலைவேர் பலம்-1 இரண்டையு மரைத்து அரைப்படி பசுவின்பாலிற் கலக்கிக் கொடுக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| * அல்லது - மிளகு | பலம் | 1 |
| சுக்கு | ,, | ½ |
| திப்பிலி | ,, | ¼ |
| காயம் | ,, | அரிக்கால் |
| வசம்பு | ,, | ½ |
| மஞ்சள் | ,, | ½ |

குப்பைமேனி நைவேளை வெள்ளறுகு இம்மூன்று வகைக்குப்பிடி ஒன்று இவ்வளவு மிடித்து அரைப்புட்டி சாராயம்விட்டுப் பிசைந்து கவளம்

கொடுக்கலாம். ஒரு பெட்டைக்கோழி யிரத்தமும் அரைப்புட்டி சாராயமுஞ் சேர்த்துக்கொடுக்கலாம் பிரண்டையை யிடித்துச் சட்டியிற் போட்டு வறுத்துத் துணியிற்கட்டிச் சூட்டுடனே வீக்கத்தில் ஒத்தற் போடவும். அமுக்கிராவேர் வசம்பு சிற்றகத்தியிலை இவைகளை யரைத்துக் கொதிக்கவைத்து வீக்கத்திற் பூசவும் குடிக்க வெந்நீர்விடவும்.

வீங்கியிருக்கிற இடங்களில்
இந்தப்படிக்கு
சுடவும்




---

## * செருக்கடைப்பன் நோய்

* செய்குணம் - மயிர் சிலிர்த்திருக்கும் கண்களிற் பீளைசாடும் அடிவயறு ஊதிக்கொண்டிருக்கும் கிறுபூறென இளைக்கும்.
* மருந்து-சுக்கு பலம்-1 கோவைத்தண்டும் சுருள்ளியும் வகைக்கு மாங்காயளவு சுக்குடன்சேர்த்து அரைத்து பசுவின்மோர் படி ஒன்றில் கலக்கி உள்ளுக்குக் கொடுக்கத்தீரும்.

இந்தப்படிக்கு
இருவிலாவிலும்
சூடுபோடவும்





---



## * மூக்கடைப்பன் நோய்

* செய்குணம் - தீவனந்தின்னாது ஒருகாலில் நொண்டும் திக்குதிக்கென்று முக்கும் படுத்தால் எழுந்திராது.
* மருந்து-சுருள்ளி படி ½ வில்வயிலை நாடான்பருத்தி வகைக்கு மாங்காயளவு அரைத்து ஆட்டுமோர் படி ஒன்றில் கலக்கி உள்ளுக்குக் கொடுக்கவேண்டும்.

இந்தப்படிக்கு
இரண்டு
விலாவிலுஞ்
சுடவும்



---

## * வரட்டடைப்பன் நோய்


* செய்குணம் - கண்கள் சிவந்திருக்கும் வயிறூதும் மூக்கு அடைத்து நிற்கும்.

| | | |
|---|---|---|
| * மருந்து - சித்தகத்தியிலை | பிடி | 1 |
| வாகையிலை | ,, | 1 |
| சிவனார்வேம்பு | ,, | 1 |
| சரக்கொன்றையிலை | ,, | 1 |
| புங்கயிலை | ,, | 1 |

| | | |
|---|---|---|
| சிறுதும்பையிலை | பிடி | 1 |
| குப்பைமேனியிலை | ,, | 1 |
| தைவேளை | ,, | 1 |

இவைகளை யிடித்துச் சார்பிழிந்து அதில் வசம்பு பலம்-$\frac{1}{4}$, வெற்றிலை பலம்-4, புகையிலை பலம்-$\frac{1}{4}$ இவைகளை ஒன்றாயரைத்து மேற்படி சாற்றிற் கலக்கி அத்துடன் காற்படி சாராயமுங் கூட சேர்த்து உள்ளுக்குக் கொடுக்கவேண்டும் குடிக்க வெந்நீர் காட்டவும்.

இந்தப்படிக்கு இருவிலாவிலும் நெத்தியிலும் சுடவும்



---

## * விரட்டடைப்பன் நோய்


* செய்குணம் - ஆட்டுப்புழுக்கைபோற் சாணிபோடும். நடக்கமாட்டாது.

* மருந்து-வசம்பு பலம்-$\frac{1}{4}$ வெள்ளைப்பூண்டு பலம்-1 இவ்விரண்டையும் அரைத்து ஒருபடி வெந்நீரிற் கலக்கி உள்ளுக்குக்கொடுக்கவும், குடிக்க



வெந்நீர் வைக்கவேண்டும். அதிற் கொஞ்சம் வடிகட்டி நாசியில் நசியம் பண்ணவும்.

இந்தப்படிக்கு இருவிலாவிலும் சுடவும்




---

## * சரட்டடைப்பன் நோய்

* செய்குணம்-நாக்கைநீட்டும் உடல்பாக்கும் மூச்சு மூச்சென்று உடலை அலக்கும்.

* மருந்து - அத்திக்காய் படி-$\frac{1}{2}$, மஞ்சள் பலம்-$\frac{1}{2}$, மிளகு பலம்-1, திப்பிலி பலம்-$\frac{1}{4}$, இவைகளை யரைத்து இரண்டுபடி காடியிற்கலக்கிக்கொடுக்கவும்.

இப்படிக்கு இருவிலாவிலுஞ் சுடவும்



---

## * திரட்டடைப்பன் நோய்

* செய்குணம் - மாட்டின் வயிற்றில் ஒருபுறத்திற் கொஞ்சம் வீக்கம்போலும் புடைப்பாகவுங்

திரண்டுகொணும் தீனிதின்னாது தொண்டையில் அடைக்கும் எழுந்து நிற்கமாட்டாது கிடையுங் கொள்ளாது வருத்தப்படும்.

* மருந்து - பெருந்தும்பைச்சாறு படி-¼ சிறிதும்பைச்சாறு படி-¼ இவற்றில் சுக்கு பலம்-1 மிளகு பலம்-1 இவைகளை யரைத்து உள்ளுக்குக் கொடுக்கவேண்டும் குடிக்க வெந்நீர் விடவும் இந்த மருந்துகளையே சரீரமுழுதும் துவாலை போடவேண்டும்.

## * காத்தடைப்பன் நோய்

* செய்குணம் - உடம்பின் இடதுபக்கத்தில் வீக்கமுண்டாகும் அதைக் கையினாற் தட்டிப்பார்த்தால் டொங்டொங்கென்று கேட்கும் .மாடு வெகு வருத்தப்படும் அடிக்கடி எழுந்திருக்கிறதும் படுக்கிறதுமாய் அரட்டல் புரட்டலுமாய் இருக்கும் காலினால் வயிற்றை அடித்துக்கொள்ளும் மூச்சு அதிக தீவிரமாய்விடும்.

* மருந்து - கடுகு பலம்-7 பொடிசெய்து வைத்துக்கொண்டு அத்துடன் ஒருபலம் நெய்யும் வெந்நீர் படி-½ வார்த்து இரண்டையும் அத்துடன் சேர்த்துக் கலக்கி உள்ளுக்குக் கொடுக்கவேண்டும்.

## * குரட்டடைப்பன் நோய்


* செய்குணம் - அரைவாய்க்கொண்டு தீனிதின்னும் கழுத்தைக் கோணலாய் வைத்துக்கொண்டு நடக்கும்.



* மருந்து-காற்படி நத்தைச்சூரி விரையை நன்றாக இடித்து 4-கிரான் அரக்குசாராயத்திற் கலக்கி உள்ளுக்குக் கொடுக்கத் தீரும்.

* அல்லது-சீரகம் பலம்-1 ஏலம் பலம்-¼ சர்க்கரை பலம்-2 இவைகளையுமிடித்து உள்ளுக்குக் கொடுக்கலாம் குடிக்க வெந்நீர் விடவும்.

முதுகிற் சூடு போடவும



---

## * தாக்கடைப்பன் நோய்


* செய்குணம் - தீவனந் தின்னாது கொண்டைச் செவி யெடுத்துப்பார்க்கும் கண்ணையுருட்டி விழிக்கும் கடைக்கண்ணால் பார்க்கும் இரண்டு நாள் போனபிறகு வயிறுவீங்கி விழந்து கிடக்கும்.

* மருந்து-எலுமிச்சம்பழச்சாறு படி அரைக்கால், கண்டங்த்திரிச்சாறு படி அரைக்கால் வெள்ளைப்பூண்டு பலம்-5 இதையரைத்து மேற்படி சாற்றிற் கலக்கி உள்ளுக்குக் கொடுக்கவும், அதில் கொஞ்சம் எடுத்து வடிகட்டிக்கொண்டு கண்கள் காதுகள் மூக்கு இம்மூன்று யிடங்

களிலும் நசியம் செய்யவும் குடிக்க வெந்நீர் விடவும்.

---

இந்தப்படிக்கு
இருவிலாவிலுஞ்
சுடவும்



## * நாக்கடைப்பன் நோய்

* செய்குணம் - தீவனந்தின்னாது கழிஞ்சுபோம் தலையை உயர்த்திப்பார்க்கும் இரண்டு நாசிகளிலுஞ் சளிபோலேயும் வெள்ளையாகவும் உறைந்திருக்கும் நாக்குத் தடித்திருக்கும்.

* மருந்து - அத்திக்காய் படி-½ ஆவாரம்பட்டை பலம்-1 இலந்தைப்பட்டை பலம்-1 இம்மூன்றையுமிடித்து இரண்டுபடி காடியிற் கலக்கிக் கொடுக்கவேண்டும். அதிற் கொஞ்சம் வடிகட்டி நாசியில் நசியம் பண்ணவும் எருக்கிலையை அரைத்து சிறுநீரிற் கலக்கித் தவாலே போடவும் இடதுவிலாவிற் சூடவும்.

### வேறு

இரைதேடாது திகைத்து நிற்கும் நாக்குத் தடித்திருக்கும்.

### நிவர்த்தி

| | | |
|---|---|---|
| அத்திக்காய் | பலம் | 10 |
| ஆவரைவேர்ப்பட்டை | ,, | 10 |



இவைகளை இடித்துக் காடிவிட்டுப் பிசைந்து ஒருபடி சாறு பிழிந்து புகட்டத்தீரும்.

இந்தப்படி
இருகன்னத்திலும்
சுடவும்



## * கதவடைப்பன் நோய்

* செய்குணம்-வாய் திறவாமலிருக்கும் கண் சிவந்திருக்கும்

* மருந்து - இந்துப்பு பலம்-¼, சீனிக்காரம் பலம் - அரிக்கால் காயம் பலம்-½, வேப்பங்கொழுந்து பிடி-1 இவைகளை நன்றாயரைத்து வெந்நீர் அல்லது ஒருபடி பசுவின்பாலிற் கலக்கி உள்ளுக்குக் கொடுக்கவேண்டும்.

| | | |
|---|---|---|
| * அல்லது - சுக்கு | பலம் | 1 |
| மிளகு | ,, | ½ |
| திப்பிலி | ,, | ¼ |
| வசம்பு | ,, | ¼ |
| காயம் | ,, | ½ |

இவைகளை யரைத்து கழுதை மூத்திரத்திற் கலக்கிக் கொடுக்கவேண்டும், சாயங்காலம் வெந்நீர் காட்டவும்

கட்டத்தொண்டை மேலாக வலதுகால் கீழாக இழுத்துத் தலையைக் கட்டி சுடவும்.

### வேறு

கொம்பைசுற்றி வீங்கும் வாய் திறவாது கண் சிவக்கும்.

### நிவர்த்தி


| | | |
|---|---|---|
| இந்துப்பு | பலம் | ¼ |
| பெருங்காயம் | ,, | ¼ |

இவைகளை யரைத்து ஒரு பசுவின் பாலிற் கலக்கி புகட்டவும் இந்தப்படி மூன்றுநாள் கொடுக்கத் தீரும்.


இடதுபக்கம் மேல் தொண்டைமுதல் வலது கால்வரை யிழுத்து மூன்று சூடுபோடவும்.

அல்லது

இந்தப்படிக்கு
இருவிலாவிலுஞ்
சுடவும்



இந்தப்படிக்கு
கொம்பை சுற்றிச்
சுடவும்



வேறு

வாய்கிட்டுங் கண்சிவக்கும்.

நிவர்த்தி


| | | |
|---|---|---|
| இந்துப்பு | விராகனிடை | 2 |
| பெருங்காயம் | ,, | 2 |

இவைகளை பயனமாய்ப்பொடித்து காற்படி காடியிற் கலக்கிப் புகட்டத்தீரும்.

இந்தப்படிக்கு இருசன்னத்
திலுஞ் சுடவும்



இந்தப்படிக்கு
தலையைக் கட்டிச்
சுடவும்






## * மந்தடைப்பன் நோய்

* செய்குணம் - வாய்திறந்துந் தலைகாணியுந் தன்னைத் தானறியாமலுந் தீவனந் தின்னாமலு மிருக்கும்.

* மருந்து-வெதுப்படையும், ஒட்டடையும், வகைக்குப்பிடி ஒன்று, இடித்து ஒருபடி மோரிற் கலந்து கொடுக்கவேண்டும்.

புத்துமண்ணைக் கரைத்துக் காய்ச்சி மூன்றுநாள் தேகமுழுதும் பூசவும்.

இந்தப்படிக்கு
நெத்தியிற் சுடவும்




---

## * நீரடைப்பன் நோய்

* செய்குணம் - நீர்செறுத்து மூக்குமசாப்பிட்டு அலரும் குன்னிக்கொண்டு நிறகும்.

* மருந்து-ஊமச்சியை யிடித்து வடிகட்டிக்கொண்டு காற்படி வாழக்கிழங்குத தண்ணீர் அரைபடி அல்லது தேங்காய்ப்பால் அரைபடியிற கலக்கி உள்ளுக்குக் கொடுக்கத் தீரும்.

இந்தப்படிக்கு
இருகடைவயிற்றிலுஞ்
சூடுபோடவும்



---

* வேறு

ஏழு கடுக்காயும், கருஞ்சீரகமும், வசம்பும், கடுகும், நாமதாளியும், மஞ்சணத்தியிலையும், இந்த ஆறு தினுசுகளையும் தவைதது இத்துடன பழம் புளியும் கூட்டிக் காடியிற் கலக்கிக் கொடுக்கவும்.

இந்தப்படிக்கு போடவும் உ

---

## * கல்லடைப்பன் நோய்

* செய்குணம்-தீனி தின்னும் சாணியுங் குணமாகப் போடும். ஆனல் அசதியாக நிற்கும் கொஞ்ச நாளிற் கல்லுவந்து செருக்கும் பின்பு கோலிற் கட்டுப.

| | | |
|---|---|---|
| * பருந்து - வெள்ளைப்பூண்டு | பலம் | 1 |
| கடுகு | ,, | 1/4 |
| வெந்தையம் | ,, | 1 |
| மாதளம்பிஞ்சு | ,, | 3 |
| நவ்வற்கொழுந்து | ,, | 3 |
| சித்திரைப்பாலடை | ,, | 7 |

இவைகளை யரைத்து நாலுபடி வாழைக்கிழங் குச் சாற்றிற் கலக்கி கொடுக்கவேண்டும.

இந்தபடிக் கோலிற் குருக்கே மூன்று சூடுபோடவும் | | |

வேறு

இரத்தமாய் நீர்விடும் ஈரற்குலைப்புறம் வீங்கும்.



நிவர்த்தி

| | | |
|---|---|---|
| ஈருள்ளி | பலம் | 10 |
| மிளகாய்சந்தனம் | ,, | 1 |
| அதிமதுரம் | ,, | 1 |
| நற்சீரகம் | ,, | 1 |
| இலவங்கப்பட்டை | ,, | 1 |
| விருசங்கொழுந்து | பிடி | 3 |
| துத்தியிலை | ,, | 3 |

இவைகளை யரைத்து ஆவின் வெண்ணெயிலா லாவது மோரிலாவது கலக்கிப் புகட்டத் தீரும். இந்தப்படி மூன்றுநாள் கொடுக்கவும்.

வேறு

| | | |
|---|---|---|
| அத்திப்பிஞ்சு | படி | 1 |
| பருத்திப்பிஞ்சு | ,, | 1 |

இவ்விரண்டையும் மயனமாய் அரைத்து பசுவின் மோரிற் கலக்கிப் புகட்டத்தீரும். இந்தப்படி மூன்றுநாள் கொடுக்கவும்

இந்தப்படிக்கு இடது விலாவிற் சுடவும்



---

## ஈளை மூக்கடைப்பன் குணம்

இருபூரென்றிளைக்கும் கண்ணில் நீர்வடியும்.

நிவர்த்தி

| | | |
|---|---|---|
| கோவையிலை | பிடி | 4 |
| வெள்ளுள்ளி | பலம் | 3 |
| சுக்கு | ,, | 2 |

இவைகளையரைத்துக் காடியிற் கலக்கிப் புகட்டவும் இந்தப்படி மூன்றுநாள் கொடுக்கத்தீரும்.

இந்தப்படி முதுகிற் சுடவும் } ———

## * மூக்கடைப்பன்நோய் குணம்

* செய்குணம் - கிறு கிறு என்றும் செருமும் கண்ணில் நீர்வடியும்

* மருந்து-சுக்கு பலம்-1. வெள்ளைப்பூண்டு பலம்-1, கொடுப்பையிலை பிடி-2, மிளகு பலம்-1, இவைகளை யிடித்து இரண்டுபடி காடியிற் கலக்கி உள்ளுக்கு கொடுக்கவேண்டும்

* நசியம் - சுக்கு, வசம்பு, மிளகு, தைவேளையிலை, இவைகளை சரிபாகமாய் சேர்த்துப் பிழிந்து வடிகட்டி நாசியில் நசியம் பண்ணவும்.

மூக்கரைச்சாறணைவேர், மிளகு, வசம்பு, இவைகளையரைத்து மேற்படி சாரணையிலைச் சாற்றிற் கலக்கித் துவாலைபோடவும்.

இந்தப்படி ——— ———

——— ———

மூக்கிற் சுடவும் ——— ———

### 2 இதுவுமது


* செய்குணம் - மூக்கையடைத்துக் குறுகுறுவென்னும் திச்சுதிச்கென்று செருமும்.

* மருந்து - கண்டங்கத்தரிப்பழம் பலம்-2, மிளகு பலம்-அரை, வசம்பு பலம்-¼, குப்பைமேனி




தைவேளை நொச்சிக்கொழுந்து வகைக்கு பிடி-1, உப்பு படி-½, இவைகளை யிடித்து மோரிற் கலக்கி கொடுக்கவேண்டும்.

* நசியம் - நொச்சியிலையும் சுருள்ளியும் இடித்துச் சார்பிழிந்து சிறுநீரிற் கலக்கி வடிகட்டி நாசியில் நசியம் பண்ணவும் அல்லது சுண்டக்காய் ஊறிய தண்ணீரிலும் மேற்படி நசியம் பண்ணலாம்.



இந்தப்படிக்கு இருவிலாவிலுஞ் சுடலாம்

இந்தப்படி மூக்கிற் சுடவும்



### 3 இதுவுமது

* செய்குணம்-அழிமேய்ச்சல் மேயும் சாணி குணமாகப்போடும் நின்று நினைத்து நாசியிற் செருமும் நாட்சென்றால் மூக்கினாலே கற்றாழஞ் சோறுபோலே ஓடும்.

மருந்து-சுக்கு பலம்-1, வெள்ளைப்பூண்டு பலம்-1, வசம்பு பலம்-¼ இத்துடன் நொச்சியிலை, குப்பைமேனி, தைவேளை, சிறுதும்பை, சங்கங்குப்பி, எருக்கிலை இவைகள் வகைக்குப் பிடி

ஒன்று சேர்த்துயிடித்து சிறுநீர்விட்டு குழப்பி உள்ளுக்குக் கொடுக்கவும் குடிக்க வெந்நீர்விட வேண்டும்.

இந்தப்படிக்கு
இருவிலாவிலுஞ்
சூடுபோடவும்



இந்தப்படி மூக்கு நேரிற் சுடவும் —|

4 இதுவுமது

* செய்குணம் - மூக்கிலிருந்து சளிமிகுதியா யுண்டாகும், சுல்ப காச்சலுங் காணும். குளிர்காற்றுவது ஈரமாவது படவொட்டாமல் மாட்டை ஜாக்கிரதையாய் வைத்திருக்க வேண்டியது.

* மருந்து - பொட்டிலுப்பை இங்கிலீஷ்யிடை ரூபா ஒன்றில் மூன்றுநாள் காலை மாலை இரண்டு வேளையும் தீனியிற் கலந்து கொடுக்கவேண்டும்.

வேறு

மூக்கடைத்து குறுகுறெனச் சீறும்.

நிவர்த்தி

நொச்சியிலை
சுருள்ளி

இவைகளை சமமாய்ச் சிறுநீர்விட்டுத் தட்டி நாசியிற் பிழியத் தீரும்.




வேறு

கண்டங்கத்தரிப்பழம்
கரியுப்பு
தைவேளையிலை
வசம்பு
குப்பைமேனியிலை

இவைகளைச் சமமாய்ச் சிறுநீர்விட்டுத் தட்டி நாசியிற் பிழியத் தீரும்.

இந்தப்படிக்கு
இருவிலாவிலுஞ்
சூடுபோடவும்.



---

வேறு

மூக்கடைத்துக் கிருபூரென் றிளைக்கும் கண்ணில் நீர்வடியும்.

நிவர்த்தி

| | | |
|---|---|---|
| பொன்னாங்கணிசமூலம் | பலம் | 10 |
| சுக்கு | ,, | 10 |
| மிளகு | ,, | 2 |
| வெள்ளுள்ளி | ,, | 2 |

இவைகளை யரைத்துக் காடியிற் கலக்கிப் புகட்டத் தீரும்.

இந்தப்படி 000
முதுகிற் 000
சுடவும் 000

## தவளை மூக்கடைப்பன் குணம்

மூக்கடைத்து நெடுமூச்சு வாங்கும் தடுமாறும்.


### நிவர்த்தி

மிளகு
திப்பிலி
சீந்தியிலை

இவைகளைச் சமமாய்ச் சிறுநீர் விட்டு யிடித்து பில்லைத்தட்டி நாசியிற் பிழியவும்.

இந்தப்படி
மூக்கில்
சுடவும்

இந்தப்படி
தலையைச் சுற்றிலுஞ்
சுடவும்.



---

## * மூக்குத்தண்டடைப்பன் நோய்

* செய்குணம் - மூக்குத் தண்டு விரிசு தடுமாறும் நெடுமூச்சு வாங்கும்.

* மருந்து-சுக்கு பலம்-1, மிளகு பலம்-1, திப்பிலி பலம்-½ இம்மூன்றும் ஒன்றாய் அரைத்து ஒருபடி காடியிற் கலக்கி உள்ளுக்குக் கொடுக்க வேண்டும்.



* நசியம்-மிளகு திப்பிலி இரண்டும் ஒரு அளவாகச் சேர்த்தரைத்து சீந்திலைச் சாற்றிற் கலக்கி வடிகட்டி நாசியில் நசியம் பண்ணத்தீரும்.

இந்தப்படி தலையிற் சுடவும்



இந்தப்படி மூக்குமேற் சுடவும் | | |

## சகல அடைப்பனுக்கு மருந்து

| | | |
|---|---|---|
| மிளகு | பலம் | ½ |
| புளியமடற்கிழங்கு | ,, | ½ |
| சிறுநாட்டைக்கிழங்கு | ,, | ½ |
| தில்லைவேர்ப்பட்டை | ,, | ½ |
| கொடுவேலிவேர்ப்பட்டை | ,, | ¼ |
| திருகுகள்ளிவேர்ப்பட்டை | ,, | ¼ |
| எருக்கம்வேர்ப்பட்டை | ,, | ¼ |
| பெருங்காயம் | ,, | ¼ |


இவைகளை இடைப்படி கல்வத்திலிட்டு எருக்கம் பழுப்புச்சாற்றிலும் கோழியவரையிலை சாற்றிலும் தனித்தனியே மெழுகுபோலாட்டி பாக்களவா யுருட்டி வைத்துக்கொண்டு வேளையொன்றுக்கு ஒரு உண்டைவீதம் ஊமத்திலையிற் சுருட்டிக்கொடுக்கவும். வியாதி அதிகரித்திருந்தால் மேற்படி உண்டை கொடுத்தவுடன் ஒருபலம் இலுப்பைப் பிண்ணாக்கை அரைத்துக் கொடுத்துவரவும் வியாதி மீறினால் கோழிக்காரமும் பெருங்காயமும் வகைக்கொருபலம் வீதம் இடித்துக்கொடுத்துவர சகல அடைப்பனும் தீரும்.

## * ஈரல்மூட்டி நோய்

* செய்குணம் - தீவனந் தின்னாது திகைத்துக் கொண்டு நிற்கும வயறூதும்.

* மருந்து - மாட்டை மல்லாத்திக்கொண்டு நெஞ்சாங் கொழுந்தில் அரைக்காற்படி நெய்யைக் காச்சி சாணியைவழித்து கொண்டுவிடவும். பின்பு மிளகுபடி அரிக்கால், ஓமம் படி அரிக்கால், அதிமதுரப்பட்டை பலம்-½, சுக்கு பலம்-1, திப்பிலி பலம்-½, கிராம்பு பலம்-¼, இலவங்கப்பட்டை பலம் - ½, கருஞ்சீரகம பலம்-½, சீரகம் பலம்-½, பாகலிலை பிடி-4, இவைகளைச் சேர்த்தரைத்து காற்படி வேப பெண்ணை விட்டுப் பிசைந்து கொடுக்கவேண்டும் அல்லது காடியிலும் பிசைந்து கொடுக்கலாம்.

இந்தப்படி
இருவிலாவிலும்
சூடுபோடவும.



---

## 2 இதுவுமது


* செய்குணம் - தீவனம்தின்னாது புல்லரிக்கும் வாயில் நீர்வடியும் செருமும் அசைபோடாது. கண் சிவந்திருக்கும் மேலே குளிர்ந்திருக்கும்.



| | | |
|---|---|---|
| * மருந்து - மஞ்சள் | பலம் | ½ |
| சுக்கு | ,, | 2 |
| காயம் | ,, | ¼ |
| திப்பிலி | ,, | ½ |
| குரோசாணிஓமம் | ,, | 1 |
| கடுகு | ,, | 1 |
| மிளகாய்ப்பழம் | ,, | 1 |
| வெள்ளைப்பூண்டு | ,, | 2 |
| எருக்லம்பூ | பிடி | 1 |

இவைகளை யிடித்துச் சாராயம் விட்டுப் பிசைந்து உள்ளுக்குக் கொடுக்கவேண்டும். குடிக்க வெந்நீர் வைக்கவும்.

இந்தப்படிக்கு
இடது விலாவிற்
சூடுபோடவும்




## 3. இதுவுமது

* செய்குணம் - தீவனந்தின்னாது புல்லரிக்கும் கண்ணில் பீளைசாடும் வயிறு வுப்பும் புழுக்கைப் போல் சாணிபோடும் இரத்தம்போல் நீர்விடும் பல்லைக்கடிக்கும்.

* மருந்து - மஞ்சட் குருந்தட்டி சமூலம், மளுக்காரைத்தொலி இவ்விரண்டும் மாங்காயளவு சேகரித்துக்கொண்டு தனித்தனி யரைத்து இரண்டு படி காடியிற் கலக்கி உள்ளுக்குக் கொடுத்த

பிறகு பிரண்டையை யிடித்துத் துவாலை போடவும்.

முன்னங்காற்பட்டையிலிருந்து
பின்னங்காற் தொடைவரையிற்
யிழுத்து
சூடுபோடவும்



## 4. இதுவுமது

* செய்குணம் - கண் சிவந்திருக்கும் செவிதாழ்ந்திருக்கும் வாயில் நீர்வடியும் வயிறு வுப்பியிருக்கும் தீனி தின்னாது.

* மருந்து-மிளகு படி-¼, பறங்கிப்பட்டை பலம்-1, வசம்பு பலம்-¼, வெள்ளைபூண்டு பலம்-2, களை யிடித்து இத்துடன் மஞ்சக்கரைத்தொலி அரைத்தது மாங்காயளவு சேர்த்து ஒருபடி தும்பை சாற்றில் இவையெல்லாம் கலக்கிக் கொடுக்கவும், குடிக்க வெந்நீர் காட்டவும்.

இந்தப்படிக்கு
இருவிலாவிலும்
சூடு போடவும்




* செய்குணம்-புல்,வைக்கோல் தின்னுதுவயிறாதும்.

* மருந்து-பறங்கிப்பட்டை பலம்-½, வசம்பு பலம்-½, வெள்ளைவங்காயம் பலம்-1 இவை யெல்லாம் ஒன்றாயரைத்து சிறுதும்பைச சாற்றிற் சேர்த்துக் கொடுக்கவும் கண்சிவந்தாலும் செவிதாழ்ந்தாலும் மூன்றுபொழுது கொடுக்கவும்.



இப்படிக்கி
விலாவிற்
சூடுபோடவும்



வேறு


பல்லை நெருநெரெனக் கடிக்கும் தீவனம் தின்னாது திகைத்துநிற்கும் வயிறாதுப.

நிவர்த்தி

| | | |
|---|---|---|
| பிரண்டைத்தண்டு | பிடி | 1 |
| மதுக்காரவேர்ப்பட்டை | ,, | 1 |

இவைகளை பயவயாயரைத்துக் காடியிற் கலக்கிக் புகட்டதீரும்.

இந்தப்படி கழுத்திலிருந்து
வால்வரையில் இருபுரமும்
யிழுத்து சுடவும்



வேறு

| | | |
|---|---|---|
| இலுப்பைப்பிண்ணாக்கு | பலம் | 1 |
| எருமைவெண்ணெய் | ,, | 1 |

இவைகளை யரைத்துக் கழுநீரிற் கலக்கிப் புகட்டவும்.

வேறு

வயிறாதிக் குராவிநிற்கும்.

| | | |
|---|---|---|
| தேற்றும்பழம் | பலம் | 10 |
| கொல்லங் கோவைக்கிழங்கு | ,, | 10 |

அல்லது


| | | |
|---|---|---|
| நெய்க்கொட்டான்பழம் | பலம் | 10 |
| ஷை கிழங்கு | ,, | 10 |

ஷை மருந்துகளி லொருபாகத்தைக் காடியி லரைத்துக் கலக்கிப் புகட்டத்தீரும்.

### * தடியீரல் மூட்டிநோய்

* செய்குணம் - நெஞ்சு இடிக்கிக்கொண்டு நெஞ்சாலே தள்ளிநடக்கும் தலையைக் குலுக்கும் குன்னி ஒங்காரிக்கும்.
* மருந்து - இலுப்பைப்பிண்ணாக்கு காலுமிச்சங்காயளவு பசுவின்வெண்ணை மாங்காயளவு சேர்த்துக்கொடுக்கவும், அவரியிலையுஞ் சிற்றவரியிலையும் சுக்குமரைத்து நெஞ்சாங் கொழுந்திற் பூசவும்.

முன்னங்காலுக்கு முன்னே சூடுபோடவும்



### கிராமூட்டியின் குணம்

திகைத்துநிற்கும் வயிறூதும்.

நிவர்த்தி

ஷை மாட்டை கீழே விழத்தள்ளி மல்லாத்திக் கொண்டு நெஞ்சுக்கொழுந்தில் ஆழாக்கு ஆவினெய்



யைக் காய்ச்சிவிட்டு அப்பால் இதனடியில் கண்டிருக்கிற மருந்தை கொடுக்கத்தீரும்.

| | | |
|---|---|---|
| பாகயிலை | பிடி | 4 |
| மிளகு | ,, | $\frac{3}{4}$ |


இதை யரைத்து காடியிற் கலக்கி புகட்டத் தீரும்

வேறு

| | | |
|---|---|---|
| ஓமம் | பலம் | 5 |
| அதிமதுரம் | ,, | 5 |
| இலவங்கப்பட்டை | ,, | $\frac{1}{2}$ |

இவைகளை அரைத்து காடியிற் கலக்கிப் புகட்டத் தீரும்

இந்தப்படிக்கு இடதுவிலாவிற் சுடவும்



வயிறு ஊதினால்

| | | |
|---|---|---|
| சுத்தாமைவேர் | பலம் | 5 |
| மூக்கரைச்சாரணைவேர் | ,, | 5 |
| மிளகாயிலை | ,, | 5 |


இவைகளை யரைத்து வெந்நீரில் கலக்கிப் புகட்டத் தீரும்.

### * இரட்டி யீரல்மூட்டி நோய்


* செய்குணம்-முன்னங்கால் இரண்டையும் பாரிப் பாரி நிற்கும், காலையுந் தடுமாரவைக்கும் தீனி அரைவாய்க்கொண்டு சுவைக்கும் தலையைத் தாழ்த்தி நிற்கும்.

* மருந்து - வெள்ளைப்பூண்டு பலம்-1, மிளகு பலம்-அரிக்கால், குப்பைமேனி பிடி-1, கையாந்தகரை பிடி-1, இவைகளை ஒன்றாயரைத்து ஒருபடி காடியிற் கலக்கி கொடுக்கவும்.

இந்தப்படி இருவிலாவிலுஞ் சூடு போடவும்.



இந்தப்படி முன்னங்கால் முன்னே சுடவும்



## * சுழத்தி நோய்

* செய்குணம்-தீனி அரைவாய்க்கொண்டு தின்னும் சாய்ஞ்சி நடக்கும் நாட்சென்றால் கண் தெரியாத அந்தக்கண்வாக்கிலே சுழற்றும்.

* மருந்து - அபின் பலம் - மாகாணி, கஞ்சாயிலை பலம் - மாகாணி, மருள்ஊமத்து பலம் - மாகாணி, சுழலாவாரைவித்து பலம் - மாகாணி, சுழல்வண்டு-30, இவைகள் எல்லாம் ஒன்றாயரைத்து பனங்கள்ளு படி-1, சாராயம படி-அரை, சேர்த்துக் கொடுக்கவும், சாயந்திரங் குடிக்க வெந்நீர் விடவும் சுழற்றுகிற புறத்தில் நீலநரம்பு பார்த்து இரத்தங் குத்தி யெடுக்கவும் பின்பு இரண்டு காதுகளிலும் மடலிலுஞ்



சூட்டுக்கோலாற் றுளைத்து முகத்தை சுட்டி நாலுகாலிலுஞ் சூடுபோடவும்.




## 2 இதுவுமது

* செய்குணம்-கொப்பூழைப்பற்றி வீங்கும் சுழன்று வலிக்கும்.

* மருந்து - கடுக்காய-1, திப்பிலி பலம்-$\frac{1}{4}$, ஓமம் பலம்-$\frac{3}{4}$, நெல்லிப்பருப்பு பலம்-1, இதுகளை யிடித்து இரண்டுபடி பசுவின் பாலிலாவது ஒருபடி நெய்யிலாவது கொடுக்கலாம் குடிக்க வெந்நீர் விடுவதுமல்லாமல், ஆலஞ்சருகைச் சுட்டு அரைத்து வீக்கத்திற் பூசவும், கலைமான் கொம்பையும் உரைத்துப் பூசலாம்.

இந்தப்படி முதுகிற சூடு போடவும்




## 3 இதுவுமது

* செய்குணம்-செக்கடித்தாப்போலே சுற்றிச்சுற்றி வரும் செவிதாழும் மண்போலே சாணிபோடும்.

* மருந்து - சுழல்வண்டு பலம்-$\frac{1}{4}$, வெளிச்சிப்பிசின் பலம்-கால், நாய்க்கடுகு பலம்-1, நற்சீரகம்

பலம்-1, சுக்கு பலம்-¼ இவைகளை யரைத்து நொச்சியிலைச்சாறு குளிதாமரை யிலைச்சாறு மாவிலங்கு இலைச்சாறு தலைச்சுருளி யிலைச்சாறு வள்ளிக்கொடிச்சாறு இவைகள் வகைக்கு படி-¼ எல்லாம் ஒன்றுசேர்த்து ஒருபடி காடியிற் கலக்கி கொடுக்கவேண்டும்.

* அல்லது - வேப்பம்பிசின் பலம்-¼, சுக்கு பலம்-அரை, நாய்க்கடுகு பலம்-½ இம்மூன்றுந் தனித்தனி அரைத்துக்கொண்டு இத்துடன் இலைக்கள்ளிச்சாறு படி-¼, மாவிலங்கப்பட்டைச் சாறு படி-½, ஒருபடி காடியில் ஒன்றாய்ச் சேர்த்து கலக்கிக் கொடுக்கலாம்.


* நசியம் - சுழன்று வருகிறபோது தோரளங் கொடியை வாட்டி இரண்டு காதிலும் பிழிந்த பின்பு நாலுபிடி ஒட்டுப்பில்லை கொண்டுவந்து இடித்துக் கவளமாகக் கொடுக்கலாம் சூலைப்பற்றி வலது விலாவிலும் நாலுகால்களிலும் அடியிற் கண்டபடி சூடுபோடவும் இதில் தீராவிட்டால் வாயைத் திறந்து பார்த்தால் இரண்டு நரம்பு நீலநிறமாகயிருக்கும் அதைச் சூரைமுள்ளினால் குத்தி இரத்தத்தை வாங்கிப்போட்டு உப்பு மிளகுஞ் சேர்த்துத் தேய்த்து விடவும் இடஞ்சுத்திவந்தால் வலதுகொம்பில் இரண்டு விரலுக்குமேல் சூட்டுக்கோலாற் சுட்டு நல்லெண்ணெயைக் காய்ச்சிவிடவும்.

வலது விலாவிற் சுடவும்





நாலு கால்களிலும் சுடவும்




4. இதுவுமது


* செய்குணம் - சுழலச்சுழலவரும் கண் சிவக்கும் வாயில் வெண்ணுரைத்தள்ளும்.

* மருந்து-வெள்ளாட்டுப்புழுக்கை பலம்-¼, நாயுருவி பலம்-அரை, அரைத்துப் பசுவின் மூத்திரம் படி-¼, பச்சைநெல்லுத்தவிடு படி-2, வெள்ளாட்டு மூத்திரம படி-1, சேர்த்துக் கொடுக்கவும், ஈந்தில்தண்டை யிடித்து கலக்கிக் கொடுத்து துவாலையும் போடலா .

வலது விலாவிற் சுடவும்



இடதுவிலாவிற் சுடவும்



5 இதுவுமது

* செய்குணம்-சுழன்றுகிடக்கும் நடக்கமாட்டாது கண்ணிற் பீளைசாடும்.

* மருந்து -கொன்றையிலை பிடி-2, வசம்பு பலம்-¼, இரண்டுமரைதது பச்சமஞ்சள் சாறு படி-¼, ஒருபடி கஞ்சியிற் கலக்கி கொடுக்கவும்.

6 இதுவுமது

* செய்குணம் - சுழன்று சுழன்றுக்கொண்டுவரும் வாயில் நீர்வடியும் சாணிதப்புரவாகப்போடும்

ஆனால் அதின்நிறங் கொஞ்சம் வெள்ளையாக இருக்கும்.

* மருந்து - பேய்ப்பீர்க்கங்காய் காய்ந்தகூடு, கொல்லன் கோவைக்கிழங்கு, சீந்தில்கிழங்கு இம் மூன்றும் வகைக்கு பலம்-5 சேர்த்தரைத்து ஒருபடி வெந்நீரிற் கலக்கிக் கொடுக்கலாம், குடிக்க வெந்நீர் வைக்கவும்.

### 7. இதுவுமது

* செய்குணம் - சுழன்று சுழன்று நிற்கும் மூக்குந் தண்டின்மேலிற் பருமனாக வீங்கும்.

கொம்பைச் சுத்தி சூடுபோடவும் | — } —

### வேறு

சக்கரம்போல் சுத்திக்கொண்டுவரும் விக்கலெடுக்கும் வாயில் வெண்ணுரைத்தள்ளும் கண் சிவக்கும் பிளைசாடும் நடக்கமாட்டாது.

### நிவர்த்தி

| | | |
|---|---|---|
| வெள்ளாட்டுநீர் | படி | 1 |
| பசுவின்நீர் | ,, | 1 |
| பச்சைநெல்தவிடு | ,, | 2 |

இவைகளை ஒன்றாய்க்கலக்கி புகட்டவும் இந்தப் படி மூன்றுநாள் கொடுக்கத்தீரும்.

இந்தப்படிக்கு இடது விலாவிற் சுடவும் {O}



## * தவளை நோய்

* செய்குணம் - குளம்புகளும் மொளிக்கு மொளிக்கட்டும் தவழும் பிள்ளையைப்போற்றவழும்.

* மருந்து - கழுதை மண்டையோட்டை பிடித்துப் பொடி செய்ததூள் பலம்-1, சுடலாவரையிலைச் சாறு படி-$\frac{1}{4}$, இரண்டு செவ்வால் அரணையை கால்படி வேப்பெண்ணெயை காச்சினபிறகு மேற்படி அரணையை எடுத்துப்போட்டு அந்த எண்ணெயுஞ் சேர்த்துக் கொடுக்கவேண்டும்

* அல்லது - சுடலாவரையிலை குப்பைமேனிவகைக்கு மாங்காயளவு அரைத்து ஒருபடி காடியிற் கொடுக்கலாம் குடிக்க வெந்நீர்விடவும்.

இந்தப்படி வலது விலாவிலும் நாலுகாலிலுஞ் சுடவும் 0000 0000

* அல்லது - மாவிலங்கிலை பலம்-10, தைவேளை பலம்-10, குப்பைமேனி பலம்-10, தும்பை பலம்-10, மிளகுபலம்-1, வெள்ளைப்பூடுபலம்-1, இவைகளை யரைத்துக் கவளமாகச் செய்து கொடுக்கவும்.

### 2 இதுவுமது

* செய்குணம் - எழுந்திருக்கமாட்டாது வயிறூதும் மயிர் சிலிர்க்கும் தாழ்ந்துநிற்கும் நடக்கமாட்டாது.


* மருந்து - மிளகுசாறணைவேர் பலம்-5, அரைத்து ஒருபுட்டி சாராயத்திற் கொடுக்கவேண்டும், மறுநாள் மஞ்சள் பலம்-1, சுக்கு பலம்-1, வசம்பு

பலம்-¼, சுருள்ளி பலம்-1, மிளகு பலம்-½, பூவரசுயிலை வேலிப்பருத்தியிலை பிரண்டை இம்மூன்றும் வகைக்குப் பிடி-1 சேர்த்து எல்லாம் ஒன்றாயரைத்து எலுமிச்சங்காயளவு உருண்டைசெய்து கொடுக்கவும்.

* அல்லது - சிறு குறிஞ்சாயிலைச்சாறு படி-½, உள்ளுக்குக்கொடுக்கவும் மேற்படி சாற்றைமேலே துவாலையும் போடலாம் குடிக்கவெந்நீர்விடவும்

* நசியம் - சுருள்ளி வசம்பு மிளகு சிறுதும்பை குப்பைமேனி தைவேளை இவைகளை வகைக்குக் கொஞ்சமிடித்துப் பிழிந்து வடிகட்டிக் கண்களிலும் காதுகளிலும் மூக்கிலும் நசியம்பண்ணத் தீரும்.

இடது விலாவிற்
சுடவும்



வேறு

பிள்ளைகள் தவழ்தல்போலத் தவழும் நாலு காலும் தள்ளும் பாறு எழுந்திருக்கமாட்டாது

நிவர்த்தி


| | | |
|---|---|---|
| சுழலாவரையிலை | பலம் | 10 |
| குப்பைமேனியிலை | ,, | 10 |

இவைகளைத் துவைத்துக் காடியில் கலக்கியாவது அல்லது அவைகளையரைத்துக் கவளமாயாவது



அல்லது மேற்படி இலைகளைபிடித்துப் பிழிந்து தனிச் சாராயத்திலாவதுங் கொடுக்கவும், இந்தப்படி 3-நாள் கொடுக்கத் தீரும்.

இந்தப்படி
வலது விலாவிற்
சுடவும்



வேறு

| | | |
|---|---|---|
| தைவேளை | பலம் | 10 |
| குப்பைமேனி | ,, | 10 |
| துடை | ,, | 10 |
| மிளகு | ,, | 1 |
| வெள்ளைப்பூடு | ,, | 1 |

மேற்படி மருந்துகளை யரைத்துக் கவளமிடவும் இந்தப்படி 3-நாள் கொடுக்க மேற்படி தவழ நோய் தீரும்.

வேறு

குருஞ்சாயிலை

மேற்படி இலையைக் கொண்டுவந்து காடிவிட்டிடித்து வேளையொன்றுக்கு ஒருபடி சாறுவீதம் மூன்றுநாள் கொடுக்க மேற்படி தவளைநோய் தீரும்.


வேறு

| | | |
|---|---|---|
| நொச்சியிலை | பலம் | 8 |
| வாதமடக்கியிலை | ,, | 8 |
| மாவிலிங்கிலை | ,, | 8 |
| வன்னியிலை | ,, | 8 |
| வெள்ளைப்பூடு | ,, | 1 |
| மிளகு | ,, | 1 |

வெளிச்சிப்பிசின் ,, 2
கருஞ்சீரகம் ,, 2

இவைகளையெல்லா மரைத்துக் கவளமிடவும் இந்தப்படி மூன்றுநாள் கொடுக்க மேற்படி தவள நோய் தீரும்.

இந்தப்படி கொம்பும் அரத்துச்செவியு மரத்து கண்ணடி நரம்புப்பார்த்து நாலு காலிலுமிரங்க சுடவும்.



## * தேளேறுமுடத்தின் நோய்

* செய்குணம் - ஒருகாலைநொண்டும் அந்தகால் சிறு குளம்பு அடியில் சுடும் கொழுந்துவற்றிக் காணும் முகங் களைப்பாக விருக்கும்


* மருந்து - வேலிப்பருத்தியிலை, இலங்கையிலை-11 பிடிங்கி நிலத்திற்போட்டு அதில் ஒன்பதுயிலை யெடுத்து யெருக்கம்பழுப்பில் ஒன்றுசேர்த்து மூன்றுங் கசக்கி மாட்டின் கால்கொழுந்திலிருந்து குளம்புவரை வாய்பேசாமற் றடவி பின்னங்கால்தடத்திற் கால்மாறி பூமியிற் புதைக்கவும் விடத்தொலிவை ஆதிவாரத்திற் பறித்து கால்மாறிப் புதைக்கலாம்.

* அல்லது - நல்லெண்ணெயும் எருக்கம்பாலுங் கலந்து சூரிய வுதையத்துக்குமுன்னே அந்த முடமான காலில் முழங்காலுக்குமேலே குத்த வேண்டும் பிறகு சுக்கு பலம்-1, மிளகுபலம்-½,



திப்பிலி பலம்-¼, வசம்பு பலம்-¼, தைவேளை வேர் பலம்-¼, குப்பைமேனிவேர் பலம்-¼, இதுகளை யரைத்து இரண்டு பாம்பரணையைப் பிடித்துக் குடலை யெடுத்துப்போட்டு அரைப்படி வேப்பெண்ணெயைக் காச்சி அதில் அரணையுடன் யெண்ணெயையும் சேர்த்து உள்ளுக்கு கொடுத்து குடிக்க வெந்நீர் விடவேண்டும்.

இந்தப்படி நாலுதடைகளிலும் சுடவும்



## * கறணை நோய்

செய்குணம் - வெயிலில் நில்லாது, நீரில்போய்ப் படுக்கும், வலதுபுரஞ்சாய்ந்து மேய்ச்சல் மேயும் இடதுசெவி தாழ்ந்துநிற்கும்.

மருந்து - அத்திப்பிஞ்சு, பருத்திப்பிஞ்சு வகைக் குப்பிடி-1, தாறுமீன் கழுவினதண்ணீர் படி-1 சாளைமீன் மாங்காயளவு மரைத்து மூன்றுபடி பனங்கள்ளிற் கொடுக்கவேண்டும்.

அல்லது-ஓரிலைத்தாமரை, ஆனைவணங்கி வகைக்கு மாங்காயளவு அரைத்து ஒருபடி பசுவின்பாலிற் கொடுக்கவும்.

### 2. இதுவுமது

செய்குணம் - வெயிலில் நில்லாது, நிழல்பார்த்து நிற்கும், அரைவாய்க்கொண்டு தீனிதின்னும்

மெலிந்துபோகும் நெடுமயிர் வளரும் வெயி லிற்போனால் யிளைக்கும் இது அசாத்திய வியாதி.

* மருந்து - ஆவாரம்பட்டை பலம்-1, பேய்க்குமட்டிக்காய் பலம்-", அரைத்து ஒருபடி காடியிற் கலக்கி கொடுக்கவேண்டும்.

* அல்லது - மிளகு பலம்-1, காயம் பலம்-$\frac{1}{4}$, தண்டங்கத்திரி சிறுதும்பை இவ்விரண்டும் வகைக் குப்பிடி-1 இவைகளை ஒன்றுசேர்த் தரைத்து வெந்நீரிற்கலக்கி கொடுக்கவேண்டும்.

* அல்லது - ஒரு குள்ளநரியின் ஈரலும் மேற்படி இரத்தமும், ஆற்று அசரைமீன் படி-1, அல்லது படி-2 பாலிற்சேர்த்து கொடுக்கலாம்.

* அல்லது - காக்கையைப்பிடித்து தீயிற் கருக வாட்டி ரோமம்போக்கியிறகு கால் இவைகளையும் நீக்கி நன்றுபிடித்து நாய்க்கோட்டாம் வேர் பலம்-5 சேர்த்தரைத்து இரண்டுபடி காடியிற் கலக்கிக் கொடுக்கவும் பிறகு சூரை யிலையை அரைத்து கலக்கித் துவாலை போட வேண்டும் குடிக்க வெந்நீர் விடவும்

இந்தப்படி இருவிலாவிலுஞ் சூடுபோடவும்





## * அங்கிரி நோய்

* செய்குணம்-கண்விழியிரண்டும் மயிலிரத்தம்போலிருக்கும்.

* மருந்து - துளசியிலைச்சாறு படி-$\frac{1}{2}$, மோர் படி-1, மாங்காயளவு புளியில் கரைத்துக்கொடுக்கவும்.

இந்தப்படிக்கு தலையிற் சூடுபோடவும்



### வேறு

கண்சிவக்கும் வாயில் நீர்வடியும் செவிதாழும் குரவளையைப்பற்றி வீங்கும்.

### வேறு


கண் சிவப்பாயிருக்கும் வாயில் நீர்வடியும் செவிதாழும்.

இவைகட்கு நிவர்த்தி

| | | |
|---|---|---|
| ஊமத்திலை | பிடி | 1 |
| மதுகாரைவேர்ப்பட்டை | ,, | 1 |
| மிளகு | படி | $\frac{3}{4}$ |
| எருக்கிலைப்பழுப்பு | | 7 |

இவைகளை பயணமாயரைத்துக் காடியிற் கலக்கிப் புகட்டவும் இந்தப்படி மூன்றுநாட் கொடுக்கத் தீரும்.

இந்தப்படிக்கு இடதுவிலாவிற் சுடவும்



## * உலர்த்தி நோய்

* செய்குணம் பார்க்கப் பார்க்கப் பாவைபோல் உலர்ந்துபோகும் சேறமாட்டாது.

* மருந்து - வேப்பம்பட்டையை 10-ரூபாயிடை நிறுத்தி ஒருபடி தண்ணீரிற் போட்டு வற்றச் செய்து அரைபடியாயிறக்கி அதில் அஞ்சு ரூபாயிடை உப்பும் சேர்த்துக்கொடுக்கவும்.

* அல்லது-அகத்தியிலைச்சாறு படி-½ கொடுக்கவும்.

* அல்லது-வசம்பு பலம்-½ இதை அரைத்து இத்துடன் மணத்தக்காளி யிலைச்சாறு படி-½ மிதி பாகலிலைச்சாறு படி-¼ சேர்த்துக் கலக்கி கொடுக்கவும்.

* அல்லது - கஞ்சாங்கோரையிலைச் சாறுபடி அரை கொடுக்கவும்.

* அல்லது-பேய்க்குமட்டிக்காய்ச்சாறு படி-¼, விளக்கெண்ணை படி-¼, சேர்த்துக் கொடுக்கவும்.

இந்தப்படிக்கு
இருவிலாவிலும்
சுடவும்



## * சாணுலர்த்தி நோய்

* செய்குணம் - தீனை அடைச்சித்தின்றது தின்றதுஞ் செமியாது சாணி அதவல் குதவலாகப் போடும் சாற்றுக்கழியும்

* மருந்து - அதிமதுரம் பலம்-2, ஏலம் பலம்-1, மிளகுச்செடியிலை அல்லது மிளகு வெள்ளறுகு



நைவேலி வகைக்கு அரைத்தது மாங்காயளவு வெண்ணெ மாங்காயளவு இவைகளை ஒருபடி பசுவின்பாலிற் கலக்கிக் கொடுக்கவேண்டும்.

இந்தப்படிக்கு
இடதுவிலாவிற்
சுடவும்




* அல்லது - வெத்திலை பலம்-5, மிளகு பலம்-2 அரைத்து வெந்நீரிற் கலக்கிக் கொடுக்கலாம்.

## * எருஉலர்த்தி நோய்

* செய்குணம் - வயிறாதும் தீனிதின்னாது செவி தாழும் மயிர்சிலிர்க்கும் எரு உலர்ந்திருக்கும்.

* மருந்து - களிப்பாக்கு பலம்-1, சீனி பலம்-1, கடுக்காய்த்தோடு-30, கற்றாழஞ்சோறு அரை படி பழம்புளி மாங்காயளவு ஒருபடி காடியிற் கலக்கிக் கொடுக்கவேண்டும்.

இந்தப்படிக்கு
இடதுவிலாவிற்
சூடுபோடவும்



## * வறட்சி நோய்

* செய்குணம் - காலோய்ந்து எப்பொழுதுபாக மூசுமூசென்கும் சாணியுடன் சீதமுவிழும் கசவற்றலாகவற்றும் செருமும்.

* மருந்து ஏலம் பலம்-½, கிராம்பு பலம்-¾, அதிமதுரம் பலம்-1, இலவங்கப்பட்டை பலம்-1,

அரைத்து நீர்ப்பூலாத்திவேர் அரைத்தது மாங்காயளவு ஒருபடி பாலிற் கொடுக்கவேண்டும்.

இந்தப்படி
முதுகில்
சுடவும்



## * பெருநோய்

* செய்குணம்-மாடுகளுக்குண்டான எல்லா வியாதிகளைப் பார்க்கிலும் இது முக்கியமானதாகயிருக்கிறது இன்ன குறிப்பிட்ட காலத்துக்குத்தான் உண்டாகத் தகுந்த தென்றில்லை எந்த ருதுக்களிலும் உண்டாகும் இந்த வியாதி கண்டவுடனே மாட்டின் செவிகள் குளிர்ந்து தாழ்ந்திருக்கும் ரோமஞ் சிலிர்த்திருக்கும் தேகங்கனத்துச் சோம்பலாய் நிற்கும் தீனி தின்னமாட்டாது சரியானபடி நீர் விடாமலற்ப சொற்பமாய் நீர்விடுகிறது சிவப்பு நிறமாக விருக்கும் அதினுடைய யிரத்த ஓட்டந் துரிதமாக விருப்பதிற் சிலது மாடுகள் பலவீனமாயுஞ் சிலது பலமாயும் ஓடிக்கொண்டிருக்கும் மூக்கினாலுங் கண்களினாலும் நீர் வடிந்துக்கொண்டிருக்கும் சில மாடுகளுக்குக் கண்பட்டைகள் வீங்கி அக்கினிப் பொறிபோலிருக்கும் கண்களிலிருந்தும் மூக்கிலிருந்தும் அதிகமாய் ஜலம் வடிந்துகொண்டிருக்கும் கண்கள் முதலில் தெளிவாக ஜலம் ஊறிக்கொண்டுமிருந்து இப்பால் மஞ்சள் நிறமாயும் போகும் மொத்தமாய் மேற்படி மாட்டின்



ஸ்திதி புத்தி ஸ்திரமில்லாமற் காட்டு மாடுகளுக்கொப்பாக ஓடித்திரிந்து சமீபத்திற் போகிறவர்களை முட்டுகிறதற்கும் ஆயத்தப்படும் இப்படி நடந்தபின் மேற்படி மாடு கீழே விழுந்து கொஞ்சநேரங் கறட்டுக் கறட்டென் றிழுத்துக் கொஞ்சந் தெளிவு கண்டபோதிலும் யிறந்துபோகும் சில மாடுகள் கொருமிக்கொண்டு அதிகமாக யிளைத்துக்கொண்டு மிருக்கும் சில மாடுகளுக்குச் சாணியுடன் இரத்தமுஞ் சலமும் விழும்.

மருந்து - மாட்டுக்கு மேற்படி வியாதி கண்டவுடனே அம்மாட்டுடனிருக்கிற மற்ற மாடுகளைப் பிரத்யேகமாய் வைத்துப் போடவேணும் வியாதி கண்டவுடனே எவ்வளவு துரிதத்தில் மருந்து செய்யப்படுகிறதோ அவ்வளவு சீக்கிரத்தில் சவுக்கியமாகும் மயிலிறகும் புலிக்கறியும் உள்ளுக்குக் கொடுக்கவேண்டும்.

இந்தப்படி முதுகிற் சுடவும். | | |

இந்தப்படி விலாவிற்
சூடுபோடவும் ( {

அல்லது - கைசீக்கின் செய்கை என்ன ஸ்திதியாக விருந்தபோதிலும் முதலிற் செய்யவேண்டியது கை மாட்டின் கழுத்து நரம்பில் ஒரு கூர்மையான கத்தியினாலே ஒரு அங்குல நீளத்திற் குத்திச் சேர்-1½, அல்லது 2-படி அள

வுக்கு * இரத்தமெடுத்துவிடவேண்டும் பிறகு யிரத்தம் குத்தியெடுத்ததின் பேரில் 8-அவுன்ஸ் விளக்கெண்ணை அல்லது 10-ரூபாயிடைகரிய பவளத்தைக் காற்படி தண்ணீரிற் சேர்த்து உள்ளுக்குக் கொடுக்கவேண்டியது தவிர சாணியை ஜலத்திற் கொழும்பாய்க் கரைத்து வாய் அகன்ற சட்டியில் வார்த்து காய்ச்சி ஷை மாட்டின் தேகமுழுதும் போட்டு ஷை மாட்டை நிழலில் வைத்திருக்க வேண்டும் மேற்குறித்தபடி ஒரு தபா இரத்தங் குத்தியெடுப்பதிற் சவுக்கியப்படாவிட்டால் அப்படிச் செய்ததற்கு மூன்றுமணி நேரத்துக்கு பின்பு மறுபடியும் ஒருபடி இரத்தமெடுக்கவேணும் வேதும் மேற்குறித்தபடியே போட்டுக் கொண்டிருக்கவும் ஷை மாடு சாணி போடாதிருந்தால் அரைப்படி விளக்கெண்ணையை இளஞ்சூடுள்ள ஜலம் 1½-படியில் கலந்து பவனவாய் வழியாக விடவும்.

இந்தப்படி மேற்கழுத்திற் கொம்புகளின் அடிமுதற் சிமிழ்வரை மேற்படி நீளமுழுமையிலு மிரண்டுவரையாக இழுத்து இருபுறமுஞ் சூடுபோடவும்.

* பீரங்கி வண்டிகளுக்கு உபயோகப்படுத்தி வருகிற மாடுகளுக் கொப்பான உயரமுங் காத்திரமுமுள்ள பாரிய மாட்டுக்கு இதிற் சொல்லியிருக்கிற அளவுப்படி இரத்தங் குத்தி யெடுக்கலாம் அதற்குக் கீழ்தரமான மாடுகளுக்கு அந்தத் தரத்துக்குத் தக்கபடி யிரத்தங்குத்தி யெடுக்க வேண்டிய அளவைக் குறைத்துக்கொள்ள வேண்டியது ஆனால் இது நன்றாய்க் கைதேர்ந்தவர்கள்தான் செய்ய லாம்.



மேற்கண்ட மருந்தினால் வியாதி அதிகமாய் குணத்துக்கு வந்ததின்பேரி லதனடியிற் கண்டபடி மசாலா கொடுக்கவேண்டும்.

* அல்லது - மஞ்சள் பலம்-1, சத்துப்பை பலம்-1, ஈருள்ளி பலம்-2, அரைத்துத் தயிர்படி 2-ல் கலக்கி நாலுபாகஞ் செய்து அன்றுடமிரண்டு தபாக் கொடுக்கவேண்டியது பிறகு காய்ந்த புளிக்கறியை அதை தண்ணீர்விட்டு அரைத்துக் கலக்கி யிரண்டல்லது மூன்றுநாட்காலமே கொடுக்கலாம்.

## பெருவெக்கை நோய்

மயிர் சிலிர்க்கும் வாயில் நீர்வடியும் இரை தின்னாது.

நிவர்த்தி

| | | |
|---|---|---|
| எள்ளு | படி | 2 |

இடித்து ஆவின்பாலில் கலக்கி மூன்றுநாள் கொடுக்கவும்.

வேறு

வாயில் நீர்வடியும் திகைத்து நிற்கும் கண்ணிற் பீளை சாடும் இரை தின்னாது.

நிவர்த்தி

| | | |
|---|---|---|
| கருஞ்சீரகம் | பலம் | 3 |
| அதிமதுரம் | ,, | 3 |

இவைகளை யரைத்துக் காடியிற் கலக்கி மூன்று நாட் கொடுக்கவும்.

இதைப்போல் இடதுவிலாவிற் சுடவும்.

ளய

வேறு

பொன்னாங்கண்ணி
வல்லாரை
நீர்பூசாயிலை

இம்மூன்று தினுசு இலைகளைக் கொண்டுவந்து ஜலம்விடாமல் யரைத்து உண்டை திரட்டியெடுத்து நாழி பசுவின்பாலிற் கரைத்துக்கொடுக்க சொஸ்தமாகும்.

### * குன்னி நோய்

* செய்குணம் - மயிர் சிலிர்த்துக்கொண்டு குன்னி நிற்கும்.

* மருந்து - ஓமம் பலம்-1, வசம்பு பலம்-¼, இவ்விரண்டு மரைத்து இத்துடன் ஆவாரயிலையும அரைத்து மாங்காயளவு சேர்த்து ஒருபடி வெந்நீரிற் கலக்கிக் கொடுக்கவேண்டும்.

* நசியம்-சுக்கு வசம்பு வெள்ளைப்பூண்டு தைவேளை குப்பைமேனி இவைகளை யரைத்துக் கொஞ்சம் ஜலம்விட்டுக் கலக்கி வடிகட்டி கண்களிலும் மூக்குச் செவிகளிலும் நசியம்பண்ணத் தீரும்.

### 2. இதுவுமது

* செய்குணம் - குன்னிநிற்கும் தீவனம் தின்னாது வானத்தை பார்த்தே நிற்கும் சொருக்கு மூத்திரம் விடும்.

| | | |
|---|---|---|
| * மருந்து - பெருங்காயம் | பலம் | ¾ |
| சுக்கு | ,, | 1 |
| மிளகு | ,, | 1 |



| | | |
|---|---|---|
| | பலம் | 1 |
| வசம்பு | ,, | ¼ |
| இலுப்பைப்பிண்ணாக்கு | ,, | 1 |
| வெள்ளைப்பூண்டு | பிடி | 1 |
| நொச்சியிலை | ,, | 1 |
| சிறுதும்பை | ,, | 1 |
| குப்பைமேனி | | |

எலுமிச்சம்பழச்சாறு படி-¼, விட்டு இவைகளை யொன்று சேர்த்து இடித்தபிறகு சிறுநீர் படி ¼ சேர்த்துக் கொடுக்கத்தீரும்.

* நசியம் - கொத்தமல்லியும் உப்பும் அரைத்துக் கலக்கி வடிகட்டிக் காது மூக்கு இவைகளில் நசியம் பண்ணத்தீரும்.

### 3 இதுவுமது

* செய்குணம் - காலுகாலு மெல்லடியாக வைக்கும் குன்றிக்கொண்டு நடக்கும்.

* மருந்து - சுருள்ளி பலம்-5, இலவங்கப்பட்டை பலம்-2, முருங்கையிலை மூங்கிலை வகைக்கு மாங்காயளவு சேர்த்து வொன்று யரைத்து ஒருபடி காடியிற்கலக்கிக் கொடுக்கவேண்டும்.

இந்தப்படி அடிவயிற்றிற் —|— சூடுபோடவும்

இந்தப்படி காலுகாலிலுஞ் சூடுபோடவும் 00000


## * குரல் நோய்

* செய்குணம் - தீவனந்தின்னாது வாலைச் சுருக்காக வீசும் தடுமாறும் வாயை மூடாமல் நிற்கும் நின்று கூப்பிடும்.

* மருந்து-மிளகு பலம்-1, திப்பிலி பலம்-¾, வசம்பு பலம்-¼, பெருங்காயம் பலம்-அரிசசால், வெள்ளைப்பூண்டு பலம்-1, தைவேளை குப்பைமேனி வெள்ளறுகு வகைக்குப் பிடி-1, மருந்துடன் சேர்த்தரைத்துச் சாராயம் விட்டுப் பிசைந்து கவளமாகக் கொடுக்கவேண்டும்.

* அல்லது-வெள்ளைப்பூண்டு பலம்-1, சோமநாதன் பெருங்காயம் பலம் அரைக்கால் சிறுதும்பைச் சாறுபடி காலேயரைக்கால் முக்காற்படி வெந்நீரிற் கலக்கிக் கொடுக்கவேண்டும் குடிக்க வெந்நீர் விடவும்.

இந்தப்படி இருவிலாவினுஞ் சுடவும்



## * குரல்மூட்டி நோய்


* செய்குணம் - முகத்தில் வீங்கும் செவிதாழும் நடைதளரும் வாயாலே உதவிசாயும்.

* மருந்து -முருக்கம்பூ பலம்-10, மாதளம்பூ பலம்-10, மேற்படி பிஞ்சு பலம்-5, கிராம்பு பலம்-2,



அரைத்து அரைப்படி சாராயத்திற் கொடுக்க வேண்டும் குடிக்க வெந்நீர் விடவும்.

இந்தப்படிக்கு தவளையிற் சூடு போடவும்




## * குதவளைத்தாக்கன் நோய்

செய்குணம்-மேய்கிறபோது திகைத்துக்கொண்டு நிற்தும் கண்கள் வரைபிட்டுக் குழியும் குதவளையிற்கட்டும் வாலைச் சுருக்காக வீசும்.

மருந்து-வெள்ளைப்பூண்டு பலம்-2, காருகோலரிசி பலம்-2, இலுப்பை பிண்ணாக்கு பலம்-½ அரைத்துக் காற்படி வேப்பெண்ணையிற் கலக்கித் தொண்டைக்குள் மெதுவாகக் கொடுக்க வேண்டும் குடிக்க வெந்நீர் விடவும்.

இந்தப்படி குதவளையிற் சூடு போடவும்



## * குடல் நோய்

செய்குணம் - வயிறு வீங்கும் தீவனந்தின்னாது கண்குழியும் மயிர் சிலிர்த்திருக்கும் கிடை கொள்ளாது.

மருந்து-இஞ்சி பலம்-1, சுருள்ளி பலம்-1, வசம்பு பலம்-¾, அமுக்கிராவேர் பலம்-¼, ஊமத்தம் வேர் பலம்¾, இவையெல்லாம் சேர்த்து


அரைத்து இரண்டுபடி காடியிற் கலக்கி கொடுக்கவேண்டும்.

2 இதுவுமது

* செய்குணம் - வயிறு வீங்கும் வாய்நீர் வடியும் விழுந்து விழுந்து எழுந்திருக்கும் நாளுக்கு நாள் உலர்ந்துவரும்.

* மருந்து - வேலிப்பருத்தியிலைச்சாறு படி-$\frac{1}{4}$, உப்பு படி-அரிக்கால் சேர்த்துக் கொடுக்கவும்.

இந்தப்படிக் கிருவிலா விலுஞ் சூடுபோடவும்.



## * குடல்வாத நோய்

* செய்குணம் - வயிறாதும் அருவருத்து மேயும் கெட்டபுல்லைப் பார்த்து தின்னும் வாயில் நீர் வடியும்.

* மருந்து-மிளகு பலம்-1, வசம்பு பலம்-$\frac{1}{2}$, ஈருள்ளி பலம்-1 இவைகளை யரைத்து இத்துடன் முடக்கத்தான் பிடி-1, கொத்தான் கொளுஞ்சிச்சாறு படி-2 சேர்த்துக் கலக்கிக் கொடுக்கவும் காலை மாலை குடிக்க வெந்நீர் வைக்கவும்.

இடதுவிலாவிற் சூடு போடவும்



2 இதுவுமது

* செய்குணம் - வயிறு வீங்கும் வயிறு முழங்கும் கீழேவிழும்.



* மருந்து - உத்தமதாளிச்சாறு படி-அரையிற் சாணிக்கயலி மீன் படி-1, நனையப்போட்டு மறுநாள் இரண்டுபடி பனங்கள்ளிற் கலக்கிக் கொடுக்கவேண்டும்.

இருவிலாவிலுஞ் சுடவும்



## * குடற்பளுவன் நோய்

செய்குணம் - குடலில் அழுக்கு ஒட்டியிருக்கும் அதனால் தீவனந்தின்னாது தண்ணீருங் குடியாது.

மருந்து-ஆடுதீண்டாப்பாளையிலை பிடி-1, குப்பைமேனியிலை பிடி-1, பேய்க்குமட்டியிலை பிடி-1, வசம்பு பலம்-$\frac{1}{4}$, வெள்ளைப்பூண்டு பலம்-$\frac{3}{4}$, இவைகளை யரைத்துச் சிறுநீரிற் கலக்கிக் கொடுக்கவேண்டும்.

இந்தப்படி தலையிற் சூடு போடவும்.



## * குடல்முறுக்கு நோய்


செய்குணம் - கிடந்தகிடையிற் கிடந்து காலைச் செதுக்கும் சாணிபோடும்.

மருந்து - நாய்ப்பாகலிலைச் சாறுபடி-$\frac{3}{4}$, பசுவின் பால்படி-$\frac{3}{4}$, நெய்படி அரிக்கால், ஒன்றாய்க் கலந்து கொடுக்கவேண்டும். மறுநாள்

அகில் கட்டை பலம்-1, இளைத்து இடித்து காடியி லூறவைத்துக் கொடுக்கவேண்டியது.

இந்தப்படி குறுக்கே

சூடுபோடவும்.



## * சூலை நோய்

* செய்குணம் - தூரிதமாய் மூச்சுவிடும், காதுசாய்ந்திருக்கும், தலைகுனிந்து நிற்கும், கொம்புகளின் அடிப்பக்கத்திற் சூடாயிருக்கும், நாசி காய்ந்து சூடாயிருக்கும், தீவனந்தின்னாது பூராவுஞ் சோம்பலாய் நிற்கும்.

* மருந்து - இதற்கு இரண்டுபடிமுதல் ஐந்துபடிவரை இரத்தங்குத்தியெடுக்கவேணும், மாட்டின் தேகத்தில் சாணிவேதுபோட்டு ‡ (டாட்டர் மிட்டிக்) காலேமாகாணி ரூபாயிடை, நேர்வாளவிதை அரையே அரிக்கால் ரூபாயிடை இவைகளை காற்படி வெந்நீரிற் கலக்கியிரத்தங் குத்தியெடுத்த ஒருமணிக் கப்பால் உள்ளுக்கு கொடுக்கவேண்டியது மேற்படி மருந்து இரண்டையும் கொஞ்சந் தவிட்டிற் சேர்த்துக் கொடுத்து மேற்படி வெந்நீரை மேலே ஒத்தடங்கொடுத்து சூடுள்ளவேதும் மேலே போடவேணும்.

‡ டாட்டர் மிட்டிக் என்பது ஒருவித இங்கிலீஷ் மருந்து.




வேறு

வயிறுவீங்கும் வாயில்நீரொழுகும் நாலுகாலும் நடுக்கங்கொடுக்கும்.

நிவர்த்தி

எருக்கிலைச்சாறு நல்லெண்ணை இவையிரண்டுங் கலந்து உள்ளுக்கு கொடுக்கவும் சொஸ்தமாகும்.

இந்தப்படி மேலே
சூடுபோடவும்




## * சூலைப்பன் நோய்

* செய்குணம் - செவிதாழ்ந்திருக்கும் கண்குழியும் உருண்டு விழும்.

* மருந்து - முருங்கப்பட்டை பலம்-1, முருக்கம் பட்டை பலம்-1, பிராய்ப்பட்டை பலம்-1, இடித்து எட்டுபடி தண்ணீரிற்போட்டுப் பச்சரிசி குறுணியைக் கூடப்போட்டு கூழாகக் காய்ச்சி ஒருவேளைக்கு 1¾-படி வீதங் கொடுக்கவேண்டும் இந்தப்படி மூன்றுநாள் கொடுக்கவும்.

இப்படிக்கி
இடதுவிலாவிற்
சுடவும்.



## குளடநோயின் குணம்

வில்போலுடலைச் சுருக்கி யிழுத்துவலைக்கும் குறுகிநிற்கும் வாயால் இரத்தம்விழும்.

வேறு

விழுந்து விழுந்து எழுந்திருந்து உலாவும் வாயி லதிரம் விழும்.

இவைகட்கு நிவர்த்தி

| | | |
|---|---|---|
| குட்டித்தக்காளியிலைச்சாறு | படி | ½ |
| வெள்ளுள்ளி | பலம் | 1 |

மேற்படி சாற்றில் வெள்ளுள்ளியை அரைத்து கலக்கி புகட்டி மேற்படி யிலையும் வெள்ளுள்ளியு மரைத்து உடம்பெங்கும்பூசி முறுக்கிவிடத் தீரும்.

வேறு

வேலிப்பருத்தியிலை

மேற்படி இலையைக் கொண்டுவந்து மோர்விட் டிடித்து ஒருபடி சாறுபிழிந்து கொடுக்கவும் இந்தப் படி மூன்றுநாள் கொடுக்கத்தீரும்.

இந்தப்படிக் கிடதவிலாவிற் சுடவும்.



* சூட்ட நோய்

* செய்குணம்-வில்லுச் சுருக்காச் சுருக்கிக்கொண்டு நிற்கும் மேலெல்லாம் வேர்வை யுண்டாகும் ஒருவேளை வாயிலிருந்து ரத்தம்விழும்.

* மருந்து - வெள்ளைப்பூண்டு பலம்-¼, அரைத்து குட்டித்தக்காளி யிலைச்சாறு அரைப்படியில் கலக்கி கொடுக்கவேண்டும். வெள்ளைப்பூண்டு அரைத்து மேற்படி சாற்றில் கலக்கி துவாலை யும் போடவும். பிறகு வேலிப்பருத்தி யிலையை



சொண்டுவந்து மோர்விட்டிடித்து ஒருபடி சாறுபிழிந்து கொடுக்கவேண்டும்

* குழவிகடி நோய்

* செய்குணம் - மேலெல்லாந் தடித்திருக்கும்.

* மருந்து - பூவரசுப்பட்டையை மேற்பரணி சீவிப் போட்டு அதில் பலம்-1 எடுத்து தூளாக யிடித்து ஒருபடி பசுவின்பாலிற் போட்டுக் காய்ச்சி யிறுத்துக்கொண்டு அதில் பேய்க் குமட்டிக்காய்ச்சாறு படி அரிக்கால் சேர்த் துக் கொடுக்கவும்.


* அல்லது - சுக்கு பலம் ½, ஈருள்ளி பலம்-1, கடுக் காய்த்தோல் பலம்-½, சீரகம் பலம்-1, நொச்சி யிலை பிடி-2 இவைகளை ஒன்றுசேர்த்தரைத்து ஒருபடி வெந்நீரிற் கலக்கிக் கொடுக்கவும்.

* கொடு நோய்

* செய்குணம் - அலைபாய்ந்து திரியும், படுக்கும், எழுந்திருக்கும் பரக்கப் பரக்கப் பார்க்கும் பயித்தியம் கொண்டதுபோ லோடித்திரியும், நிற்கும் கனைக்கும் கத்தும்

* மருந்து - சிறுகீரைவேர், வில்வயிலை, முன்னையிலை இவைகளை அரைத்து வகைக்கு பாக்களவு சேர்த்து ஒருபடி வெள்ளாட்டு நீரிலாவது அல்லது மோரிலாவது சுறுக்காக கொடுக்க வேண்டும்.


இந்தப்படி நெற்றியிற் சுடவும்



## *சோலநோய்

* செய்குணம் - நாலுகாலும் நடைதளரும் வயிறு முழங்கும் தலை தாழ்ந்து நிற்கும்.
* மருந்து - விஷ்ணுக்கிராந்தி ஆலம்விழுது இவை வகைக்கு மாங்காயளவு அரைத்து ஒருபடி பாலிலாவது காடியிலாவது கலக்கி கொடுக்கவும்.

இந்தப்படிக்கு
இருவிலாவிலுஞ்
சுடவும்.




## * புலி நோய்

* செய்குணம் - கண் சிவந்திருக்கும் மனிதரைச் சினந்து பார்க்கும் பாயவரும்.
* மருந்து-வாகையிலை துளசியிலை இவைகள் வகைக்குப்பிடி-1, அரைத்து ஒருபடி காடி அல்லது பனங்கள்ளிற் கலக்கி உள்ளுக்கு கொடுக்கவும்.

2 இதுவுமது

* செய்குணம் - காலை வெட்டிக்கொண்டு நிற்கும் தீவனங் குணமாய்த்தின்னாது உடல் மெலியும் மனிதரைப் பாயவரும்.
* மருந்து - நாயுருவியிலை, மேற்படி வேர்ப்பட்டை வெள்ளைப்பூண்டு, வசம்பு, கறியுப்பு இவைகள் வகைக்குப் பலம்-½ வீதஞ்சேர்த்து அரைத்து இத்துடன் அரைப்படி விளக்கெண்ணையிற் கலக்கி கொடுக்கவேண்டும்.

இந்தப்படிக்கு
இருவிலாவிலுஞ்
சுடவும்.





## புலியன்நோய் குணம்

நாலுகாலும் மடங்கும் செவிகுளிர்ந்து தாழும் கண்ணினிமை தடிக்கும் சிறுத்துச் சிறுத்து நீர் விடும்.

வேறு

நாலுகாலிலும் நரம்புபுடைக்கும் இமை தடிக்கும் செவிதாழும நீர் சிறுத்திறங்கும்.

இவைகட்கு நிவர்த்தி

| | | |
|---|---|---|
| திப்பிலி | பலம் | 1 |
| மிளகு | ,, | 1 |
| கச்சந்திராயச்சாறு | படி | ¾ |
| நொச்சிச்சாறு | ,, | ¼ |
| காணச்சாறு | ,, | ¼ |
| நல்லெண்ணை | ,, | ¾ |

மேற்படி சாறுவகைகளையும் எண்ணையையும் ஒன்றாய் கலந்து அதில் மற்ற மூன்று மருந்துகளையும் அரைத்துப்போட்டு கலக்கி கொடுக்கவும் இந்தப்படி மூன்றுநாட் கொடுக்கத் தீரும்.

வேறு

| | | |
|---|---|---|
| திப்பிலி | பலம் | 1 |
| மிளகு | ,, | 1 |
| கச்சந்திராயசமூலம் | பிடி | 5 |

இவைகளை யரைத்து நல்லெண்ணெய்விட்டுப் பிசைந்து கவளமிடவும் இந்தப்படி 3-நாள் கொடுக்கத் தீரும்.

இந்தப்படிக்கு இடது
விலாவிற் சுடவும்.

 விலி

### வேறு

முன்னங்காலிரண்டும் பாரித்திருக்கும் தலை கவிழும் இரையை அரைவாயா யெடுத்து கொஞ்சங் கொஞ்சமாய்ச் சுவைக்கும்.

### வேறு

| | | |
|---|---|---|
| குப்பைமேனியிலை | பிடி | 3 |
| கரிப்பானிலை | ,, | 3 |
| மிளகு | பலம் | 1 |
| வெள்ளுள்ளி | ,, | 1 |

இவைகளை யரைத்துக் காடியில் கலக்கிப் புகட்டவும் இந்தப்படி மூன்றுநாட் புகட்டத்தீரும்.

### வேறு

முன்னங்காலைப் புரட்டிப் புரட்டிக்கொண்டு நிற்கும் கால் தடுமாறும் தலை கவிழும் தீவனத்தை அரைவா யெடுத்துச் சுவைக்கும்

### நிவர்த்தி

| | | |
|---|---|---|
| குப்பைமேனியிலை | பிடி | 4 |
| மிளகு | பலம் | 4 |
| வெள்ளுள்ளி | ,, | 1 |

இவைகளை யரைத்துக் கவளமிட்டும் இந்தப்படி மூன்றுநாட் கொடுத்து மேற்படி மருந்துகளை எல்லா மொன்றாய்ச் சேர்த்தரைத்துக் காலிலும் பூசி வரவும்.

இந்தப்படிக்கு இடது  விலாவிற் சுடவும். விவிளி




## * சிறுபுள்ளு நோய்

* செய்குணம் - நடை தளரும் உடல் வற்றிவரும் பொய்மேச்சல் மேயும் தூங்கும்.

* மருந்து-வெள்ளைவெங்காயம் தேங்காயளவு யரைத்துப் பசுவின்பாலிற் கொடுக்கவும்.

இந்தப்படிக்கு இருவிலாவிலுஞ் சுடவும்.




* செய்குணம் - முதுகை நெளிக்கும் மயிர்க்கால் செறியும் பின்னங்கால் மொளிநடுங்கும்.

* மருந்து-பெருமரத்துப்பட்டை வேப்பம்பட்டை வகைக்கு பலம்-2, நெல்லரிசிக் குறுணை படி-¼, எட்டுப்படி தண்ணீரிற்போட்டு இரண்டு படியாகக் காய்ச்சி கொடுக்கவேண்டும்.

* அல்லது-சிறுதும்பைச்சாறு படி-1, சிறுநீர்படி-1 சேர்த்துக் கொடுக்கலாம்.

இந்தப்படிக்கு இருவிலாவிலுஞ் சுடவும்




## * நம்புரி நோய்

* செய்குணம்-பரக்கப் பரக்கப் பார்க்கும் தளர்ந்து சுழன்று நெளியும்.

* மருந்து - வண்ணான் அவரியிலைச்சாறு படி-$\frac{3}{4}$- செருப்படி யிலைச்சாறு படி-$\frac{1}{4}$. கொடுக்க வேண்டும்.

இதைப்போல்
நெற்றியிற் சூடு
போடவும்.



இதைப்போல்
முதுகில் இடதுபுறம்
சுடவும்.




## * கருங்காலி நோய்

* செய்குணம்-முகங்கறுத்திருக்கும் நாடியைப் பூமியிற் போட்டுக்கொண்டிருக்கும் உடம்பு வீங்கும் அயர்ந்து நிற்கும் நீர்விடும்.

* மருந்து - மிளகு பலம்-1, சுக்கு பலம்-1, வசம்பு பலம்-$\frac{1}{4}$, வெள்ளைப்பூண்டு பலம்-1, சுருள்ளி பலம்-2, சிறுகீரை குப்பைமேனி தைவேளை வகைக்குப் பிடி - 1 இவைகளை யிடித்துக் கொடுக்கவேண்டும். கொமட்டியிலை கொளுஞ்சியிலை கீழாநெல்லியிலை இம்மூன்றும் இடித்துத் துவாலை போடவும் குடிக்க வெந்நீர் விடவும்.

கொப்பூழைச்சுத்தி மேலேயெழுத்தாப் போல் சூடுபோடவும்.





## மகாவிருட்டிநோயின் குணம்

வாயில் நீர்வடியும் மண்டை வீங்கும் மயிர் சிலிர்க்கும் வயிறாதிப் பொருமும் தொண்டைக்குள் பந்துபோல் நோய் திரண்டடைக்கும் நின்ற நிலையாக நிற்கும்.


நிவர்த்தி

தாழையின்காயைச் சீவியிடித்துப் பிழிந்த

| | | |
|---|---|---|
| சாறு | படி | $\frac{1}{4}$ |
| பேய்ப்பீர்க்கிலைச்சாறு | ,, | $\frac{1}{4}$ |
| வெள்ளுள்ளி | பலம் | 1 |
| சுக்கு | ,, | 1 |
| கொழுஞ்சியிலை | படி | 1 |
| எலிப்புழுக்கைசிரங்கை | ,, | 1 |

இவைகளில் கெழ சாறுகளை ஒன்றாய்க் கலந்ததில் மற்ற மருந்துகளை யரைத்துப் போட்டுக் கொடுக்கத் தீரும்.

இந்தபடி
இடது விலாவிற்
சுடவும்.



## * விருட்டி நோய்

* செய்குணம் - கழுத்தைக்கட்டி வீங்கும் கிருட்டுக் கிருட்டென்று வலுவாய் நாசியடைத்து வாங்கும் மயிர் சிலிர்க்கும் உடம்பு தடிக்கும்.
* மருந்து - இலுப்பைப்பிண்ணாக்கு பலம்-$\frac{3}{4}$. அரைத்து அரைப்படி குதிரைமூத்திரத்திற் கலக்கிப் பன்றிநெய் படி மாகாணி சேர்த்துக் கொடுக்க வேண்டும் குடிக்க வெந்நீர்விடவும்.

* நசியம் - பேய்ப்பீர்க்கிலைச் சாறு சிறுதும்பைச் சாறு இலுப்பைப் பிண்ணாக்கும் பன்றிநெய் யுங் கொஞ்சம் சேர்த்துக் கலக்கி வடிகட்டி நசியம் பண்ணவும் பிறகு மாட்டின் முட்டெலும்பும் பன்றிவிட்டையும் பெருங்காயமும் இம்மூன்றும் பாக்களவு சேர்த்துப் புகை காட்டவும்.

2 இதுவுமது

* செய்குணம் - நாடி வீங்கும் விருட்டு விருட்டென்னும் மயிர்சிலிர்க்கும் முகத்தை மடித்துக் கொள்ளும் தீவனம் கொஞ்சமாகத் தின்னும்.

* மருந்து - நாயுருவிக்கதிர் பிடி-1, அரைத்து நெல்லுத் தவிடு படி ஒன்று சேர்த்துப் பன்றி இரத்தமுங் குதிரை மூத்திரமும் விட்டுப் பிசைந்து கொடுக்கவேண்டும் குடிக்க வெந்நீர் விடவும்.

இதைப்போல் தொண்டையை சுத்திச் சூடுபோடவும்.



3 இதுவுமது

* செய்குணம் - தொண்டையைக் கட்டி வீங்கும் வயிறூதும் வாயில் நீர்வடியும் செவிதாழும் கண் சிவந்திருக்கும்.


* மருந்து - மிளகு பலம்-1, சுக்கு பலம்-1, வசம்பு பலம்-½, கருஞ்சீரகம் பலம்-½, ஈருள்ளி பலம்-2,



வெள்ளைப்பூண்டு பலம்-1, எருக்கிலைப் பழுப்பு-5, இத்துடன் சங்கு இலை பேய்ப்பீர்க்கிலை வேப்பிலை கருஞ்சூரைவேர்த்தொலி மருக்காரைத் தொலி வகைக்கு மாங்காயளவு சேர்த்து அரைத்து இரண்டுபடி காடியிற் கலக்கிக் கொடுக்கவேண்டும்.

* அல்லது - மிளகு பலம்-¾, சுக்கு பலம்-1, திப்பிலி பலம்-¼, பெருங்காயம் பலம்-¼, வசம்பு பலம்-¼, குப்பைமேனி தைவேளை வகைக்குப் பிடி-1 இவைகளை யிடித்து பன்றி இரத்தம் படி-¼, குதிரைமூத்திரம் படி-1 சேர்த்துக் கொடுக்கவேண்டும். இந்த மருந்து விரட்டி நோய்க்கெல்லாங் கொடுக்கலாம். குடிக்க வெந்நீர் விடவும்.

இந்தப்படிக்கு இடது விலாவிலும் தொண்டையிலுஞ் சூடுபோடவும்.



## * பன்றி நோய்


* செய்குணம் - தீவனந்தின்னாது மயிர் சிலிர்க்கும் கண் வட்டங்குழியும் வாயைத்திறக்கும் வாயாலே நுரைதள்ளும் செங்கோல் கண்டும் சுருக்கு மூத்திரம்விடும் கைநொடி தூரத்துக்கு ஓடி விழும்.

* மருந்து - அரையளவு பள்ளத்திற்கு குழிவெட்டி அதினுள்ளே ஓலைப்பாயை விரித்து அதில் ஒரு

நரி நாயையும் ஒரு நாய்க்கொடி விரிசன் பாம்பையும்போட்டு அதின்மேல் 16-படி உப்பைத் தட்டி அந்த இரண்டு ஜெந்துக்களையும் பொதித்து மேலே ஓலைப்பாயைக் கொண்டுமூடி மண்ணைத் தள்ளிவைத்திருந்து * ஒரு மண்டலஞ் சென்று எடுத்து எலும்பைப் பொறுக்கிப் போட்டு மேற்படி உப்பை ஒருமண் புதுக் குடத்தில் வைத்துக்கொள்ளவும் அந்த உப்பு பலம்-1, வெள்ளைப்பூண்டு பலம்-1 அரைத்து ஒருபடி தும்பைசாற்றிற் கொடுக்கவேண்டும்.

* அல்லது-சிறுதும்பைச்சாறு படி-1, வெள்ளாட்டு நீர் படி-1 சேர்த்துக்கொடுக்கலாம். பன்றிநோ யென்றதுக்கெல்லாம் சோதனைப் பலகையை மாட்டின் வாயிற்போட்டு அதின் வழியாகக் கையைவிட்டுப் பார்க்கிறபோது அந்த வியாதி யீருள்ளிச் சருகுபோலே கிடக்கும் அதை யெடுத்துப்போட்டு மருந்து கொடுக்க வேண்டியது குடிக்க வெந்நீர்விடவும்

இந்தப்படிக்கு
இடதுவிலாவிற் சுடவும்.



## வேறு

சழுத்தைக் கட்டிவீங்கும் நாசியடைத்துக் கிரட்டுக் கிரட்டென்று மூச்சுவிடும்.

* ஒரு மண்டலமென்பது—45-நாள்.



## நிவர்த்தி

இலுப்பைப்பிண்ணாக்கு பலம் 2

இதை யரைத்து குதிரை மூத்திரத்திற் கலக்கிப் புகட்டி இதனடியிற் கண்டிருக்கிற நசியத்தைப் பிழிந்து புகையும்போடத் தீரும்.

## நசியம்

இலுப்பைப்பிண்ணாக்கு
சிறுதும்பையிலை
பேய்ப்பீர்க்கிலை

இவைகளை ஓர் நிறையாகச் சிறுநீர்விட்டுத் மூக்கிலுங் கண்ணிலுங் காதிலும் நசியஞ்செய்யவும்.

## வேறு நசியம்

எருக்கிலைப்பழுப்பு
உப்பு


ஓர் நிரையாகக் நசக்கி கண், செவி, மூக்கில் நசியஞ் செய்யவும்.

## புகை

மாட்டின் மூட்டெலும்பு
பன்றிபுட்டை
பெருங்காயம்

இதுகளை ஒன்றாய்ப் பொடித்து நெருப்பிலிட்டுப் புகை காட்டவும்.

இந்தப்படி வீக்கத்திலும்
முகத்திலுஞ் சுடவும்.



வேறு

தொண்டைகட்டும், நாசியடைக்கும், கிரட்டுக் கிரட்டென்று சுவாசமிடும், வாயில் வெண்ணுரை தள்ளும், இரைதின்னாது, கண் சிவக்கும்.

நிவர்த்தி

கருங்கொரட்டையிலை
பேய்ப்பீர்க்கிலை
சங்கிலை
வேப்பங்கொழுந்து


இவைகளைச் சமமாயிடித்து காடிதெளித்து ஒருபடிசாறு பிழிந்து கொடுக்கவும். இந்தப்படி மூன்றுநாள் கொடுக்கத்தீரும்.

## * பன்றித்தாக்கன் நோய்

* செய்குணம் - தீவனந்தின்னாது, கண் வட்டங் குழியும், கண் சிவந்திருக்கும், கால் பாஞ்சி நிற்கும், தலையை யேறிட்டுப்பார்க்கும், அலறி விழும், கொம்பைப் பிடிக்கவொட்டாது கட்ட வொட்டாது.

* மருந்து - மேற்சொல்லியபடி சோதனைப் பலகையாற் சோதித்து பன்றி நோய்க்குச் சொல்லியிருக்கிற மருந்தைக் கொடுக்கவும் குடிக்க வெந்நீர்விடவும்.

இந்தப்படிக்கி
இருவிலாவிலுஞ்
சுடவும்.





## * பன்றிகுருக்கை நோய்

* செய்குணம்-தீவனந்தின்னாது, கண்விழி வட்டங் குழியும், அரைக்கண்போட்டு விழிக்கும், மயிர் சிலிர்த்திருக்கும், வயிறூதும், கண்சிவக்கும், செவிதாழும், கால்மடியாமல் விழும் விழுந்துகிடக்கும், இருபது நாழிகை சென்றால் வாயாலே நுரைதள்ளும், பின்பு தண்ணீர் வடியும்.

* மருந்து - சோதனைப் பலகைபோட்டுப் பார்த்து கொண்டு பன்றி நோய்க்குச் சொல்லியிருக்கிற மருந்தைக் கொடுக்கவேண்டும் குடிக்க வெந்நீர் விடவும்

இந்தப்படிக்கு
இருவிலாவிலுஞ்
சுடவும்.



இந்தப்படிக்கு
தவளையிற்
சுடவும்.



## * பன்றிமூட்டி நோய்

* செய்குணம் - தீவனந்தின்னாது, கண்விழி தெறிக்கப்பார்க்கும், வாயால் நுரைதள்ளும், பின்பு உதவித் தண்ணீர்போல வரும், இரைக்கும், குதவளையிற் கட்டும், ஜவ்வுபோற் சாணி போடும்.


* மருந்து-வெள்ளைப்பூண்டு பலம்-3, கார்கோலரிசி பலம்-2, கடுக்காய்த்தோல்-3, கையாந்தகரை,

குப்பைமேனி, சிறுதும்பை இவைகள் வகைக்கு பிடி-1, மேற்படி மருந்துடன் சேர்த்திடித்து வேப்பிலைச்சாற்றிற் கொடுத்த பிறகு குடிக்க வெந்நீர்விடவும்.

இந்தப்படிக்கு இருவிலாவிலுஞ் சுடவும்.



இந்தப்படிக்கு தவளையிலும் சுடவும்.



## * நன்குலை நோய்

* செய்குணம் - வாயை வாயைத்திறக்கும், வாயில் நீர்வடியும், நாக்கை நீட்டும், கண்கள் கலங்கிச் சிவந்திருக்கும்.

* மருந்து-பெருந்தும்பையிலை, அகத்தியிலை, சித்திரப் பாலாடையிலை, கோவைக்கிழங்கு இவைகள் வகைக்கு அரைத்தது மாங்காயளவு பீர்க்கங்காய் காய்ந்தகூடு-1, அரைத்து அத்துடன் சேர்த்து ஒருபடி காடியிற் கலக்கி கொடுக்கவும் இந்தப்படி மூன்றுநாள் கொடுக்கத் தீரும்.

## * காய்ச்சல் நோய்

* செய்குணம்-மேல்சுடும், தீவனந்தின்னாது, அசதியாக நிற்கும்.



* மருந்து-பேய்க்குறுஞ்சாயிலைச்சாறு படி-¼, குளப்பாலை யிலைச்சாறு படி-¼, ஒருபடி காடியிற் கலக்கி கொடுக்கவேண்டும், மூக்கரைச்சாரணை வேரும் குப்பைமேனி யிலையுமிடித்து நெய்க்கொட்டான் பழச்சாறுஞ் சிறுநீருஞ் சேர்த்துக் கலக்கி வடிகட்டி நாசியில் நசியம் பண்ணவும் துவாலையும் போடவும் குடிக்க வெந்நீர் விடவும்.

### வேறு

எருக்கிலைச் சாறுபோல கழியும் உடம்பு இளைத்துப் போகும்.

### நிவர்த்தி

பிரண்டை உப்பு இவை இரண்டையு மிடித்து உள்ளுக்குக் கொடுக்க சொஸ்தமாகும்.

## * அஸ்திசுரத்தின் நோய்

* செய்குணம் - உரோமஞ் சிலிர்க்கும் செவிதாழும் அதிக காங்கையில்லா விடங்களில் நடுக்கங் காணும் கழுத்தையும் விலாவையுஞ் சேர்ந்த தசை நரம்புகளில் இழுப்புக்காணும் ஈறுகளும் உதட்டின் உட்புறமும் புண்ணுப்போகும் ஆரம்பததில் மூன்றுநாள் நாலுநாள் வரைக்கும் பசி எப்பொழுதும்போலவே யிருக்கும் பின்பு பசி தீபனங்கெடும் வாய் உலர்ந்துபோகும் சளியைச் சேர்ந்த ஜவ்வு திரட்சியாகும் கண்களில் இருந்து தண்ணீர்வடியும் மூக்கிலிருந்து

சளிவடியும் எருக்கலுண்டாகி சீக்கிரத்தில் அதிகரிக்கும் தண்ணீர் தண்ணீராய் கழியும் சாணி அழுகலோடுஞ் சிரணிக்காத இரையோடுஞ் சீதத்தோடுங் காணப்படும் பின்பு இரத்தமாயுங் காணப்படும் மலங் கொஞ்சங் கொஞ்சமாயிறங்கும் அப்படி இறங்கும்போது அதிக வருத்தப்படும் நாடி துரிதமாயோடும் உடம்பின் மேற்புறமுங் காலின் மூளைகளும் குளிர்ந்து போவதுமன்றி கண்குழிந்து துரிதத்தில் மூச்சுவிடும்.

* மருந்து-முதலாவது இந்தமாட்டை வேறேயிடத்தில் தனியே கட்டவேண்டியது ஆரம்பத்தில் கழிச்சலில்லாவிட்டால் கர்ப்பூரம் ரூபாயிடை ½, பொட்டிலுப்பு ரூபாயிடை-½, கரு ஊமத்தை" விதை ரூபாயிடை-¼, நிலவேம்புக்குச்சு ரூபாயிடை-½, சாராயம் படி-அரிக்கால், இதில் கர்ப்பூரத்தை சாராயத்திற் கரைத்து மற்றதைப் பொடியாக்கி ஒன்றாய்ச்சேர்த்து ஒருபடி கஞ்சியிற் கலக்கிப் புகட்டவேண்டும் மேற்படி எருக்கலுண்டானதை உடனே நிறுத்தக்கூடாது ஏனெனில் அக்கழிச்சலினாலே வியாதி குறைவுபடும் கழிச்சல் அதிகரிக்கும்படி விடுவோமானால் பலயீனப்பட்டு கெடுதியுண்டாகும் ஆதலால் நாள் ஒன்றுக்குமேல் மேற்படி கழிச்சல் இருக்குமானால் மேற்சொல்லிய மருந்துடனே மாசிக்காய் அரையே அரிக்கால் ரூபாயிடை நிறுத்து நன்றாகப் பொடிசெய்து சேர்த்துக்



கொடுக்கவேண்டும். மாட்டுக்கு சௌக்கியம் உண்டாகிறதென்று காணப்பட்டால் மருந்தை குறைக்கவேண்டியது. அல்லது மருந்தை நிறுத்திப் போடவேண்டியது. உடம்பு மெலிந்துபோகாதபடிக்கு ஏற்ற ஆதரவுசெய்து கஞ்சி காய்ச்சி கொடுத்து பலத்தையுண்டாக்க வேண்டும் அதிக பலயீனமாயிருந்தால் கஞ்சியில் மாகாணிப்படி சாராயத்தைச் சேர்த்துக் கொடுக்கலாம் பசும்புல்லைப் போடவேண்டியது.

## * ஈரலைப்பற்றிய காய்ச்சல் நோய்

செய்குணம் - மூக்கு உலர்ந்திருக்கும் நாடி சுருக்காயோடும் கொம்புகளின் அடியிற் சூடாயிருக்கும் வாய் சூடாகவும் உலர்ந்துமிருக்கும் மலங் கட்டுப்படும் வலதுபக்கத்தைக் கையினாலே அழுத்தினால் நோவுண்டாகும்.

மருந்து - மலம் தாராளமாய் இறங்குகிறவரையில் ஒரு நாளைக்கு இரண்டு தடவை கரியபவளம் அரையே அரிக்கால் ரூபாயிடை முதல் ஒரு ரூபாயிடைவரையில் வெந்நீரிற் சேர்த்து கலக்கிக்கொடுக்கவும் பின்பு காய்ச்சலின் தன்மையைப்பார்த்து நாள் ஒன்று இரண்டுதடவை அல்லது மூன்றுதடவை கர்ப்பூரம் ரூபாயிடை-½, பொட்டிலுப்பு ரூபாயிடை-½, ‡ஜென்சன்ரூட்டு ரூபாயிடை-½ ஒன்று சேர்த்துக் கொடுக்கவேண்டும்

‡ ஜென்சன்ரூட்டு என்பது ஓர்வித வேர்.

## * மந்தத்தைச்சார்ந்த காய்ச்சல் நோய்

* செய்குணம் - இந்த வியாதி சாதாரணமாய் இராத்திரியிலே உண்டாகிறபடியினாலே சீக்கிரத்தில் கண்டுகொள்வதரிது உதயத்தில் மாடு அசதியாய் காணப்படும், தீவனந்தின்னாது அதிக தாகமுண்டாகும், வாய் உலர்ந்திருக்கும் அசை போடாது, மூச்சு துரிதமாய்விடும், முகம் விசாரமுள்ளதாக காணப்படும் நாடி படபடப்பாயோடும் நடக்கமாட்டாது நடக்கும்படி ஒட்டினால் அதிகமாய் நொண்டும் அப்படி நொண்டுகிற காலில் வீக்கம் காணப்படும், தோளிலாவது இடுப்புகளிலாவது முதுகுதுவக்கி பின்னங்கால்கள் வரைக்கும் அல்லது கால்களிலிருந்து குழைச்சு மயிர்த்திரள்வரைக்கும்இந்த வீக்கங் காணப்படும். அதைத் தொட்டுப் பார்த்தால் சூடாயிருக்கும் அதிகமாய் நோகும் நெறநெற என்கிற சத்தமுமுண்டாகும் வியாதி சீக்கிரத்தில் அதிகரிப்பதினால் மாடு வருத்தப்படும், கால்களில் வீக்கங்கொண்ட யிடங்களுங் குளிர்ந்து நாடி சீக்கிரமாயோடி படிபடியாய் இறங்கும் அதி தீனியினால் இரத்தபுஷ்டி அதிகமாய் அதற்கேற்ற வேலையில்லாமலிருந்தாலும் மழைகாலத்தின் ஆரம்பத்திலுண்டாகிற பசும்புல்லைத் தின்கிறதினாலும் இந்தவியாதியுண்டாகிறது.

* மருந்து - வீக்கங்களை கத்தியினால் கீறி அவைகளிலிருந்து கொஞ்சம் இரத்தம் வரும்படி செய்



தால் நல்லது முதலாவது பேதியாகும்படி சித்தாமணக்கெண்ணை படி-¼ கொடுக்கவேண்டியது பின்பு சுக்கு பலம்-3½, பொட்டிலுப்பு ரூபாயிடை - 2½, இரண்டும் பொடிசெய்து கால்படி கஞ்சியிற் போட்டுக்கலக்கி உள்ளுக்கு கொடுக்கவேண்டும் பிறகு ஒருமணிநேரத்துக்கொருவிசை கொடுக்கவும் இந்தப்படி மூன்று நாள் கொடுக்கவும்.

## * சளிநோயல்லது காய்ச்சல் நோய்

செய்குணம் - ஆரம்பத்தில் பசிதீபனங் கெடும் கண்கள் பஞ்சடைந்தாற்போல மந்தமான பார்வையாகும அடிக்கடி கொட்டாவிவிடும் அதுப்பினாலே செய்வதுபோல பின்னங்காலைச் சில வேளை நீட்ட முயற்சிக்கும் மயிர் சிலிர்த்துக்கொண்டிருக்கும் கொம்பு காது கால் இவைகள் குளிர்ச்சியாகயிருக்கும் உடம்பு முழுவதுமாவது சில இடமாவது நடுங்கும் பின்பு நாடி படபடப்பாகும் கண்கள் மந்தம்நீங்கிப்பிரகாசமாகும் உட்சவ்வுத்தோல்கள் சிவந்திருக்கும் வாய் வரண்டு சூடாயிருக்கும் நாக்கு முள்ளுப் போலிருக்கும் தண்ணீர்த் தாகமுண்டாகும் துரிதமாய் மூச்சுவிடும் சரியானபடி சாணி போட மாட்டாது நீர்விடுவது சிவந்த நிறமாயும் துர்வாசனையாயும் இருக்கும் கண்களிலிருந்து தண்ணீர் வடியும்.

* மருந்து - கரியபவளம் - 2½ ரூபாயிடை, சுக்கு 2½ ரூபாயிடை இவைகளைப் பொடிசெய்து அரைப்படி வெந்நீரிற் கலக்கி பேதிக்கு கொடுக்கவேண்டியதுந்தவிர சாணியைக் கரைத்துக் கொதிக்கவைத்து இரண்டு விலாவிலும் வேது போடவேண்டும் பின்பு கர்ப்பூரம்-2¼ ரூபாயிடை, பொட்டிலுப்பு ரூபாயிடை-2¼, நிலவேம்புக்குச்சி ரூபாயிடை- 2¼, இவைகளை யரைத்து உருண்டைசெய்து ஒரு நாளைக்கு மூன்றுதடவை உள்ளுக்குக் கொடுக்கவேண்டியது.

## * சன்னி நோய்

* செய்குணம்-கழுத்தை நீட்டாது மடக்கிக்கொண்டேயிருக்கும் நாலுகாலும் நடைகூடாது குறுக்கு நிமிர்ந்து நில்லாது நெளிக்கும் குண்டியைத் தாழ்க்கும்.

* மருந்து - அரைப்படி வேப்பெண்ணை கொடுத்து எருக்கம்பால் ஒரு சிரங்கை கொஞ்சம் வேப்பெண்ணை பன்றிநெய் சனி ஞாயிறு வசம்பு சுக்கு வெள்ளைப்பூண்டு இவைகளை யரைத்து கலக்கி கொதிக்கவைத்து இரண்டுநாள் துவாலை போடவும் குடிக்க வெந்நீர் விடவும்.

## 2 இதுவுமது

* செய்குணம் - கழுத்தை யொருபுறமாய்ச் சாய்த்துக்கொண்டு நிற்கும் புழுக்கைபோல அல்லது



உலர்ந்த சாணமாய்ப் போடும் வானத்தைப் பார்த்துக்கொண்டு நாய்போலக் குந்தியிருக்கும் பின்னங்காலிரண்டும் தடுமாறும் தீவனந் தின்னும் தண்ணீர்குடிக்கும் அசைபோடும் உடல் அயரும் அல்லது நடுங்கும்.


மருந்து - எருக்கலம்பூவை யிடித்துத் துணியிற் பொதிந்துகொண்டு இரும்புச்சட்டியில் வேப்பெண்ணைவிட்டு காய்ச்சி அதில் முக்கி சரீரமெல்லாம் ஒத்தல் போடவேண்டும் மறுநாள் திருகுகள்ளியும் நொச்சியிலையு மிடித்து துணியிற் பொதிந்துக்கொண்டு மேற் கண்டபடி வேப்பெண்ணையில் முக்கி ஒத்தல் போடவேண்டியது தவிர சுக்கு பலம்-1, மிளகு பலம்-1, பெருங்காயம் பலம்-½ இவைகளை யரைத்துப் போதுமான சிறுநீரிற் கலக்கி உள்ளுக்கு கொடுக்கவேண்டும்.

## 3 இதுவுமது

செய்குணம் - மாடு முதுகை வளைத்துக்கொண்டு நிற்கும் நடக்க மனமிராது அதை நடக்கச் செய்தால் திமிர்வாதங் கொண்டதுபோல தடுமாறும் வருத்தத்தோடே மூச்சுவிடும் அடிவயிறு நோகும் கண் வாயைச்சேர்ந்த புறம்பான சவ்வு திரட்டப்படும் நாடிமெலிந்து துரிதமாயோடும் முகம் களைப்பாகயிருக்கும் நீர் இரத்தநிறமாயிருக்கும் சீக்கிரத்தில் ஸ்மரணை கெட்டு ஆறுமணி நேரத்துக்குள்ளாக யிறந்து

போகும் உடம்பிலுள்ள இரத்தங் கெட்டுப் போவதுதான் இந்த வியாதிக்குக் காரணம் இது அசாத்திய வியாதியா யிருந்தபோதிலும்,

* மருந்து-ஆரம்பத்தில் சிற்றுமணக்கெண்ணெ படி காலரிக்கால் கொடுக்கவேண்டியது பின்பு பொட்டிலுப்பு ரூபாயிடை-1¼, சுக்கு ரூபா யிடை-1¼ பொடி செய்து அரைக்கால்படி சாராயத்திற் சேர்த்து கொடுக்கவேண்டியது இந்தப்படி ஒருமணி நேரத்துக் கொருதபா கொடுத்து வரவும்.

இந்தப்படி
தலையிற்சுத்தி
சூடுபோடவும் 
இந்தப்படி நெத்தி
யிற் சுடவும் 
இநதப்படி வயற்றில்
சுடவும். 

## விருட்டி பெருநோயின் குணம்

கவிழ்ந்துநிற்கும் குறுகுறுக்கும் வாயில் நீர் வடியும் தொண்டைக்குள் பந்துபோலடைக்கும் இந்தப்பிணி கண்ட நிமிஷமே அவுடதஞ் செய்யா விட்டால் மூர்ச்சடைத்து கொன்றுவிடும்.

நிவர்த்தி

| | | |
|---|---|---|
| சுக்கு | பலம் | ¼ |
| வெள்ளுள்ளி | ,, | ¼ |



| | | |
|---|---|---|
| காலிட்புழுக்கை | பலம் | ¼ |
| வசம்பு | ,, | ¼ |
| மிளகு | ,, | ¼ |
| ஓமம் | ,, | ¼ |
| புகையூரல் | ,, | ¼ |
| கருஞ்சீரகம் | ,, | ¼ |
| பெருங்காயம் | ,, | ¼ |
| அரிதாரம் | ,, | ¼ |
| குப்பைமேனியிலை | பிடி | 2 |
| தைவேளையிலை | ,, | 2 |

இவைகளை யெல்லாம் பேய்க்குமட்டிக்காய்ச் சாற்றில் அரைத்து கலக்கிப்புகட்டவும் இந்தப்படி மூன்று நாள் கொடுக்கத்தீரும்.

இந்தப்படி கழுத்திற் சுடவும் 

## * மூளையைப்பற்றிய சன்னி நோய்

* செய்குணம்-ஆரம்பத்தில் மாடு அசதியாய் தூக்க மயக்கமுள்ளதுபோ லிருக்கும் தலையைநீட்டி அதைத் தாங்கிகொள்ளும்படி ஒன்றைநாடும் நாடி நிறைவுந் தாமதமுள்ளதாயிருக்கும் வாய் கண் இவைகளைச் சேர்ந்த சவ்வு திரண்டிருக் கும் அறிவுகெட்டு அதிக கலக்கமுள்ளதாகி கிட்டவருகிற மனிதனையும் மாடுகளையு முட்ட வரும் அடிக்கடி கதறி பூமியை கொம்புகளி லும் முன்னங்கால்களினுலுங் கிளறும் தலையின்

மேல் படுகிற அடியினாலாவது கொம்பு ஒடிந்து போவதினாலாவது அதிக வெயிலில் வெகு தூரம் ஓட்டுவதினாலாவது இந்த வியாதி உண்டாகிறது.


* மருந்து - இருபது நெல்லிடை நேர்வாளப்பருப்பை யரைத்து காலே அரைக்கால்படி சிற்றாமணக்கெண்ணெயிற் கலந்து கொடுக்க வேண்டியது பேதியாகும்.

## * முகவாதசன்னி நோய்

* செய்குணம் - நாக்கைச்சுருட்டி வலிக்கும் செவி தாழ்ந்திருக்கும் முகத்தையுமிழுக்கும்
* மருந்து † பொக்கணந்தூக்கிப் பச்சிலைச் சாறு படி-½ கொடுக்கவேண்டியது.


* அல்லது - இலுப்பெண்ணெ வேப்பெண்ணெ புன்னைக்காயெண்ணெ நல்லெண்ணெ விளக்கெண்ணெ முடக்கற்றான்சாறு வகைக்கு காற்படிவீதஞ் சேர்த்து அதில் சுக்கு பலம்-1, வெள்ளைப்பூண்டு பலம்-1 தட்டிப்போட்டு கொஞ்சம் மயிலிறகும்போட்டு காய்ச்சி போதைக்கு கால்படிவீதங் கொடுக்கவேண்டும் மேலே துவாலையும் போடவும் குடிக்க வெந்நீர் விடவும்

இப்படி

நெற்றியிற்சுடவும் 

இந்தப்படிக்கி

முதுகிற்

சுடவும். 

† பொக்கணந்தூக்கி யென்பது முடக்கற்றான்.



## * வலிப்பின் நோய்

* செய்குணம் - நாலுகால்களும் வலித்திழுக்கும் உடல் குளிர்ந்திருக்கும் தலையைப்போட்டடித்துப் பறக்கும்.

* மருந்து - சுக்கு பலம்-½, வசம்பு பலம்-¼, அரைத்து குருவிஞ்சியிலைச்சாறு குப்பைமேனிச்சாறு வேப்பெண்ணெ வகைக்குப்படி-¼, சேர்த்து கொடுக்கவேண்டும் குறிஞ்சாயிலைச்சாறு சிந்தல் கொடியிலைச்சாறு கூட்டி துவாலை போடவும் குடிக்க வெந்நீர்விடவும்.

நாலுகாலிலும் இரங்கச்சுடவும் 

### வேறு

உடலைத்திருகி முறுக்கி வலிப்புண்டாகும் தடுமாறி நிற்கும்.

### நிவர்த்தி

ஆனைலெத்தி
குதிரைலெத்தி
ஆனைநெருஞ்சி

இவைகளை சமமாயிடித்து ஒருபடி சாறுபிழிந்து உள்ளுக்குப் புகட்டி உடம்பிலுந் துவாலையிடத் தீரும் இந்தப்படி மூன்றுநாள் கொடுக்கத்தீரும்.

இந்தப்படிக்கு 

இருவிலாவிற் சுடவும்.

## நாய்புரிநோயின் குணம்

முறுகி முழுகி சிமிரும் வெயிலிற்போய் தூங்கி விழும்.

நிவர்த்தி

| | | |
|---|---|---|
| தலைச்சுருளிவேர் | பலம் | 3 |
| வெற்றிலை | ,, | 5 |
| வசம்பு | ,, | 2 |

இவைகளை யரைத்து காடியிற் கலக்கிப் புகட்டவும் இந்தப்படி மூன்றுநாள் கொடுக்க தீரும்.

இந்தப்படிக் கிடது விலாவிற் சுடவும். 

## நாய்வலிப்புநோயின் குணம்

முதுகை நெளிக்கும் முறுக்குங் கீழேவிழும்.

நிவர்த்தி

கருத்தக்காக்கணத்தியிலை
நாய்ப்பாகயிலை
குன்றிமணியிலை

இவைகளை கொண்டுவந்திடித்துச் சாறுபிழிந்து உடலாதியந்தமும் பூசி நாசியில் நசியமிடத்தீரும்.

வேறு

| | | |
|---|---|---|
| வேப்பெண்ணெய் | படி | ¼ |
| வாகையிலைச்சாறு | ,, | ¼ |
| புங்கன்வேர்ச்சாறு | ,, | ¼ |



| | | |
|---|---|---|
| வெள்ளுள்ளி | பலம் | 1 |
| வசம்பு | ,, | 1 |

மேற்படி சாறுகளையும் வேப்பெண்ணெயையும் ஒன்றாய்க் கலந்ததில் மற்றிரண்டு மருந்துகளையு மரைத்துப்போட்டுக் காய்ச்சி முதுகிலுங் காதிலும் விட்டு உடம்பிலுந் தடவாலேயிடத் தீரும்.

இந்தப்படி பின்னங்கால்த்தொடை இரண்டிலுஞ் சுடவும் |||

இந்தப்படிக் கிடதுவிலாவிற் சுடவும் —000—

## * நரம்புவலிப்பின் நோய்

* செய்குணம்-முதலில் ஒருவித திமிர் உண்டாகும் மறுநாள் அது அதிகப்படும் மூன்றுநாளில் உடம்பிலுள்ள தசைநரம்புகளெல்லா மதிகமா யிழுப்புக்கொள்ளும் நரம்புகளில் அதிக அழற்சியுண்டாயிருக்கும் தலையை உயர்த்திக் கொண்டிருக்கும் மூக்கு நீண்டிருக்கும் கண்ணின் எதிரில் ஓர்வித தோல் பெழும்பியிருக்கும் வாலைத் தூக்கிக்கொண்டிருக்கும் வாய் திறக்கப்படாமல் பல்ப்பூண்டு போகும் கிட்ட யாராவது போனால் அதிக கலக்கமும் பயமுமுள்ளதாய் காணப்படும் துரிதமாய் மூச்சுவிடும் நாடி சுருக்காயோடும் சாணிபோடாது.

மருந்து - முதலாவது பேதியாகும்படி நேர்வாளப் பருப்பு 25-நெல்லிடை யரைத்து சிற்றாமணக்கெண்ணெ படி-காலே அரைக்காலிற் கலக்கிக் கொடுக்கவேண்டியது பின்பு நரபயைச்சேர்ந்த

அழற்சி நீங்கும்படி நாலுமணிநேரத்துக்கொரு தடவை அபின் ரூபாயிடை கருஊமத்தை விதை ரூபாயிடை-அரைக்கால், இம்மூன்றுங் கொடுத்து வரவேண்டும்.


## * கணைடவலிப்பின் நோய்

* செய்குணம்-விழுந்து கிடக்கும் கழுத்தை தெற்றி வலிக்கும்.
* மருந்து-மாவிலங்கிலையை அரைத்து மாங்காயளவு உண்டைசெய்து ஒருபடி வெள்ளாட்டு நீரிற் கலக்கிக் கொடுக்கவேண்டும் பிறகு மாவிலங்கு வேரும் நீர்பூலாயிலையும் அரைத்து சதுரக்கள்ளிப்பால் விட்டுப் பிசைந்து மேலே பூசவும் குடிக்க வெந்நீர்விடவும்.

## * கொடுவலிப்பின நோய்

* செய்குணம்-வலிப்புத்தோன்றி திடுக்கிட்டு வலிக்கும் காலையிழுத்துவைக்கும் வாயில் நீர்வடியும்.
* மருந்து - குன்றியிலை கொன்றையிலை வகைக்கு மாங்காயளவு இடித்து ஒருபடி காடியிற் கலக்கி கொடுக்கவேண்டும.

எரியிலிருந்து நெடுக இழுத்து நாலுகாலு மிறங்கச் சூடும் இட்டு விலாவிலுஞ் சூடுபோடவும்.






## * குலைகூனிவலிப்பின் நோய்

செய்குணம் - கண் சிவந்திருக்கும், தீவனந் தின்னாது, திகைத்துக்கொண்டு நிற்கும் வலிப்புத் தோன்றியிருக்கும்.

மருந்து - சுக்கு பலம்-½, அதிமதுரம் பலம்-½, விழுதியிலை, விளாத்தியிலை வகைக்கு மாங்காயளவு அரைத்துக் கோமுத்திரம் படி ஒன்றிற் கலக்கி கொடுக்கவேண்டும் சாரணைவேரை யரைத்து நல்லெண்ணெயிற் கலக்கி கொதிக்கவைத்துத் துவாலைபோடவும்.

இந்தப்படிக்கு இருவிலாவிலும் சுடவும்.




## * திருக்குவலிப்பின் நோய்

செய்குணம் - திருகத்திருக வலித்திழுக்கும் நிற்கமாட்டாது, சுற்றிச் சுற்றிவரும், தடுமாறும்.

மருந்து - ஆனைலத்தி குதிரைலத்தி ஆனைவணங்கி அல்லது ஆனைநெரிஞ்சி இவைகளை யிடித்துப் பிழிந்து வகைக்கு காற்படி சாறுகொடுக்கவேண்டியதுந் தவிர மேலே துவாலையும் போடவேண்டும்.

நாலுகால்களிலும் இறங்கச் சூடுபோட்டு பிறகு இருவிலாவிலுஞ் சூடுபோடவும்.




## * குதிரைவலிப்பின் நோய்

* செய்குணம் - நாலு கால்களும் வலித்திருக்கும், மார்பில் வலிகாணும். அரைக்கண் போட்டு விழிக்கும்.

* மருந்து - ஐவிரலிக்காய் வெள்ளருக்கலங் கொம்பு மேற்படி பூ இம்மூன்றும் தனித்தனி அரைத்து வகைக்குச் சிறுமாங்காயளவு திரட்டிக் கள்ளிச் சாறு படி-$\frac{1}{4}$, கோமூத்திரம் படியொன்றில் இதுகளைச் சேர்த்துக் கலக்கி ஒருவேளை கொடுக்கவேண்டியது மறுநாள் முதல் கற்பூர வல்லி யிலையும் ஒருபிடி கூடச்சேர்த்துக் கொடுக்கவேண்டும்.

* அல்லது-சுக்கு பலம்-1, மிளகு பலம்-1, திப்பிலி பலம்-$\frac{1}{2}$, ஓமம் பலம்-$\frac{1}{2}$, வசம்பு பலம்-$\frac{1}{4}$, பெருங்காயம்பலம்-$\frac{1}{4}$, வெள்ளைப்பூண்டுத் தயிலம் பலம்-2, வேப்பெண்ணை படி-$\frac{3}{4}$, புஞ் சேர்த்துக் கொடுக்கலாம குடிக்க வெந்நீர் விடவும்.

தலைமுதல் வால்வரை முதுகிலிருபுறமும் வரையாக இழுத்துச் சூடும் நாலுகால்களும் இறங்கச் சூடு போடவும்.






### 2. இதுவுமது

செய்குணம்-புல் வைக்கோல் அரைவாய்கொண்டு தின்னும் கண்ணையுருட்டி விழிக்கும் தலையை யேறவாங்கும் வாயிலே நுரை தள்ளும் நாலு காலும் தள்ளும் கீழேவிழுந்து புரளும் கண்ணை சொருகி வாங்கும் பாரும்.

* மருந்து-சன்னிநாயிறு பலம்-1$\frac{3}{4}$, அபின் பலம்-1$\frac{3}{4}$, பனங்கள்ளு படி-1, குன்றியிலைச்சாறு படி-1, சாராயம் படி-$\frac{1}{4}$ இவையெல்லாம் ஒன்றாய்க் கலக்கி கொடுக்கவும் அதன் பிறகு கொம்பு மறுத்துச் செவிபுமறுத்து கண்ணடி நரம்பு துடிப்புப் பார்த்து.

நாலுகாலிலுமிறங்கச் சுடவும் விலாவிலுஞ் சூடு போடவும்.



### வேறு

நடுநடுங்கிக் கீழேவிழும் வாயில் வெண்ணுரை தள்ளும் கண் குழிவிழும்.


### நிவர்த்தி

கருங்கொரட்டை மேற்படி மூலிகை சமூலங் கொண்டுவந்து இடித்து வெந்நீர்விட்டுச் சாறு பிழிந்து நாள் ஒன்றுக்கு ஒருபடி வீதம் மூன்றுநாட் கொடுக்க தீரும்.

வேறு

எருக்கம்பூ பிடி-3, இதைப் பசுவின்நீரி லரைத்து கலக்கி இரண்டுநாள் கொடுக்கத்தீரும்.

இந்தப்படி இருபக்கத்திலுஞ் சுடவும்.




## * ஆனைவலிப்பன் நோய்

* செய்குணம் - தீவனந் தின்னாது, கண்ணையுருட்டி விழிக்கும், தலையை ஏறவாங்கும் வாயால் நுரைதள்ளும், நாலுகால்களுந் தள்ளும் விழும், இழுக்கும் கண்ணைச்சொருகி வாங்கும் படபடத்து விழும் பாரும்.


* மருந்து - சன்னிநாயறு பலம்-½, சுடலாவரையிலை சாளைக்கருவாடு வகைக்கு அரைத்து நெல்லிக்காயளவு கருங்குன்றியிலைச்சாறு படி-¾, பனங்கள்ளு படி-1, கழுதை மூத்திரம் படி-1, சேர்த்து கொடுக்கவேண்டும் குடிக்க வெந்நீர் விடவும்.

இதில் கண்ட சூடுபோட்ட பிறகு மாட்டின் தலையிற் குளிர்ந்த ஜலம் நூறுகுடம் விடவேண்டியது.

இருவிலாவிலுஞ் சூடுபோடவும்.



இந்தப்படி தலையிற் சூடுபோடவும்.





## சன்னிவலிப்பின் குணம்

நாலுகாலுந் தெத்தி தெத்தி நடக்கும்

நிவர்த்தி

பூண்டு
வசம்பு

இவை யிரண்டையும் அரைத்து காடியிற் கரைத்து கொடுக்கவும் பின்பு சூலப்போல சுடவும் உடனே குணங்கொடுக்கும்.

## * முசல்வலிப்பின் நோய்

* செய்குணம் - இன்ன வேளையென்றில்லாமல் நிற்கும்போதும் நடக்கும்போதும் காசாவிற்கட்டியிருக்கும்போதும் திடீரென்று கீழேவிழுந்து வலிப்புத்தோன்றி யிழுக்கும்.

* மருந்து - காக்கையைக்கொன்று தீயிற்சுட்டு கால் தலை ரோமம் இறகு இவைகளைத் தள்ளிப்போட்டு வயிற்றைக்கீறி குடலை யெடுத்துப்போட்டு நின்றதை அரைப்படி சாராயத்தில் வேகவைத்து முள்ளு எலும்புகளை பொறுக்கிப் போட்டு பிசைந்து உள்ளுக்கு கொடுக்க வேண்டும்.

* அல்லது-கஸ்தூரி பலம் அரிக்கால், கோரோசனை பலம்-¼, சாதிக்காய்-1, இவைகளைப் பொடி செய்து மலட்டு வெள்ளாட்டு நீரில் விளாவிக் கொடுக்கவேண்டியது மேற்படி ஆட்டின் இரத்தத்தை நசியமும்பண்ணி மேலே துவாலை போடவும் குடிக்க வெந்நீர்விடவும்.

## * வெதுப்பு நோய்

* செய்குணம் - மயிர் சிலிர்த்திருக்கும், எகுரும்.

* மருந்து - துத்தியிலை கர்ப்பூரவள்ளியிலை மாதளையிலை மாதளம்பிஞ்சு வகைக்கு குக்கு ஒன்று சேர்த்திடித்து கவளங் கொடுக்கவேண்டும்.

* அல்லது - ஈருள்ளி பலம்-5, விடத்தலையிலை அரைத்து மாங்காயளவு எருமைமோர் அல்லது காடியிற் கலக்கி கொடுக்கலாம்.

* அல்லது-ஆத்துஅலரியிலை பிடி-3, சீரகம் பலம்-1, ஈருள்ளி பலம்-5 இவைகளை யிடித்து கவளங் கொடுக்கலாம்.

* அல்லது-கொடுப்பையைச் சமூலத்துடன் வெந்து பிசைந்து இறுத்துககொண்டு அதிற் சீரகம் படி அரைக்கால் ஈருள்ளி பலம்-2 அரைத்து கலக்கி எருமைமோர் படி ஒன்றிற் சேர்த்துக் கொடுக்கலாம

* அல்லது - அயிரைமீன்-1, இசங்கம்பட்டை மாங்காயளவு அரைத்து ஒருபடி மோரிற் கலக்கி எல்லா வெதுப்பு நோய்க்குங் கொடுக்கலாம்.

### இதுவுமது

* செய்குணம் - தண்ணீர்போல கழியும் உடம்பு உலர்ந்து அசதியாகும்.

* மருந்து - கற்றாழையைக் குறுக அரிந்து வெந்து தேங்காயளவு, கல்லுப்பு பலம்-¼, ஒருபடி மோரிற்கலக்கி கொடுக்கவேண்டும்.



### 3 இதுவுமது

* செய்குணம்-அடிக்கடி எகுரும் வைக்கோல் முதலிய உலர்ந்ததீனி தின்றுக்கொண்டேயிருந்து சடுதியிற் புல்முதலிய பசுந்தீனி தின்பதினாலும் உஷ்ணமாயிருந்து உடனே குளிர்ச்சி உண்டாவதினாலும் இராக்காலத்தில் வெட்டவெளியி லிருப்பதினாலும் உண்டாகும்.


* மருந்து-பசுந்தீனியால் உண்டாயிருந்தால் அதை நிறுத்தவேண்டியது குளிர்ச்சியினாலும் ஈரத்தினாலு முண்டாயிருந்தால் உடனே கூரைக்குட் கட்டி சூடெழும்பத்தேய்த்து உஷ்ணமாயிருக்கும்படி கம்பளி முதலானதைப் போர்க்க வேண்டியது. எரிச்சல் நிற்காமல் பலத்து கொஞ்சஞ் சுரமுங்கண்டால் அபின் ரூபாயிடை-1½, சாராயம்படி அரைக்கால், கஞ்சி படி-½ இம்மூன்றையுஞ் சேர்த்து கொடுக்க வேண்டும் நாலுமணிக் கொருதரங் கொடுக்கலாம்.

### இதுவுமது

* செய்குணம் - மூக்கிலிருந்து நீர்வடியும் செங்கல் மங்கலாக வெகுரும்.

* மருந்து - தென்னம்பூவிரியிற் காடிவிட்டிடித்துப் பிழிந்தசாறு ஒருபடி கொடுக்கவேண்டும்

இப்படிக்கி இடதுவிலாவிற் சுடவும்.



### 5 இதுவுமது

* செய்குணம்-வாய்நீர்வடியும் மயிர்சிலிர்க்கும் தீவனம் அரைவாய்க்கொண்டு தின்னும் அடிக்கடி சிறுகச் சிறுகவெருகும்.


* மருந்து - பெரிய கிலுகிலுப்பைச்செடி சமூலங் கொண்டுவந்திடித்துப் பிழிந்தசாறு படி-கால் கொடுக்கவேண்டும்.

### 6. இதுவுமது

* செய்குணம் - தின்றதீவனம் நன்றாய்ச் செரியாமலும் உடலில் ஒட்டாமலும் எகிரிக்கொண்டிருக்கும் உடம்பு மெலியும்.

* மருந்து-ஈருள்ளி பலம்-10, சீரகம் பலம்-5 இவைகளை அரைத்து பசுவுக்கு எருமை மோரிலும் எருமைக்குப் பசுவின் மோரிலுங் கலக்கி கொடுக்க வேண்டியது.

இந்தப்படிக்கு இடதுவிலாவிற் சூடுபோடவும்.





### 7 இதுவுமது

* செய்குணம் - கண்களிலிருந்தும் வாயிலிருந்தும் நீர்வடியும் சாணி பிச்சிக்கழியும் நாறும்.



* மருந்து - விளாயிலை பிடி-3, இண்டங்கொழுந்து பிடி-3 அரைத்து மூன்றுபடி தண்ணீரிற் கலக்கி கொடுக்கவேண்டும்.

இந்தப்படிக் கிடதுவிலாவிற் சுடவும்.




### * நீராத எருக்கல்

* மருந்து-பங்கம்பாளைவேரும் இலையு மாங்காயளவு அரைத்து அரைப்படி பசுவின்பாலிற் கொடுக்க வேண்டும் எருக்கல் நின்றுபோவதுந் தவிர சாணியும் போடாது அதற்கு உப்பிலி வேர் பலம்-1 அரைத்து ஒருபடி தண்ணீரிற் கலக்கி குடிக்கக் கொடுத்தால் சரியானபடி சாணி போடும் வேண்டியிருந்தால் மூன்றுநாள் கொடுக்கலாம்

### வேறு

நொடிப்பையை சமூலம் பிடுங்கிவந்து இரவு அடுப்பில் வேகவைத்து காலையில் தண்ணீரிறுத்துக் கொண்டு சீரகம் நெல்லிக்காயளவும் வெங்காயம் எலுமிச்சங்காயளவும் அரைத்து எருமை மாடானால் பசுவின்மோரிலும் பசுமாடானால் எருமை மோரிலும் கொடுக்கவேண்டும்.

இந்தப்படிக்கு இடதுவிலாவிற் சுடவும்



## * சீதளவெதுப்பு நோய்

* செய்குணம் - உடம்பெல்லாங் குளிர்ந்திருக்கும் செவிதாழ்ந்திருக்கும், கண்குழியும் சிலநாள் சென்றபின் தண்ணீர்போலெருகும்.

* மருந்து-கடுககாய்தோலு-7, கருஞ்சீரகம் பலம்-$\frac{1}{4}$, கடுகு பலம்-$\frac{1}{4}$, ஓமம் பலம்-1, மஞ்சணத்திக் கொழுந்து பிடி-3, வசம்பு பலம்-$\frac{1}{4}$, திருநாமத் தாளியிலை சாரணத்தியிலை வகைக்கு அரைத்தது மாங்காயளவு பழம்புளியிலை பலம் அரை, ஒருபடி காடியிற் கொடுக்கவேண்டும்.

## * சில்வெதுப்பு நோய்

* செய்குணம் - கண்ணிற் பீளைசாடும் மயிர்சிலிர்க்கும் சரீரஞ்சுடும் உடம்புசுழிக்கும் குறுவிளிற்கும் எருகும் அசையிடாது.

* மருந்து - அதிமதூரம் பலம்-அரை, ஏலம் பலம் அரை, கிறும்பு பலம்-அரை, சுருள்ளி பலம்-1, சீரகம் பலம்-$\frac{3}{4}$, கோட்டம் பலம்-அரை, சுக்கு பலம்-அரை, இலவங்கம் பலம் அரிக்கால் இலந்தையிலை பிடி-1, அத்திப்பிஞ்சு படி-$\frac{1}{4}$, அரைத்து பசுவின்பால் அல்லது கழுநீர் படியொன்றிற் கலக்கி கொடுக்கவேண்டும்.

## * பெருவெதுப்பு நோய்

* செய்குணம் - தீவனம் அரைவாய்கொண்டு தின்னும் வயிறு சிறுமந்தங்கொள்ளும் மயிர்சிலிர்க்கும் கண்கள் கலங்கிக் கண்பட்டைகள் வீங்



கும் மேலே கொதிக்கும் எருகும் மூன்றுநாளேருகிறபோது நுரைக்கும்.

மருந்து - ஏலம் பலம்-$\frac{1}{2}$, இஞ்சி பலம்-1, சீரகம், பலம்-1, வசம்பு பலம்-$\frac{1}{4}$, மிளகு பலம்-$\frac{1}{4}$, வெற்றிலை பலம்-1 இவை ஒன்றுசேர்த் தரைத்து பருத்திவிதைப்பால் படி 1-ல் கலக்கிக் கொதிக்க வைத்து இரண்டு பொழுது கொடுக்க வேண்டும்.

பின்பு சீரகம் பலம்-1, அதிமதூரம் பலம்-1, செங்கழுநீர்க்கொட்டம் பலம்-1, இலவங்கம்பலம்$\frac{1}{4}$, சுருள்ளி பலம்-1, வெதுப்படக்கியிலை பிடி-1, கருவைக்கொழுந்து பிடி-1, ஆவாரம்பூ பிடி-1, பருத்திபூ பிடி-1, பருத்திப்பிஞ்சு படி-$\frac{1}{4}$, அத்திப்பிஞ்சு படி-$\frac{1}{4}$, மாதளம்பிஞ்சு-5, கொடுப்பைவிழியிலை பிடி-1, திருநாத்தாளி பிடி-1, உளுந்துபடி-$\frac{3}{4}$, இவ்வளவும் ஒன்றுச் சேர்த்தரைத்து கவளஞ்செய்துக் கொடுக்கவும்.

* அல்லது - அத்திப்பட்டை பலம்-1, ஆவாரம்பட்டை பலம்-1, மருதப்பட்டை பலம்-1, நெல்லிப்பட்டை பலம்-1, குருந்தட்டி சமூலம் பலம்-1, உதலி பலம்-3, இவைகளைத் தரித்துப் போட்டு பத்துப்படி தண்ணீர்விட்டுக் கொதிக்க வைத்துப் போதைக்கு இரண்டுபடி தண்ணீர் காட்டவும்.

இந்தப்படிக்கி
இடதுவிலாவிற் சுடவும்.



### * குடல்வெதுப்பு நோய்

* செய்குணம் - கண்சிவந்து கண்ணீர்வடியும் பீளை சாடும் வாயில்நீர்வடியும் எருகும்.


* மருந்து-சருள்ளி பலம்-2, சமுத்திராபழம் பலம்-¾, சதகுப்பை பலம்-¾, குருந்தட்டி வேர்த்தொலி பலம்-½, வீழியிலை பிடி-1, தென்னம்பூவிரி இவை மருந்துடன் சேர்த்தரைத்து மாங்காய்ப் பிரமாணம் உண்டைத்திரட்டி எருமைமோர்படி 2-ல் கலக்கிக் கொடுக்கவேண்டும்.

### * ஒழுக்கு வெதுப்பு நோய்

* செய்குணம் - செகிழமாகச் சாணிபோடும் அடிக்கடி சிறுகச்சிறுக எருதும் சவ்வுசவ்வாய்ப் பிச்சம் உடம்பெல்லாந் தடிசகும்.

* மருந்து - விடத்தலையிலை விழியிலை வகைக்கு மாங்காயளவு அரைத்துப் பழமோர் அல்லது பழங்காடி படி-மூன்றிற் கலக்கிக் கொடுக்கவேண்டும். கொப்பூழில் நின்று வயிற்றைக் கட்டி மேலே கூடிவாங்கவும்.

இந்தப்படி
மேலே சுடவும்.



### * மூலவெதுப்பு நோய்

* செய்குணம் - நடைதளரும் உடம்பு கொதிக்கும் தீவனந்தின்னாது நாக்கு வழுவழுக்கும் நீர்




சிவந்திருக்கும் அயர்ந்து கிடக்கும் சிறிது நேரஞ் சாணி மிறுகலாகப்போடும் சிறிது நேரஞ் எருதும் அதிற் துர்நாற்றமுண்டாகும்.

மருந்து - சீரகமும் கோவைத்தண்டிலையும் சேர்த்தரைத்து மாங்காயளவு உண்டைசெய்து ஒருபடி பசுவின்பாலிற் கொடுக்கவேண்டும்.


அல்லது-சீரகம் பலம்-1, வெள்ளைப்பூண்டு பலம்-1, எள்ளுபிண்ணாக்கு பலம்-5, இவைகளை யிடித்து இத்துடன் முருக்கிலைச்சாறு படிகாலும் புழுங்கலரிசி படி-அரையும் வெந்த சாதத்திற் சேர்த்து உள்ளுக்குக் கொடுக்கவும்.

அல்லது-கடுக்காய்த்தோலு-7, நீர்க்கடுப்புத்தோல் உலகுய்யக் கொட்டர்ஞெய ஊசியிலையும் மேற்படிவேரும் வகைக்கு இடித்ததூள் மாங்காயளவு எடுத்துக்கொண்டு இரண்டுபடி தண்ணீரிற் போட்டுக் கொதிக்கவைத்து உள்ளுக்குக் கொடுக்கவும்.

இந்தப்படி
முதுகிற்
சுடவும்.



இந்தப்படிசகு
நெத்தியிற் சுடவும்.



### * மந்தவெதுப்பு நோய்

செய்குணம் - மயிர்சிலிர்த்திருக்கும் வாயால் நீர் வடியும் தீவனந்தின்னாது தூங்கிவிழும்.

* மருந்து - அரைப்படி எள்ளையிடித்து மாங்காய் அளவு வெண்ணெயிற் குழப்பி அல்லது 1-படி பாலிற் கலக்கி கொடுக்கவேண்டும்.

* அல்லது-மிளகு பலம்-1, வெள்ளைப்பூண்டு பலம்-2, அகத்திச்சாறு படி-¼ நெய் படி-¼, சேர்த்து கொடுக்கவேண்டும். குடிக்க வெந்நீர் விடவும்.

இந்தப்படி விலாவிற் சுடவும்.



## * அழல் வெதுப்பு நோய்

* செய்குணம் - உடம்புகொதிக்கும் மேலெல்லாந் தடித்து சிரங்குபோலிருக்கும் எருகும்.

* மருந்து - சதகுப்பை பலம்-½, அத்திப்பட்டை அகத்திப்பட்டை அதிமதுரம் தென்னம்பூவிரி வகைக்கு மாங்காயளவு அரைத்து ஒருபடி காடியிற் கொடுக்கவேண்டும்.

2. இதுவுமது

* செய்குணம்-கண்சிவந்திருக்கும் பீளைசாடும், கண்ணீர்வடியும் தலைகவிழ்ந்து நிற்கும் மேலெல்லாங் கொப்பளமாக விருக்கும் தலை நடுக்கும் சரீரம் பரப்பெடுக்கும் செருமும் நாக்கில் காசுபோல் தடிக்கும்.

* மருந்து - கற்பூரவள்ளி யிலைச்சாறு படி-¼, தாளி யிலைச்சாறு படி-½, கற்றாழஞ்சோறு படி-¼ குருந்தட்டியிலை குளிதாமரையிலை அரைத்தது



வகைக்கு மாங்காயளவு, சீரகம் பலம்-1, அதிமதுரம் பலம்-1, ஓமம் பலம்-1, ஏலம் பலம்-1, சுருள்ளி பலம்-2 அரைத்து இரண்டுபடி காடியிற் கொடுக்கவேண்டும்.

அல்லது - புல்லுருவி அரைத்தது மாங்காயளவு வாழைப்பழம்-20 இளநீர் தண்ணீர்படி இரண்டிற் கொடுக்கலாம்.


3 இதுவுமது

செய்குணம் - மேல்கொதிக்கு உடம்பெங்கும் பொத்திட்டு வாரியிடும் முதுகையும் உடலையுஞ் சுழித்ததைச் சுழித்து வாந்தும் தீவனந்தின்னாது கிடந்த கிடையிற் கிடக்கும்.

மருந்து - நவ்வாப்பட்டை அத்திப்பட்டை மருதம் பட்டை குருந்தட்டிவேர் வகைக்கு பலம்-5 இடித்து காடியில் ஊறப்போட்டிறுத்துக் கொடுக்கவேண்டும்.

* அல்லது-கட்டுக்கொடி யிலைச்சாறு படி-¼, தாளி யிலைச்சாறு படி-¼, கரிமுசுட்டை யிலைச்சாறு படி-¼, பருத்திவிதைப்பால் படி-¾, எருமைப் பால் படி-1 சேர்த்து கொடுக்கலாம்.

இந்தப்படிக்கி இடது பக்கம் சூடுபோடவும்.




## * இரத்தவெதுப்பு நோய்

* செய்குணம் - இரத்தமாகப் பீசும் ஆடைபோலே அந்த இரத்தத்துக்குள்ளே கலந்திருக்கும் மீன்செடிநாறும் வயிறு இரையும்.

* மருந்து - அதிமதுரம் பலம்-2, லவங்கப்பட்டை பலம்-2, சீரகம் பலம்-1, ஈருள்ளி பலம்-2, ஏலம் பலம்-1, மாதளங்காய் உரு-10, ஆவாரங் கொழுந்து குளிதாமரையிலை இவ்விரண்டும் முந்தி அரைத்து மாங்காயளவு சேர்த்துப் பிறகு எல்லாம் ஒன்றுயரைத்து நல்லெண்ணை படி-$\frac{1}{4}$, கோழிமுட்டை உரு-20, சேர்த்து இரண்டுபடி காடியிற் கலக்கி கொடுக்கவும்.

இந்தப்படிக்கு முதுகிற் சூடுபோடவும்



2-இதுவுமது

* செய்குணம் - இரத்தமாகப்பீசும்.

* மருந்து - விளாம்பிஞ்சு உரு-10 அத்திப்பட்டை பலம் - 5, மயிர்மாணிக்கம் பலம்-$\frac{1}{4}$, வட்டத் துத்தியிலை பிடி-3 உடங்கொடி அல்லது இண்டங்கொடி பிடி-3 இவைகளைபிடித்து 1-படிமோரிற் கலக்கி கொடுக்கவேண்டும் அல்லது வீழியிலை பிடி-4, கல்லத்திப்பிஞ்சு பலம்-10 இரண்டு மிடித்து 3-படி காடியிற் கொடுக்கவும்.



## * கடுவெதுப்பு நோய்

செய்குணம் - வாயில் நீர்வடியும் செவிதாழும் தீவனந்தின்றாது குன்னிகிற்கும் எருகும் அதில் இரத்தமுஞ் சலமுந் துண்டந் துண்டமாகவுஞ் சவ்வு சவ்வாகவும்விழும் அதில் துர்க்கந்த வாசனையுண்டாகும் தலையைப் பூமியிற் போட்டுக்கொண்டிருக்கும் நிற்கமாட்டாது.

மருந்து - வெந்தயம் பலம் - $\frac{1}{2}$, சீரகம் பலம் - $\frac{1}{2}$, அதிமதுரம் பலம் - $\frac{3}{4}$, இலவங்கப்பட்டை பலம்-$\frac{1}{2}$, ஈருள்ளி படி-$1\frac{1}{2}$, கொடுப்பை ஆருக்கீரை தென்னம்பூவிரி வகைக்கு அரைத்தது மாங்காயளவு, நல்லெண்ணை படி மூன்றுமாகாணி, சேர்த்து கொடுக்கவும் பிறகு அரிசிக்கூழ் காய்ச்சி மத்தியான வேளையில் பால்மாறுடல் கொடுக்கவும்,

## * சீதவெதுப்பு நோய்

செய்குணம் - சாணியுடன் ஜலங்கலந்து விழும்.

மருந்து - வசம்பு பலம்-அரிக்கால், எள்ளு படி-$\frac{1}{2}$, இடித்து கழிதும்பைச்சாறு படி-$\frac{1}{4}$ சேர்த்து கொடுக்கவேண்டும்.

## வேறு

எச்சை வாயில் இடைவிடாமற் கற்றுச் சோறுபோல் வடிந்துக் கொண்டிருக்கும் பின்ன கால் நடுங்கும்.

### நிவர்த்தி

| | | |
|---|---|---|
| முருக்கிலைச்சாறு | படி | 1 |
| காடி | படி | 3 |
| வெளிச்சிப்பட்டை | பலம் | 2 |

மேற்படி பட்டையை அரைத்து காடியில் கலக்கி புகட்டத்தீரும்.

இந்தப்படிக்கிடது
விலாவிற் சுடவும்

## * பிரளிவெதுப்பு நோய்

* செய்குணம் - சாணியுடனே இரத்தங்கலந்து விழும்.

* மருந்து - தென்னம்பூவிரியும் குளிதாமரையிலை யும் இவ்விரண்டும் மாங்காயளவு சேர்த்திடித் துக் கொடுக்கவும்.

* அல்லது - தேக்கம்பட்டைச்சாறு படி-½, தேங் காய்ப்பால் படி-½, பசுவின்மோர் படி-1, இம் மூன்றுஞ் சேர்த்து ஊரவைத்திருந்து மறுநாள் கொடுக்கலாம் அல்லது நிலவேம்பு மாங்கா



யளவு அரைத்து ஒருபடி காடியிற் கொடுக்க லாம்.

## * சீதகழிச்சல் நோய்

செய்குணம் - இரத்தமுஞ் சலமும் சாணியுடன் விழும்.

மருந்து - ஏலம் பலம்-¼, கிராம்பு பலம்-¼, அதி மதுரம் பலம்-1, இலவங்கப்பட்டை பலம்-½, பூலாத்தித்தோல் எலுமிச்சங்காயளவு மருந் துடன் சேர்த்தரைத்து எருமைப்பால் படி அரையிற் கலக்கி கொடுக்கவேண்டும்.

அல்லது-சாதிக்காய் உரு-2, சாதிபத்திரி பலம்-¼, கிராம்பு பலம்-¼, மாசிக்காய் பலம்-¼, இலவங் கப்பட்டை பலம்-½, சீரகம் பலம்-½, மிளகு பலம்-¼, வெற்றிலை பலம்-1 இவைகளை அரை த்து மாங்காயளவு வெண்ணெயுஞ் சேர்த்துக் கொடுக்கலாம் அரைபலம் மிளகு தட்டிப் போட்டு வெந்நீர்வைத்து குடிக்கவிடவும்.

## 2. இதுவுமது

செய்குணம் - இரத்தமுஞ் சகலமும் சாணியுடன் விழும் கொம்பின் அடிப்பக்கங் கொஞ்சம் வீங்கியிருக்கும் இந்த வியாதி மழைக்காலம் ஆகையாலும், பனிக்கால மாரம்பத்திலும் வேனிற் காலத்திலு முண்டாகும்.

* மருந்து - மாட்டின் தேகமுழுமையும் நன்றாய் வேதுபோடுவது உத்தமமா யிருப்பதுந் தவிர அரைக்காற்படி விளக்கெண்ணெயுஞ் சுகபேதியாகக் கொடுக்கவேண்டும் அவசியமிருந்தால் அடிக்கடி கொடுக்கலாம்.

### 3. இதுவுமது

* செய்குணம் - சதைசதையாய்ப் பீச்சிக்கழியும்.

* மருந்து-ஒருபலம் மிளகையரைத்து நல்லெண்ணெ படி-$\frac{3}{4}$, தாழைவிழுதுச்சாறு படி-1 சேர்த்துக் கலக்கி கொடுக்கவேண்டும்.

### 4 இதுவுமது

* செய்குணம்-சாணத்துடன் இரத்தம்விழும் ஜலம் விழும் சவ்வுவிழும் முக்கும்.

* மருந்து - மிளகுப் பருமனாக இருக்கிற அத்திப் பிஞ்சு படி-1, ஆவாரம்பூ பிடி-4 பூலாத்தி வேர் தோல் பிடி-4, பச்சரிசிமாவு படி-$\frac{3}{4}$, இவைகளை நன்றாயரைத்து கழுநீரிற் கலக்கி கொடுக்கவேண்டும்.

## * இரத்தக்கழிச்சல் நோய்

* செய்குணம் - இந்தவியாதி யிருந்தாற்போலிருந்து உண்டாகும் சாதாரணமாய் கதகதப்புடனே



நடுக்கக்காணும் செவி தாழும் ஆரம்பத்தில் யெருகும் பிறகு சீதமும் இரத்தமுங் கலந்து குழம்பாகத் துர்க்கந்தமாகக் கழியும் சில சமயத்தில் சவ்வுபோலவுங் கலந்திருக்கும் இரத்தமாகவும் பீச்சும் கழியும்போது மாடுகள் வெகு வருத்தப்படும் பின்பு கொஞ்சநேரம் வரையில் முக்கிக்கொண்டிருக்கும் அடிக்கடி அடிவயிற்றில் கடுநோயுண்டாகி தன் பக்கத்தை மாடு சுற்றுமுற்றும் பார்க்கும் பல்லைக் கடிக்கும் கூப்பிடும் முதுகை வளைத்துக் கொண்டு நிற்கும் மூச்சு சீக்கிரமாய்வரும் நாடி படபடத்து அடிக்கும்.

* மருந்து - மலம் இளகியிருந்தபோதிலும் பேதி மருந்து கொடுப்பது உத்தமம் அதற்கு சிற்றாமணக்கெண்ணெ படி-$\frac{1}{4}$, அபின் ரூபாயிடை-$\frac{1}{4}$ சேர்த்து கொடுக்கவேண்டும் பின்பு வேண்டியிருந்தால் மறுநாட்காலையிலும் இதைப்போலவே கொடுக்கலாம் இதுவுமல்லாமல் நாள் ஒன்றுக்கு மூன்றுதரம் அபின் ரூபாயிடை-$\frac{1}{4}$, வால்மிளகுத்தூள் ரூபாயிடை-$2\frac{3}{4}$, நெய்படி-$\frac{1}{4}$, இம்மூன்றுஞ் சேர்த்துக் கொடுக்கவேண்டும் அடிவயிற்றில் சூடான ஒத்தடம் போடவேண்டியது இளஞ்சூடாயிருக்கும்படி 6-படி வெந்நீரை பீச்சாங்குழலினால் ஆசனத்துக்குள் அடித்தால் அதிக குணமுண்டாகும் தீனி வெகு ஜாக்கிரதையாய்ப் பார்க்கவேணும் பிசைந்த தவிடும் பச்சரிக்கஞ்சியும் பசுமையான இளம்புல்லுந்தான் கொடுக்கலாம்.

* அல்லது - இந்த வியாதி கண்டவுடனே [illegible] நெய்யில் கால்ரூபாயிடை அபினைச் சேர்த்து கொடுக்கவேண்டியது பின்பு எட்டு பாதளம் பிஞ்சை இரண்டாகப் பிளந்து அதில் நாலு ஜாதிக்காயை இரண்டாகவெட்டி உள்வைத் துப் பொருத்தி முன்னாளிற்றைத்து நெருப் பில் வேகவைத்தெடுத்து அதை மோர்விட்டு அரைத்து அதில் காலேமாகாணி ரூபாயிடை அபினியுஞ் சேர்த்து ஒருபடி மோரிற் கலக்கி கொடுக்கவேண்டும் இந்தப்படி காலே மாலே கொடுப்பதுந் தவிர சமயத்துக்குத் தக்கபடி நாள் ஒன்றில் மூன்றுபொழுதுங் கொடுக்க லாம் விலாவிலும் வயிற்றிலும் வெந்நீர் ஒத் தடம் போட்டபிறகு அரிசிக்கூழ் காய்ச்சி ஆகாரங் கொடுக்கவேண்டும் குடியாவிட்டால் புகட்டவேண்டியது இந்த வியாதி ஆரம்பத் தில் பன்றிநெய் படி கால் கொடுத்து அனேக மாய்க் குணங்கண்டு இருக்கிறது

கதலி வாழைப்பழமும் பசுவின் நெய்யும் கொடுத்து அனேகமாய் குணங்கண்டிருக்கிறது.

## * கழிச்சல் நோய்

இந்த வியாதி பெருநோயின் காரணத்தால் உண்டாகாமலிருக்கிற பட்சத்தில் முதல் மழைக் குப் பாலுண்டாகிற இளம்புல்லில் மேய்கிறதினால் உண்டானது.



[illegible]து - திரேகமுழுதும் வேதுபோட வேண் டியதுந் தவிர காசுக்கட்டி ரூபாயிடை அரை யே அரிக்கால், கிராம்பு ரூபாயிடை காலே மாகாணி, மிளகு ரூபாயிடை காலேமூன்று மாகாணி மாமாகாணி, சுக்கு ரூபாயிடை காலேமாகாணி இவைகளைப் பொடிசெய்து அரைப்படி வெந்நீரிற் கலக்கி கொடுக்கவேண் டும். வியாதி அனேகமாய் குணமானதின் பின்பு காட்டுக்கொள்ளு இலை பலம்-4 அரை த்து அஞ்சுபடி எலுமிச்சம்பழச் சாற்றில் கலக்கி அன்றாடம் ஒருபடிவீதம் காலமே கொடுக்கவேண்டியது

## இராணிக்கழிச்சல் நோயின் குணம்

தீபனங் குதப்பித்தளரும்.

### நிவர்த்தி

பிரண்டைத்தண்டு ஒரு பிடி

உப்பு ஒரு பிடி

இவை யிரண்டையு மிடித்து கவளம் போடச் சொஸ்தமாகும்.

### கழிகிறமாட்டுக்கு

### வேறு

| | |
|---|---|
| வரப்பூலாவேர் | தென்னம்பாளை |
| கடப்பன்கொழுந்து | கருவேப்பிலை |
| உளுந்தமாவு | |

இவைகளை யரைத்து நாழி பசுவின்பாலிற் கரைத்து கொடுக்க குணமாகும்.

இந்தப்படிக் கிடுது விலாவிற் சுடவும்



## * தூர்ப்பல வியாதிநோய்

* செய்குணம் - தேகத்திற் கொப்பளங்களுண்டாகும் சில சந்தர்ப்பத்தில் மேற்படி கொப்புளங்கள் ஆரஞ்சிப்பழம் பிரமாணங்கூட யிருக்கும் சில விஷயத்தில் மாட்டின் தோல் மட்டுஞ் சிவந்து ரோமமுஞ் சிலிர்த்திருக்கும் பலமான மழைகளில் நனைந்தால் கழிச்சலுண்டாகும் தலையுங் காதுகளுஞ் சாய்ந்து இரையெடாமல் சோமபலாய் நிற்கும்.

* மருந்து - பத்துரூபாயிடை கரியபவளத்தை கால்படி வெந்நீரிற் கரைத்து கொடுக்கவேண்டியது. தவிர சாணியை தண்ணீரில் கொழுக்கக் கரைத்து காய்ச்சி திரேகத்தில் வேது போடவேண்டியது மறுநாள்முதல் *கியாலமல் நெல்லிடை-60, சல்பியூரெட் ஆப் அண்டிமோனி நெல்லிடை - 40, சவுக்காரம் ரூபாயிடை - $1\frac{1}{4}$, இம்மூன்றையுஞ் சேர்த்து உருண்டைசெய்து உள்ளுக்கு கொடுக்கவேண்டியது. இந்தப்படி

* கியாலமல் என்பது ஒருவித இங்கிலீஷ் மருந்து.



ஒன்றுவிட்டு மறுநாளாக இரண்டுவாரம் கொடுக்கவேண்டும் இரை கொஞ்சந் தின்கிற பட்சத்தில் பத்துரூபாயிடை வேப்பம்பட்டையை ஒருபடி தண்ணீரிற்போட்டு அரைப்படி தண்ணீராகும்படி வற்றச்செய்து அதில் 5-ரூபாயிடைய உப்பைச் சேர்த்துக் கொடுக்கவேண்டியது.

இந்த வியாதி அனேகமாய் குணமான பின்பு கொடுக்கவேண்டிய மசாலா, கஸ்தூரிமஞ்சள் பலம்-6, ஈருள்ளி படி-$1\frac{3}{4}$, உப்பு படி-3 இவைகளை யிடித்து இருபது சீதாப்பழத்தை துண்டு துண்டாக நறுக்கி கூடச்சேர்த்து ஒரு பெரிய பானையிற் போட்டு மூடி நாலுவாரம் பூமிக்குள் புதைத்திருந்து அப்பால் எடுத்து வைத்துக்கொண்டு ஏழு நாள் காலமே ஒரு கைகொண்ட மட்டும் எடுத்துக் கொடுத்துவரவும்.

* மற்றொருவகை மசாலா-சோற்றுக்கற்றாழைமடல் 4, மஞ்சள் பலம்-3, வேப்பிலை படி-$\frac{3}{4}$ இவைகளை யிடித்து உப்பு படி-$\frac{3}{4}$ கூடச்சேர்த்து நாலுபாகஞ்செய்து அன்றாடம் இரண்டுதபசு மூன்று அல்லது நாலுநாளைக்குக் கொடுக்க வேண்டியது.

இந்தப்படிக்கி மேலே சூடுபோடவும்.



## புள்ளிருந்தமாட்டின் குணம்


கால்நடை அசந்துபோகும் மாடு உட்கார்ந்தாப்போல விருக்கும்.

நிவர்த்தி

சிறுகொத்தானிலை
நாயுருவி
தழுதாழையிலை
எருதுசாணம்

இவைகளை ஒருமிக்க யிடித்து இரண்டுபடி ஜலம்விட்டுக் காய்ச்சி மேலேபடித்து பூச சொஸ்தமாகும்

இந்தப்படி
இருபுரத்திலுஞ் சுடவும்



மாட்டுவாகடம் முற்றிற்று.

தெய்வமகள் பதிப்பின்
அசுவ சாஸ்திரம்
கவனிக்கவும்.

மூலிகைகளின் பெயரை விளக்கும்
பச்சிலை வர்க்க பசுமூலிகை அகராதி
எம்மிடம் கிடைக்கும். விலை ரூபா 1.

22:ц'6
N51
10468

# தெய்வமகள்

# புஸ்தக அறிவிப்பு

இதனால் சகலமானவர்களுக்கும் தெரியப்படுத்துவது யாதெனில் :—

இப்புஸ்தகமும், தமிழ்ப் பாடசாலைக்குரிய புஸ்தகங்களும், சதகங்களும், கதை, அம்மானை, நாடகம், விலாசம், கீர்த்தனை, புராணம், ஜோதிஷம், வைத்தியம், மாந்திரீகம், இன்னும் அநேக விதமான புஸ்தகங்களும், எமது அச்சுக்கூடத்தில் சுத்தமாக பதிப்பித்து வருவதால், வேண்டியவர்கள் எமது தெய்வமகள் பதிப்பை கவனித்து, வி. பி. மூலியமாகவும் நேரிலும் விலை சகாயமாய் பெற்றுக் கொள்ளலாம்.

எமது விலாசம் :—

அ. குழந்தைவேல் முதலியார்,
தெய்வமகள் விலாசம் பிரஸ்
24, தாண்டவராயப்பிள்ளை வீதி,
சௌகார்பேட்டை போஸ்டு, சென்னை.